விபுலாநந்த இலக்கியம்

தமிழ் வளர்ச்சிக்கு ஈழநாடு பண்டு தொட்டுக் கலை வல்லுநர் பலரை அளித்து வருகிறது. இவருள் இந்தியாவோடு நெருங்கிய தொடர்பு பூண்டு கவிஞராகவும் ஆராய்ச்சியாளராகவும் ஆசிரியப் பெருமானாகவும் பல்லோரால் சிறப்புப் பெற்றவர் **முத்தமிழ் முனிவர் அருட்டிரு விபுலாநந்த அடிகளார்.** அடிகளுடைய வரலாறு இந்தப் புத்தகத்துள் இணைந்துள்ளது.

விபுலாநந்த இலக்கியத்தைப் பல பகுதிகளாக வகுத்து வெளியிட அன்னாரின் மாணவர் **அருள் செல்வநாயகம்** எடுத்துக் கொண்டுள்ள ஆர்வமும் ஊக்கமும் போற்றத்தக்கன. விபுலாநந்த ஆராய்வு என்னும் இந்தப் புத்தகம் விபுலாநந்த இலக்கிய வரிசையில் நான்காவதாகும்.

விபுலாநந்த இலக்கியம்: தொகுதி-3

விபுலாநந்த ஆராய்வு

தொகுப்பாசிரியர்:

அருள் செல்வநாயகம்

மதிப்புரை:

இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி

திரு. க. செ. நடராசா, பி. ஏ. (ஆனர்ஸ்)

(Diploma in Tamil)

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: ஜூலை, 1963.
மறுபதிப்பு: ஜனவரி, 1964.
மறுபதிப்பு, மார்ச், 1965

விலை 5-00

Copyright by Arul Selvanayakam

அச்சிட்டோர்:

எம். எஸ். ஜே. பிரஸ் (பி) லிட்.

மயிலாப்பூர், சென்னை-4.

பொருளடக்கம்

		பக்கம்
	முன்னுரை ..	1
	மதிப்புரை ..	3
	அடிகளாரின் வாழ்க்கை வரலாறு ..	5
1.	பொருனூற் சிறப்பு ..	20
2.	அன்பினைந்திணையுரை ..	28
3.	மேற்றிசைச் செல்வம் ..	34
4.	நாகரிக வரலாறு ..	43
5.	எகிப்திய நாகரிகம் ..	55
6.	யவனபுரத்துக் கலைச் செல்வம் ..	64
7.	மேற்றிசைச் செல்வம் ..	72
8.	உலக புராணம் ..	84
9.	மதுரை இயற்றமிழ்மகாநாட்டுத் தலைமைப் பேருரை ..	98
10.	திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி ..	115
11.	தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப் பெருக்கு வடநாட்டில் பரவிய வரன்முறை	121

முன்னுரை

தமிழ் மொழியை வளம்பெற வளர்த்தது தமிழகம். பரந்துபட்ட தமிழகத்தின் பாற்படுவதே ஈழநாடு. கடலாற் சூழப்பெற்ற ஈழநாட்டிலே வாழும் தமிழ் மக்கள் தமிழ்மொழி வளர்ப்பில் என்றுமே பின் னின்றதில்லை. பல அறிஞர்களைப் பெற்றுப் பெருமை கண்டது ஈழநாடு. பல கவிஞர்களைத் தன்னகத்தே கொண்டு தமிழின் வளர்ச்சிக்காக உழைத்தது ஈழநாடு. பல கலை வல்லுநர்களை ஆக்கித் தமிழுக்காகத் தொண்டு செய்தது ஈழநாடு. இந்த வகையிலே கவிஞராகவும் ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்து தமிழ்மொழிக்கு அளப் பரிய தொண்டு செய்த பெருமை, முத்தமிழ் முனிவரான அருட்டிரு விபுலாநந்த அடிகளாருக்கே உரியதாகும்;

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற முதுரைக்கு இலக்கானவர் அடிகளார். பணி செய்ய வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டமையி ஞற்ருன் இல்லறவாழ்வை வெறுத்துத் துறவறப் பெரு வாழ்வை மேற்கொண்டு, தூயவாழ்க்கை வாழ்ந்து, தமிழ் அன்னைக்கு அளவிடற்கரிய பணிகள் ஆற்றினர். இதன் பேருகத் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் அடி களார் சிரஞ்சீவியான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார்.

தமிழ்ப்புலமையாளர், தமிழ் அறிஞர், தமிழ்ச் செல்வர், முத்தமிழ்ப்புலவர், அறிவுக்கொடைப் பெரு வள்ளல் என்னும் பெயர்களுக்கெல்லாம் சிறப்பளித்த அடிகளார் நம்மை விட்டு மறைந்துவிட்டார். காலத்தின் விளைவினுல், இயற்கையின் நியதியினுல் அடிகளார் இறை வனுடன் இரண்டறக் கலந்துவிட்டார்.

அடிகளார் மறைந்தாலும் அவர் நமக்கு விட்டுச் சென்ற எழுத்துச் செல்வங்கள் அவரை நினைவு கூரத் தக்கனவாக இருக்கின்றன. இருந்தாலும் அடிகளாரின் எழுத்துச் செலவங்கள் பல இதழ்களில் சிதறிக்கிடக் கின்றன. இவ்வாறு இருப்பின் அவை எங்ஙனம் நம்ம வர்க்குப் பயன்பட முடியும்? இக்குறைவினை நிறைவு

செய்யும் பொருட்டு விபுலாநந்த இலக்கியத்தைத் தோற்றுவிக்க முனைந்தோம்.

விபுலாநந்த இலக்கியத்தைத் தட்டி எழுப்பத் தமிழகத்திலுள்ள பல அறிஞர்களுடன் தொடர்பு கொண்டோம். அதன் பயனாகத்தான் விபுலாநந்த இலக்கிய வரிசையில் நான்காம் தொகுதியாக விபுலானந்த ஆராய்வு என்னும் நூலைக் கொண்டுவர முடிந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் இதழான செந்தமிழ் என்னும் இதழில் அடிகளார் 1922-ஆம் ஆண்டு முதலாகப் பல கட்டுரைகள், கவிதைகள் எழுதி வந்தார். செந்தமிழில் அடிகளார் எழுதிய அத்தனை எழுத்துச் செல்வங்களையும் தொகுத்தெடுத்து, முதன்மையான பல ஆராய்வுக்கட்டுரைகளை ஓர் இலக்கினுக்கமையக் கோவைப்படுத்திய இரு தொகுதிகளுள் விபுலாநந்த ஆராய்வு என்னும் இந்நூல் ஒன்றாகும்.

செந்தமிழ் இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளைக் கையாள்வதற்காக நீண்டகாலமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரிடம் அனுமதி கோரினோம். அவர்களும் மனமுவந்து அனுமதி வழங்கினார்கள்.

இந்நூலாக்கப் பணியினுக்குப் பல வகையிலும் ஆலோசனை கூறிய 'செந்தமிழ்' ஆசிரியரான திரு நா. அப்பணையங்கார் அவர்களுக்கும் உரிமை வழங்கிய மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தலைவர் திரு பி. டி. இராசன் அவர்களுக்கும் மதிப்புரை தந்துதவிய இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி திரு க. செ. நடராசா அவர்களுககும் எம் உளமார்ந்த நன்றியறிதலை உரிமையாக்குகிறோம்.

தமிழர்கள் அனைவருக்கும் தமிழ் பேசும் பிறருக்கும் இளம் உள்ளங்கொண்ட மாணவர்களுக்கும் பயன்படத் தக்கதாக விபுலாநநத ஆராய்வு என்னும் நூலினைக் கோவை செய்துளளோம். ஒப்பில்லாத ஆராய்வுகளைக் கொண்ட இநதத் தொகுப்பாகிய கலைக்களஞ்சியத்தை உங்கள் அன்புக் கைகளில் இன்புடன் அர்ப்பணிக்கிறோம்.

குருமணவெளி,
மட்டக்களப்பு.

அருள் செல்வநாயகம்.

மதிப்புரை

ஈழநாட்டின் அணையாத அறிவுச் சுடர் அருட்டிரு விபுலாநந்த அடிகளார். தமக்கென வாழாப் பெருந்தகையாளர். வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணிக்கே தம்மை அர்ப்பணம் செய்த பெருந்தகையாளர் அவர்.

ஈழத்தின் ஞானவிளக்கான அடிகளாரின் பெருமை ஈழநாட்டுடன் நின்றுவிடவில்லை; தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. யாழ்நூலாம் பெருநூலால் இறவாப் புகழ்பெற்ற அடிகளாரைத் தமிழகம் என்றுமே மறவாது.

அடிகளாரின் எழுத்துக்களுக்கு எவ்விதமான மதிப்புரையும் வேண்டியதில்லை. எனினும் அடிகளாரின் மாணவன் எனற காரணத்தால், 'ஆசைபற்றி அறையலுற்றேன்.'

தமிழரின் பழம் பெருமைகளைப் பற்றி அடிகளார் ஆராய்ந்தார்; பிறநாட்டு மாந்தரின் நாகரிகத்தினை ஆராய்ந்தார்; அன்னவர்களின் நாகரிகத்துடன் தமிழகத்து நாகரிகத்தினை ஒப்பு நோக்கித் தமிழரின் தலையாய தனிப்பெருமைகளை நிலைநாட்டினுர். இந்த வகையிலே எத்தனையோ ஆராய்வுக் கட்டுரைகளையெல்லாம் பல்வேறு இதழ்களில் அவ்வப்போது எழுதி வந்தார்; அங்கொன்றும் இங்கொன்றுமாக மலர்ந்துகிடக்கும் அடிகளாரின் ஆராய்வுகளை யெல்லாம் கோவைப்படுத்திஞல், தன்னேரில்லாத ஓர் ஆராய்வு நூலைத் தமிழ்மொழி பெறும் என்பதற்கு ஐயமில்லை.

முத்தமிழ் வித்தகரான அடிகளாரின் ஆராய்வுகளில் குற்றம் இராது; குறை இராது. ஆமாம். பல மொழிகளிலும் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற அடிகளாரின் ஆராய்வுகளுக்குத் தனியொரு மதிப்பு எங்கும் என்றும் எப்பொழுதும் உண்டு.

தமிழ்க் கொடைப் பெருவள்ளலான அடிகளார் மறைந்து ஆண்டுகள் பல ஓடிவிட்டன. இந்த இடைக் காலத்திலே அடிகளாரின் ஞாபகார்த்தமாக, அவரது

எழுத்துச் செல்வங்களைக் கோவை செய்து தமிழ் அணங்கினுக்கு ஆரம் சூட்டப்போவதாகப் பலர் பறையறைந்தனர். ஆண்டுகள் சென்றன. ஆனால் செயலில்தான் ஆகவில்லை.

இயற்கை எழில் ததும்பிடும் குருமண்வெளியிலிருந்து ஓர் உறுதிக் குரல் எழுந்தது. உற்றுக்கேட்டேன். நண்பர் அருள் செல்வநாயகம்தான் குரல் கொடுத்தார். மறைந்த அடிகளாரைத் தமிழகமும் ஈழமும் என்றும் மறவாவண்ணம் பணியாற்றவென்று முன்வந்தார். அதன் பயனாக இன்று விபுலாநந்த இலக்கியம் மலர்ந்துவிட்டது.

தமது பேனா முனையில் மக்களின் மனத்தாமரையில் தமக்கென்று ஓர் இடம் தேடிக்கொண்ட எழுத்தாளரான அருள் செல்வநாயகம் விபுலாநந்த இலக்கியத்தை மலர்ச்சியடையச் செய்ததனால் சிரஞ்சீவியான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டார்.

விபுலாநந்த இலக்கியம் அருள் செல்வநாயகத்தின் ஈடு இணையற்ற முயற்சியினால் பல தொகுதிகளாக மலர்ந்துள்ளது. இன்னமும் மலரப்போகிறது.

விபுலாநந்த ஆராய்வு என்னும் இந்நூலில் தொகுக்கப்பெற்ற கட்டுரைகள் ஒப்பற்ற ஆய்வுகளாகும். தமிழ் முனிவரான அடிகளார், காலத்துக்குக் காலம் ஆராய்ந்தெழுதிய கட்டுரைகளையெல்லாம், மிகவும் சிரமத்துடன் தேடியெடுத்து ஒருமுகப்படுத்தியதனால் அருள் செல்வநாயகம், அடிகளாரைத் தமிழகம் என்றும் மறவா வண்ணம் செய்துவிட்டாரெனலாம்.

பல ஆண்டுகளுக்குமுன் 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழில் தொடர்ச்சியாகவும் தனியாகவும் இடையிடையேயும் அடிகளார் எழுதிய சில கட்டுரைகளே விபுலாநந்த ஆராய்வாக மலர்ந்துள்ளன.

தமிழ்மொழி தலையாய இலக்கியச் செல்வமொன்றைப் பெற்றுவிட்டது. அதனைப் படித்துப் பயன் பெறுவதே, தமிழுக்குழைத்த அடிகளாருக்குத் தமிழ் மக்கள் செய்யத்தக்க கடனாகும்.

நாவற்குழியூர்,
யாழப்பாணம்.

க. செ. நடராசா.

அடிகளாரின் வாழ்க்கை வரலாறு

சுற்றிவரக் கடலாற் சூழப்பெற்ற ஈழநாடு முன்னொரில் தமிழர்களின் தாயகமாகத் துலங்கியது. காலவேறுபாட்டினால், ஈழவள நாட்டினுக்கே சொந்தமான தமிழர்கள் வடக்கையும் கிழககையும் தங்களது தாயகமாகக் கொண்டார்கள். ஆதலினால் இனறு வடக்கு இலங்கையும் கிழக்கு இலங்கையும் தமிழ் வழங்கும் மாவட்டங்கள் ஆயின.

கிழக்கு மாவட்டத்தின் தலைநகரம் மட்டக்களப்பாகும். மட்டக்களப்பிலிருந்து தென்திக்கிலே இருபத்துநான்கு கல் தொலைவினுக்கப்பால கல்முனை என்ற சிறு நகரம் இருக்கிறது. இங்கிருந்து தெற்குத்திக்கு நோக்கி மூன்று கல் தொலைவில் காரைத் தீவு எனனும் ஊர் இருக்கிறது.

கிழக்கே வங்காள விரிகுடாக கடலும் தெற்கே பசுமை செறிந்த வயல்வெளிகளும் வடக்கே சாய்ந்த மருதூரும் மேற்கே புன்செய் நிலங்களும் எல்லையாகக் காரைத்தீவினை அழகுபடுத்துகின்றன.

இயற்கை எழில் ததும்பிடும் காரைத்தீவினை மக்கள் காரேறுமூதூர் என்றும் வழங்குவார்கள்.

காரைத்தீவின் பழங்குடி வேளாள மரபில் வந்த சாமித்தம்பியார்கும், கண்ணகி வழிபாட்டில் சிறந்து விளங்கிய கண்ணம்மையார்க்கும் சுபநாளொன்றில் இராச கோபாலபிள்ளை அவாகள் திருமணம் செய்து வைத்தார்.

கணவனும் மனைவியுமாகிய சாமித்தம்பியாரும் கண்ணம்மையாரும் வள்ளுவர் வகுத்த நெறிக்கு அமைய

இல்வாழ்க்கை நடததியமையால, கண்ணம்மையார் தூய்மைப் பேற்றினை யடைந்தார். அதனைச் சொல்லக் கேட்ட சாமித்தம்பியார் குதூகல முற்றார்.

பத்துத்திங்கள் பண்பாக ஓடிய பின்னர், கர ஆண்டு பங்குனித் திங்கள் 16-ஆம் நாள் (27-3-1892) வைகறைப் பொழுதில் கண்ணம்மையார் அறிவிற் சிறந்து விளங்கப்போகும் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார்.

குழந்தையைத் தூக்கி உச்சிமோந்த சாமித்தம்பி யார் மயில்வாகனன் என்னும் அழகிய பெயரை அதற்கு வழங்கி மகிழ்ந்தார்.

பாலன் மயில்வாகனனார் வளர்ந்து பள்ளிப்பருவத்தை யடைந்தார். ஆகவே, தந்தையார் திரு நல்லரத்தினம் அவர்களிடம் காட்டிச் சென்று வித்தியாரம்பம் செய்து வைத்தாா. அத்துடன் திரு குஞ்சித்தம்பி ஆசிரியா அவர்களிடமும் கல்வி கற்கச் செய்தார்.

மயில்வாகனனார் திரு குஞ்சித்தம்பி ஆசிரியரிடம் கல்விகற்றதுடன் நிற்காது, தந்தையாரிடமும் திரு. வசந்தராசபிள்ளை அவர்களிடமும் பாடங் கேட்டுப் படித்து வந்தார்.

காரைத்தீவுச் சைவப் பாடசாலையின் தலைமை யாசிரியராகவும் விநாயகர் கோயில் அாச்சகராகவும் பணியாறறிவந்த வைத்தியலிங்க தேசிகர் அவர்களிடம் நன்னூல், சூடாமணி நிகண்டு முதலியவற்றையும் வட மொழியையும் இனிது கற்றார்.

மயில்வாகனனார் பத்துவயது வரையும் தமிழ்ப்பாட சாலையில் தமிழ் கற்றதுடன், வீட்டிலே ஆங்கிலமொழி யையும் கற்றுவரலானார். பிறகு தந்தையார் மயில வாகனனரைக கல்முனை மெதொடிஸ்த மிஷன பாடசாலை யில ஆங்கிலம் கற்கும் பொருட்டு 1903-ஆம் ஆண்டிற் சேர்த்தார்.

மயில்வாகனனுர் நான்காண்டுகள் வரை கல் முனையில் கல்வி கற்ருர். மேற்கொண்டு தொடர்ந்து கல்வி கற்க அங்கு வகுப்புகள் இல்லாமையினுல் மட்டக் களப்பிலுள்ள அர்ச் மிக்கேல் கல்லூரியில சோந்து கற்கலானுர்.

மயில்வாகனனுரின் கல்வித்திறமையைக் கண்ணுற்ற ஆசிரியர்கள் அவரை மிகவும் பாராட்டினுாகள். ஆதலினுல் அவர் ஆசிரியர்களது தனி அன்புககு உரிய வரானுர். அதன் பெரும் பேருக ஓய்வு வேளைகளில் ஆசிரியர்களிடம் சென்று தெரியாதவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

மயில்வாகனனுர் தமது பதினுருவது வயதில் 'கேம் பிரிட்ச்' பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பட்ட தேர்விலே முதனமையாகத் தேறினுா. ஆதலினுல் படித்த கல்லூரியிலேயே ஆசிரியராக நியமனம் பெற்ருா.

இரண்டு வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டுவந்த காலையிற்ருன், மயில்வாகனனுரின் நிறை யன்பினுக்கு உரியவரான தாயார் இறைவன் அடியினை அடைநதார்.

ஆகவே, மயில்வாகனனுர் 1911-ஆம் ஆண்டு ஆசிரியர் பதவியினைத் துறந்து அன்னையாரின் இறுதிக கடனகளைக் கழிககக காரைத் தீவினுக்கு வந்தாா. பிறகு கல்முனைக் கததோலிகக மிஷன் பாடசாலையில் சோந்து ஆசிரியராகப் பணியாற்றினுா.

ஆசிரியராகப் பணியாற்றி வந்த மயில்வாகனனுர், பயிற்சிபெற்ற ஓர் ஆசிரியராக வர விரும்பினுா. ஆகவே, ஆங்கில ஆசிரியர் கலாசாலை உட்புகு தோவினுககாகப் படித்து வெற்றியும் பெற்ருா. அதன பயனுக இரண் டாண்டுகள் ஆசிரியர் பயிற்சி பெறும்பொருட்டுக் கொழும்பு மாநகரம் வந்தடைந்தார்.

மயில்வாகனனூர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றதுடன் நில்லாது கொழும்பில் வாழ்ந்துவந்த தமிழ் அறிஞர்களிடம் தமிழும் கற்றுவரலானூர். அந்த வகையிலே, பண்டிதர் கந்தையா, வித்துவான் சி. தாமோதரம் பிள்ளை, வித்துவான் கைலாயப்பிள்ளை ஆகியவாகளிடம் சங்க இலககியங்களை முறையாகப் பயின்ருர்.

1912-ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியினை முடித்துக்கொண்டு வெளியேறிய மயில்வாகனனூரை, அர்ச் மிக்கேல் கல்லூரி அதிபா ஆசிரியராக அமர்த்தினூர்.

இரண்டு ஆண்டுகள் அர்ச் மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய மயில்வாகனனூர் 1915-ஆம் ஆண்டு பொறியியற் கல்லூரியில் சேர்ந்து மேற்கல்வி கறகலானூர்.

தமெக்கென வாழாது பிறருக்காகவே உழைக்கும் பரந்த மனப்பான்மை கொண்ட மயில்வாகனனூர் சிறந்த போதனு முறைகளைக் கையாண்டு ஆய்வுக கூடத்தில் பரிசோதனைகள் நடத்திப் போதித்தமையால் மாணவர் களது நல்லபிமானத்தைப் பெற்ருர. ஆதலினூல் மயில் வாகனனூரது புகழ் ஈழ நாடெங்கும் பரவலாயிற்று.

அதன் பயனுக 1917-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து அர்ச் சம்பத் கிரீசியார் கல்லூரியின் தலைவர் வேண்டிக கொண்டமைக்கு இணங்க அக்கல்லூரியின் விஞ்ஞான பீடத்தை அழகு செய்தார்.

இக்காலையிற்ருன் ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தைச் சேர்ந்த சர்வாநந்தர் இலஙகைக்கு வந்தார். அன்னூருடன் கலந்து உரையாடும் வாய்ப்பு மயில்வாகனனூருக்குக் கிடைத்தது. அதன் பயனுகத் துறவறத்தைப் பற்றி எண்ணலானூா. தம் எண்ணத்தினை நிறைவு செய்வதற் காகத் தம்மையே ஆயத்தம் செய்யலானூர்.

மாணவர்களுக்குப் புதுப் பாடங்களைப் போதிப்பது டன் புதிய புதிய நூல்களையும் தாம் கற்கலானூர்.

இரண்டு ஆண்டுகளாக மாணவர்களை வளர்த்த துடன் தம்மையும் புதிய தேர்வினுள் புகுவதற்குத் தயார் செய்துகொண்டார். பிறா துணையின்றித் தாமாகவே படித்து இலண்டன் பல்கலைக் கழகம் நடத்திய பி.எஸ்.ஸி. (B.sc) தேர்வில் தேறினார்.

மயில்வாகனனாரின் இருமொழிப் புலமையை அறிந்த மாணிப்பாய் இந்துக கல்லூரியின் நிர்வாகத்தினர் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் பதவியினை ஏற்கும்படி வேண்டினார்கள். அதற்கியைந்த மயில்வாகனனார் 1920 ஆம் ஆண்டு இந்துக கல்லூரியின் தலைமைப் பதவியினை மேற்கொண்டார்.

இந்துக் கல்லூரியில் மயில்வாகனனார் ஆய்வுக் கூடம் ஒன்றினை நிறுவி விஞ்ஞானக் கல்வியினைப் போதித்தார்.

இலங்கையில் தமிழ் மொழியை வளர்க்கவோ தமிழ் மொழியைப் போற்றிப் புகழவோ சிறந்த சாதனங்கள் இல்லாமையைக் கண்ட மயில்வாகனனார் மொழியை வளர்க்கும்பொருட்டு ஒரு கழகம் நிறுவ முயன்றா. பல அறிஞாகளின துணைகொண்டு தமது தனி முயற்சியின் பயனாக, 'யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தைக்' கட்டி எழுப்பினார்.

மயில்வாகனனார் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க வாயிலாக, பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் என்ற முத்தரங் கொண்ட மூன்று தேர்வுகளை ஏற்படுத்தினார். மேற்படி தேர்வுகள் இனிது நடைபெறு வதற்காக மயில்வாகனனார் தேர்வு முதல்வராகவும் முதன்மையான உறுப்பினராகவும் விளங்கினார். அன்று மயில்வாகனனார் தொடங்கிவைத்த சங்கம் இன்றுவரை எத்தனையோ பண்டிதமணிகளை ஈழநாட்டினுக்கு அளித்து விட்டது. இனியும் அளித்துக்கொண்டே வரும்.

உலக வரலாற்றிலேயே 1914-ஆம் ஆண்டு பயங்கரமான ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுதான முதலாவது உலகப் பெரும்போர். பணிசெய்வதையே குறிக்கோளாகக் கொண்ட மயில்வாகனனுர் போர்வீரராகி நாட்டினுக்கு இரத்ததானஞ் செய்ய முன்வந்தார்.

மயில்வாகனனுர் முன்வந்த காலையிலே, உலகத்தையே அதிரச்செய்த பெரும்போர் ஓா முடிவினுக்கு வந்தது. ஆதலினுல் மயில்வாகனனுரின் போர்ப்பணி தேவையற்றதாக முடிந்தது.

நாட்டினுக்குச் சேவைசெய்ய வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும், நாட்டு மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் பணி செய்ய மயில்வாகனனுர் விரும்பினுர். ஆகவே 1922-ஆம் ஆண்டு துறவியராகித் தூய்மையான வாழ்வைக கடைப்பிடித்துப் பணி செய்யும் பொருட்டுச் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்ருர்.

மயில்வாகனனுர் மடாலயத்திற் சேர்ந்து துறவியராவதற்குரிய நியமங்களைக் கைக்கொள்ளலானுர். அவருக்கு மடாலயத்தார் பிரபோத சைதன்யர் என்னும் பிரமசரியப் பெயரை வழங்கினர்.

இக்காலையில் மடாலய வாயிலாக வெளிவரும் திங்கள் இதழ்களான ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் என்னும் தமிழ்ச் சஞ்சிகைக்கும் வேதாந்த கேசரி என்னும் ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகப் பணிபுரியலானுர். 1924-ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் பூரண முழு மதியன்று சுவாமி சிவாநந்தா அவர்கள் பிரபோத சைதன்யருககு ஞான உபதேசம் செய்து துறவறப் பெயரான சுவாமி விபுலாநந்தா என்பதை வழங்கினுர்.

சுவாமி விபுலாநந்தாவாக அடிகளார் வெளியுலகை நோக்கியபோது திருப்பாதிரிப்புலியூரின் ஞானியார் மடாலயத்தார் ஆண்டு நிறைவு விழாவின தலைமையினைத்

தாங்கும்படி வேண்டினார்கள். அடிகளாரும் அதற்கியைந்து மாநாட்டினுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

அடிகளார் துறவியாகத் தம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்த காலையிற்றான் பல நூல்களையெல்லாம் நன்றாகக கற்கத் தருணம் கிடைத்தது.

சித்தாந்த நூல்களுடன் காவியங்களையும் படித்தார். ஆங்கிலக் கவிதைகளையும் படித்து இனபுற்றா. இந் நுகர்ச்சியினைத் தாமே வைத்துககொள்ளாமல் தமிழக அன்பர்களுக்கும் வழங்க முன்வந்தார். அதன் பயனாகத் தான் 'ஆங்கில வாணி', 'பூஞ்சோலை காவலன்' என்னும் இலக்கிய இன்ப ஓவியங்கள் வெளிவந்தன.

ஆங்கிலப் பெரும்புலவரான செகப்பிரியரின் நாடகங்களை அடிகளார் விரும்பிப் படித்தார். அத்தகைய ஓர் சூழ்நிலையைத் தமிழ் மொழியிலும் ஏற்படுத்துவதற்கு எண்ணங் கொண்டார். 1924–ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழாவிற் கலந்துகொள்ளவும் நாடகத் தமிழ் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றவும் அடிகளார்க்கு வாய்ப்புக கிடைத்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளரான திரு டி.சி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் அடிகளாரின விரிவுரையினை ஓர் சிறந்த நூலாக்கித் தரும்படி கோரினா. அதற்கியைந்த அடிகளார் செகப்பிரியரின் நாடகங்களையும தனஞ்சயரின் தசரூபத்தையும் மூலக் கருவாகக் கொண்டு, சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூன் முடிவுகளை ஓரளவுக்கு விளக்கிக் காட்டுவதற்கு ஏற்றதாக மதங்க சூளாமணி என்னும் நூலினை எழுதினார்.

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் கேட்டுக் கொண்டமைக்கு இணங்கக் கிடைத்த மதங்க சூளாமணியினைச் செந்தமிழ் இதழில் வெளியிட்ட பின்னா நூலாகவும் தொகுத்துப் பிரசுரித்தா.

பண்டிதர் மயில்வாகனனாராகத் தமிழகம் சென்றவர் 1925-ஆம் ஆண்டு சுவாமி விபுலாநந்தராக ஈழம் திரும்பினார். ஆதலினால் ஈழத்து மககள் எத்தனையோ இடங்களில் வரவேற்பு வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள். இந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மகாநாட்டினுக்கு அடிகளார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார.

ஈழநாடு மீண்ட அடிகளாருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தார் கிழக்கு இலங்கையிலுள்ள தம் பாடசாலைகளைப் பராமரிக்கும் முகாமையாளர் பதவியினைக கொடுத்தார்கள். அடிகளார் முகாமையாளர் மதவியினைக் கையேற்றுப் பல பாடசாலைகளை நிறுவியதுடன், சைவநெறி தழைத்தோங்கவும் வழி செய்தார்.

அடிகளார் தமது பிறப்பிடமான காரைத்தீவில் பெண்களுக்கென ஒரு பாடசாலையை நிறுவி, 'சாரதா வித்தியாலயம்' எனப் பெயா கொடுத்தார. மட்டக்களப்பினுக்கு அணித்தாயுள்ள கல்லடி உப்போடை என்னும் ஊரில் ஓர் ஆங்கிலக்கல்லூரியினை நிறுவிச் சிவானந்த வித்தியாலயம் எனப் பெயர் கொடுத்தார். தம் குருநாதரை என்றென்றும் நினைவுத் திரையில் வைத்திருக்கும் பொருட்டே அன்னவரது பெயரினை வித்தியாலயத்தினுககு வழங்கினார். சிவாநந்த விததியாலயத்தைச் சிறந்த முறையில வளாக்கும்பொருட்டுத் தலைமை ஆசிரியர் பதவியினையும் தாமே மேற்கொண்டார்.

அடிகளார் திரிகோணமலையில் திகழ்ந்த சைவப் பாடசாலையைப் பெருகச் செய்ததுடன் கல்லூரியாகவும் மாற்றி அமைத்தார். திரிகோணமலை இந்துக் கல்லூரியினை வளாக்கும் பொருட்டு அதிபர் பதவியினையும் தாமே கைக்கொண்டார்.

1925-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தாா மகா மகோபாத்தியாய சாமிநாதையர் அவர்களுககுப் பொற்கிழி அளிக்கும்பொருட்டு ஓர் விழாவினை நடத்தி

ஞர். இவ்விழாவில் ஈழநாட்டு வித்துவான்களின் பிரதி நிதியாக அடிகளார் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றினர்.

1926-ஆம் ஆண்டு வேலூரிலே நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலய மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக அடிகளார் கலந்துகொண்டு சொற் பொழிவாறறினர்.

இலங்கை அரசாங்கம் கிழக்கு இலங்கையின் கல்வி நிலையினை ஆராய்ந்து அறிககை தயாரிக்கும்படி ஓர் குழுவினை நிறுவினர் இக்குழுவின் தலைமைப் பதவி அடிகளாருக்குக கொடுககப்பட்டது.

1927-ஆம் ஆண்டு சிதம்பரத்திலே ஒரு பல்கலைக் கழகம் நிறுவும்பொருட்டு இராமநாதபுரத்து அரசர் தலைமையில் ஓா விசாரணைக் குழு ஏற்படுத்தப்பட்டது. இககுழுவின் முன்னாப் பல்கலைக்கழகம் அவசியம் நிறுவப் படவேண்டுமென்று சான்று பகரும்படி அடிகளாரைச் சென்னைப் பல்கலைககழகததார் வேண்டினர் அதற் கியைந்த அடிகளார், 'சிதம்பரத்திலே ஓர் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும்' என்று விசாரணைக் குழுவில் முதன் முதலாகச் சான்று பகன்றனர்.

1927-ஆம் ஆண்டு அடிகளார் ஆண்டிச் சைவ மகா சபையின ஆண்டு விழாவினுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். இககாலையில் மகாத்மா காந்தி யடிகள் இலங்கைககு எழுந்தருள மாணவர் மாநாட்டுத் தலைவர் என்ற வகையில் அடிகளார் மகாத்மா காந்தியை வரவேற்ருர்.

சிதம்பரத்திலே பல்கலைக்கழகம் அவசியமாக வேண்டுமெனறு விசாரணைக் குழு சிபாரிசு செய்த மையினுல், உடனடியாகப் பல்கலைக்கழகமும் நிறுவப் பட்டது. பல்கலைக்கழகத்தின் தமிழ்ப பேராசிரியர் பதவியினை ஏற்கும்பொருட்டு அடிகளாரை, அண்ணுமலை

செட்டியார் வேண்டினர். ஆகவே அடிகளாரும் பேராசிரி யர் பதவியினை ஏற்றுக்கொண்டார்.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய அடிகளார் ஓய்வான வேளைகளில பழந்தமிழர்கள் கையாண்ட யாழ்களைப்பற்றி ஆராயலானா. மறைந்தொழிநத யாழ் களைத் திரும்பவும் மீட்டுககொடுக்க வேண்டுமென்று உறுதி பூண்டாா. இப்பணியினைப் பூரணமாகக உத்தி யோகம் இடையூருக இருந்தது. ஆகவே அடிகளார் யாழ் ஆராய்ச்சியில் இறஙகுவதற்காக 1933-ஆம் ஆண்டு பேராசிரியர் பதவியினைத் துறந்தார்.

அடிகளார் முத்தமிழில் திறமையடைந்து ஆங்கில மொழியில பட்டம்பெற்று வடமொழியில் பாண்டித்திய மடைநததுடன் நில்லாது, இலததீன், யவனம், வங்கம், சிங்களம், பாலி, அரபு ஆகிய மொழிகளிலும் திறமை பெற்றிருந்தார். ஆதலினுல மொழிபெயர்த்தல் என்பது அடிகளாருக்கு ஒரு பொழுதுபோககாகவே இருந்தது.

ஆங்கிலவாணி, பூஞ்சோலை காவலன் என்னும் கட்டுரைகள அடிகளாரின திறமைககுச் சிறநத எடுத்துக் காட்டுகள் ஆகும்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியாருக்கு அளித்த மணி மலரை அணிசெய்யும் பொருட்டு எழுதிய ஆங்கில வாணி என்னும் கட்டுரை, அடிகளாரின ஆங்கிலப் புலமைக்கும் தமிழ்ப் புலமைக்கும் பெருமையான மேற்கோளாகும்.

விவேகானந்த ஞானதீபம், கர்மயோகம், ஞான யோகம், நம்மவா நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணைகள் ஆகிய நூல்களைச் சென்னை ஸ்ரீ ராம கிருஷ்ண மடாலய வாயிலாக அடிகளார் மொழி பெயர்த்துளளார்.

1933-ஆம் ஆண்டு அடிகளார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளினுக்கு இணங்கிக் கரந்தைத்

தமிழ்ச் சங்கத்து ஆண்டு விழாவினுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

1935-ஆம் ஆண்டு அடிகளார் சைவசித்தாந்த மகா சமாசத்தாரின வேண்டுகோளுக்கு இணங்கித் திருவண்ணமலையில் நடைபெற்ற மகாசமாசத்தின் மகா நாட்டினுககுத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

1936-ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க மகாநாட்டினுககு அடிகளார் தலைமை தாங்கியதுடன், கலைச் சொறகளை ஆக்குவதிலும் ஈடுபட்டார்.

1937-ஆம் ஆண்டு அடிகளார் கைலாயம் வரை சென்றதுடன் தீபெத நாட்டினுக்கும் விஜயம் செய்தார்.

1939-ஆம் ஆண்டு அடிகளார் கல்முனையில் நடைபெற்ற ஆசிரியர் விடுமுறைக கழகததினுக்குத் தலைமை தாங்கியதுடன், இலககியச் சாாபான நீண்ட தோா அறிவுரையும் நிகழ்த்தினர்.

செனனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் தேர்வாள ராக அடிகளார் திகழ்ந்ததுடன் பற்பல இடங்களுக்கும் சென்று சமயத் தொண்டுகளும் செய்து வநதார்.

இக்காலையில் இமயமலைச் சாரலிலுள்ள மாயாவதி ஆச்சிரமத்திலிருந்து வெளிவந்த 'பிரபுத்த பாரதா' என்னும் ஆங்கிலத் திங்கள் இதழினுககு ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதனல் 1939-ஆம் ஆண்டு இமாலயத்துககுச் சென்றார்.

இமாலயத்தில் அடிகளார் வாழ்ந்த காலையிற்றான் யாழ் சம்பந்தமான ஆராய்ச்சியில் பூரணமாக ஈடுபட்டாா. இவ்வாராய்ச்சியின் பயனக அடிகளார் பல்வேறு இடங்களுக்கும் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே அவர் இதழ் ஆசிரியர் பணியினைத் துறந்து தமிழகம்

மீண்டார். தமிழகத்தில் பல இடங்களுக்கும் அடிகளார் சென்று யாழ் சம்பந்தமான தகவல்களைச் சேகரித்தார்.

அடிகளார் தமிழகம் மீண்டதைக் கண்ட ஈழத்து அன்பர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பதவியினை ஏற்கும்படி வேண்டினார்கள். பிறந்தநாட்டின் நலத்தின் பொருட்டு அடிகளார் பேராசிரியர் பதவியினை மேற்கொண்டார்.

பேராசிரியர் பதவியுடன் கல்விப் பகுதிப் பாடநூற் சபை, தேர்வுச் சபை, கல்வி ஆராய்ச்சி சபை ஆகியவற்றின் பெருமைக்குரிய உறுப்பினராகவும் திகழ்ந்தார்.

இலங்கை அரசாங்கம் இலங்கைப் பாடசாலைக்கான ஓர் திட்டத்தை வகுத்தபோது, அடிகளார் சங்கீத பாடத்துக்கான திட்டத்தை ஒவ்வொரு வகுப்பினுக்கும் வடித்துக கொடுத்தார்.

பாடசாலைகளில் சைவ சமயமும் படிப்பிக்கப்பட வேண்டுமென்ற நியதி ஏற்பட்டபோது சமயத்தினுக்கான ஓர் பாடத்திட்டத்தையும் அடிகளார் வகுத்துக கொடுத்தார். இலங்கை ஆட்சியாளரின் தேர்வுகளில் அடிகளார் ஓர் தேர்வாளராக இருந்து பணியாற்றினார்.

அடிகளார் பத்தாண்டுகளாக ஆராய்ந்து கண்டுணர்ந்த இசை நூலான யாழ்நூலினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆதரவில் திருக்கொள்ளம்பூதூர்த் திருக் கோயிலில் சர்வசித்து ஆண்டு ஆவணித் திங்கள் 20-ஆம்,21-ஆம் நாள் (20-21-6-47) அரங்கேற்றினார்.

முதலாம் நாள் விழாவில் திருக்கோயில் வரிசைகளுடன் இயற்றமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள் சூழ்ந்துவர அடிகளாரைத் தெற்குக கோபுர வாயிலாகத் திருக்கோயிலுககு அழைத்துவந்தார்கள். அழைப்பு ஊர்வலத்தில், மறைந்தொழிந்த யாழ்களை அடிகளாரின் கணக்குப்படி தயாரித்த முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணைகளைத் தாங்கிச் சிலர் சென்றார்கள்.

நாச்சியார் முன்னிலையில் அடிகளார் இயற்றிய நாச்சியார் நான்மணிமாலை வித்துவான் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களாற் படிக்கப்பட்டு நிறைவேறியது. பின்னர் எல்லோரும் அரங்கேற்று மண்டபத்தினுக்குச் சென்றார்கள்.

தேவார இன்னிசைப் பண்களோடு தொடங்கிய அரங்கேற்று விழாவில் கோனூர்ச் சமீந்தாரும் திருக்கொள்ளம் பூதூர்த் திருப்பணிச் செல்வரும் கரந்தைத் தமிழ்ச் சஙகததுப் புலவருமான திருவாளர் பெ. ராம. ராமசித. சிதம்பரம் செட்டியார் அவாகள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்ததினார். பின்னர் அடிகளாா யாழ்நூலினுககு விளக்கம் கொடுத்தாா. அடுத்துக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து அமைச்சரான திரு. கநதசாமி அவர்கள் அடிகளாா ஆராயநதளித்த யாழ்களின சிறப்புகளைப் பற்றிப் பேசினாா. பினனா திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை ஆகியவர்கள் அடிகளாரைப் பாராட்டி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

சங்கீத பூஷணம் திரு. க. பொ. சிவானந்தம் பிள்ளை அவர்கள் அடிகளாா கண்டுணர்ந்த யாழ்களை மீட்டி இன்னிசை பொழிய, முதலாம் நாள் விழா நிறைவெய்தியது.

இரண்டாம் நாள் விழாவில் நாவலர் சோமசுந்தரப் பாரதியாா, குமரன் ஆசிரியர் சொ. முருகப்பா, தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரம் பிளளை, சென்னைப் பல்கலைக்கழக இசைப்பேராசிரியர் சாம்பமூர்த்தி ஐயர் ஆகியவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள். பின்னர் அடிகளாா யாழ்பற்றிய பல உண்மைகளை எடுத்துக் கூறினாா. அடுத்து வீணை வித்தகர் சிவானந்தம் பிள்ளை அவர்கள் யாழ் நூலிற் கண்ட கணக்குப்படி அமைத்த சுருதி வீணையில் ஏழ்பெரும்பாலைகளைக் கிரகசுவரம் மாற்றி இசைத்து அவையினோரை ஆனந்தப்படுத்தினார்.

இறுதியாக வித்துவான் வெள்ளைவாரணனார் யாழ் நூலின் பெருமைபற்றிப் பேச, யாழ் நூல் அரங்கேற்றப் பட்டது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்து அமைச்சர் திரு. கந்தசாமி அவர்கள் நன்றியுரை கூற, யாழ் நூல் அரங் கேற்றுவிழா இனிது முடிவுற்றது.

யாழ் நூல் அரங்கேற்று விழாவில் கலந்துகொள்ளப் புறப்படும் முன்னரே, அடிகளாரின் உடல் சோர்வுற்றிருந் தது. அதனைப் பொருட்படுத்தாது பயணம் செய்து மீண்ட அடிகளாரை நோய் பற்றிக்கொண்டது. ஆகவே அவர் கொழும்பு மருத்துவ விடுதியொன்றில் சிகிச்சை பெறலானார்.

அடிகளாரைப் பரிசோதித்த வைத்தியர் பூரண ஓய்வும் அமைதியான சூழ்நிலையும் வேண்டுமெனக் கூறி னார். ஆகவே ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தார் வைத்தியர் கூறிய சூழ்நிலையை ஏற்படுத்தியும் பயன் தராமல் 1947-ஆம் ஆண்டு ஆடித் திங்கள் 19-ஆம் நாள் (19-7-1947) சனிக்கிழமை இரவு அடிகளார் இறைவ னுடன் இரண்டறக் கலந்தார். அறிஞர்கள் அழுது புலம்பி னார்கள். தமிழ்த்தாய் கண்ணீர் வடித்தாள், தமிழகம் ஒப்பற்ற முத்தமிழ் முனிவரை இழந்தது.

அடிகளாரின் ஊன் உடம்பு, வெள்ளவத்தை ஸ்ரீ ராம கிருஷ்ண மடாலயத்தில் அன்பர்களின் இறுதி வணக்கத் திற்காக வைக்கப்பட்டது. மறுநாள் ஊன் உடல், பிறந்த பொன்னுடான மட்டக்களப்பினுக்குப் புகைவண்டி வழி யாக எடுத்துச் செல்லப்பட்டது.

திங்கட்கிழமை காலைப் பொழுது மட்டக்களப்புப் புகைவண்டி நிலையம் மக்கள் கூட்டமாகவே காட்சி அளித்தது. கிழக்கு இலங்கையின் தவப் புதல்வரைக் காண, அவரது உயிரற்ற உடலைக் கண்டு தொழ வந்த மக்கள் கூட்டம் எண்ணிலடங்கா திருந்தது.

அடிகளாரின் ஊனுடம்பு வைக்கப்பட்ட பேழையைப் புகைவண்டி நிலேயத்திலிருந்து சிவானந்த வித்தியாலயத் துக்கு ஊாவலமாக எடுத்துச் சென்றார்கள்.

சிவானந்த வித்தியாலயத்தில் மககளின் இறுதி வணக்கத்தினுக்கு அடிகளாரின ஊனுடம்பு வைககப் பட்டு, மீண்டும் ஊர்வலமாக எடுத்துச்செலலப்பட்டது.

இறுதியாகச் சிவானந்த வித்தியாலயத்தின் மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையிலே அடிகளாரின் திரு வுடல் அடககம் செய்யப்பட்டது.

அடிகளார் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையின் மேலே சமாதியொன்று எழுப்பப்பட்டது. அதிலே அடி களார் யாத்த,

''வெள்ளைநிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர்எதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனுர் வேண்டுவது''

என்னும் கவிதை பொறிக்கப்பட்டுள்ளது.

விபுலாநந்த அடிகளாருக்கு வ்ணக்கம் செலுத்தச் செல்பவர்கள் அவரது சமாதியிலே எழுதப்பட் டிருக்கும் கவிதையினைப் படித்துக் கண்ணீர் சிந்தவே சிந்துவார்கள்.

விபுலாநந்த அடிகளார் மறைந்துவிட்டார். அவரது ஊன் உடம்பு அழிந்துவிட்டது. ஆனுல் அடிகளாரது புகழ் உடம்பு தமிழ் உள்ளவரையும் நின்றுலவவே உலவும்.

விபுலாநந்த இலக்கியம் மலர்ந்துவிட்டது. விபுலாநந்த அடிகளாரது பெயரும் சிரஞ்சீவி யாகியே விட்டது.

[யாத்து

''இசையிடை நுணுகி யாய்ந்து இசைபெறு யாழ்நூல்
இசைத்தமி ழாசா னுகி இன்கலைக் கழகந் தன்னில்
இசைவளர் விபுலா நந்தர் இம்பரி னீங்கி வானின்
இசைபொழி அமர ராகி என்றென்றும் வாழ்கின் றுரே!

என்று அடிகளாரை நாமும் தினமும் வாழ்த்துவோமாக.

1. பொருணூற் சிறப்பு*

ஒருமொழியா லுலகனைத்து முருப்படுமென்
றருஞ்சுருதி யுரைத்த வாற்றால்
வருமறையா கமக்கலையாய்ப் பொருட்டுணிவா
யாவுமாய் வயங்கா நின்ற
திருமொழியைச் சித்தியுத்தி திகழ்மொழியை
யனவரதஞ் சிந்தித் தேத்தும்
பெருமொழியைக் குருமொழியைப் பிறைமுடித்தோன்
பெறுமொழியைப் பேணி வாழ்வாம்.

அருந்தமிழ்ப் பொருணூற்சிறப்பி லொருசிலவற்றை யாராய்ந்தறியப புகுந்தனம்.

''ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலக மவற்று
ளறனு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே''

என்பது பன்னிருபடலம். 'மூன்றுவகை நுதலிய துலகம்' என்றதனால் அறிஞர் வீட்டினைத் தனிநதுக் கூறார்; ஏனைய பொருட்பகுதிகளோடு சார்த்தி அவற்றது மிகுதியாகவும் நீக்கமாகவும் கூறுவரென்பது பெறப்பட்டது. என்னை? சிற்றின்பம், பேரினபமெனவும்; இல்லறம் துறவறம் எனவும்; இம்மைப்பொருள், மறுமைப்பொருள் எனவுங் கூறிஞராகலின. இவற்றது விரிவைப் பின்னர்க் காட்டுதும். 'அறனுமின்பமு மகலாதாகி' என்பதனால் புறத்திணை அனைத்துப் பொருளையுங் கூறுமென்பதும் நடுவண் நின்ற பொருளையே பெருகக் கூறுமென்பதும் பெறப்படுவனவாம்.

''இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்போடு புணர்ந்த வைந்திணை''

---

* *இது யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத் தார் முன்னிலையிற படிக்கப்பட்டது.*

என்பது தொல்காப்பியம். 'அன்பொடு புணர்ந்த வைந்திணை' என்றதனுல் எஞ்சிய இருதிணையுள் கைக் கிளைத்திணை ஒரு தலையாய அன்பினை யுரைப்பது என்றும் பெருந்திணை பொருந்தாவன்பின் புறத்ததாய்ப் பொருந்த நின்ற அறனும் பொருளும் துறக்கமும் கூறுவது என்றும் அறியலாகும். இங்ஙனம் அகமும் புறமும் ஒற்றுமைப்பட்ட பொருளவாயின் இணைச்சொற்களால வேற்றுமையுறக் கூறிய தென்னையோ வெனின, இணைச்சொற்களால் கூறப்படும் பொருள்கள் ஒற்றுமையும் வேற்றுமையு முடையவாயிருத்தலன்றே சாலபு; ஈண்டு உணரப்படும் பொருளை நோகக அகமும் புறமும் ஒன்றும்தன்மைய. உணர்வோனுகிய தலைமகனை நோகக வேருந்தன்மைய. அகம் என்பது இல்லம். பார்ப்பனமகளிர் தங் கணவரை அகத்துக்காரர் எனறு சொலலும் வழக்கு இன்றுமுளது. இல்லககிழத்தியினது சார்பின்றை றலைமகன் அறமுத ஞன்கினையும் பெறும் ஒழுக்கத்தை அகததிணையெனவும், மாற்றரசரும் பிறருஞ் சார்பாக நாற்பொருளையும் பெறும் ஒழுக்கத்தைப் புறத்திணையெனவும் வைத்துத் தமிழ்மொழி மாந்தர் புலனெறி வழக்கஞ் செய்தாரெனக. இங்ஙனம் பொருள்கொள்ளுமிடதது, 'அகத்திணை', 'புறத்திணை' என்பவற்றை 'Life at home', 'Life Aboard' எனப் பெயர்த்தெழுதலாகும். கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும அறியும் இன்பமனைத்தும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவவாதலால் வீரபபோரின்பமும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவது; அநுபவித்தார்க் கன்றிப் பிறர்க்குப் புலனுகாதது; அங்ஙனமாதலின் அகம் என்பதற்கு உளளம எனப் பொருள்கொள்ளின் வீரப் போரின்பத்தையும் அகத்திணையெனக் கொளல்வேண் டுமே; ஆதலால் அகம் எனபதற்கு இல்லம் எனப் பொருள் கொண்டதே பொருத்தமாமெனக. அஃதன்றியும், ஒண் டொடி மகளிர்பாற் பெறும் இன்பமாத்திரமே இன்பமெனச் சாதித்தலும் பொருந்தாது; புயவலி படைத்த அடலரி யேறனையானுக்குப் போர்க்களத்துப் பெறும் இன்பம்

சொன்மடங்கு மென்மொழி மாதர்பாற் பெறு மின்பத்தினும் பனமடங் கதிகமாதலின். அருந்தமிழ்க கவியைப் படிக்கும்போது கவிஞர் கருத்தொடு நங்கருத்து ஒன்றுபட அநுபவிக்கு மின்பமும், 'கருதமொப்ப ஆதரவுபட்ட வின்பமே' யாகும்.

இனி நுண்மதித் தமிழ்மாந்தர் வீட்டியல் கூறிய மரபினை யாராய்வாம். சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய வீடு இலக்கண வகையாற கூறுந்தரத்த தன்று. வீடுகூறிய ஏனையமொழி மாந்தரும் அதனைக் காரணவகையாலும் எடுத்துக்காட்டு வகையாலுங் கூறி ஞரே யன்றிச் சொல்லுககடங்காப் பேரின்பத்தைச் சொல் லுக் கடக்க முயன்றுரல்லர். காரணவகையாற் கூறுமிடத் துப் பெருந்திணையானுங் காஞ்சித்திணையானுங் கூறப் படும். பின அநுபவ வகையாற் கூறுமிடத்து அகத்திணை அன்புமார்க்கமாகும்; புறத்திணை அறிவுமார்க்கமாகும். இவற்றை வட நூலார் முறையே பகதியோகம், ஞான யோகம் என்பர். அருளுங குரவனுங் கூட்டிவைககக் கண்ட காட்சியும் கலந்தவகையுங் கம்பலேயுங் கண்ணீரும் பிரிவாற்ருமையும் நீடுநினைநதிரங்கலும் அகனைந்திணைக்கே யுரியவாம். ஐம்புலக்களவர் ஆவினைத தந்தோம்ப அவரை யடாத்தெதிதது அஞ்சுதகச்சென்று அரணத்தை வளைத்து வெறறியுந் துதியும் பெறுவது புறத்திணை யொழுககமாம். 'வேல்கெழு தடககைச சால்பெருஞ் செல்வ'ஞகிய தமிழ்ப்பெருங்குரவன் மறவொழுக்கத்தால் மாயைமககள் மூவரையுங் கடிந்து அனபின்மேன தாகிய அறவொழுககததால் வள்ளிநாயகியாரை மணந்து புறத்திணை அகத்திணை யொழுக்கங்களை உலகிற்கு நன் குணாத்திய வரலாற்று விரிவைத தமிழ்மொழிக கந்த புராணத்தினுந் தணிகைப்புராணத்தினுங் காணலாகும்.

இனித் திணைவகையை யாராய்வாம். அந்தணரரு மறை நூல் மன்றலெட்டு எனக் கூறிற்று. தமிழ ரரு மறையாகிய அனபினைந்திணை கந்தருவவழக்கத்தை யைந்

தாகக கூறிற்று. இருமொழி மரபையும் இயைய வைத்து, நோக்குங்கால், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், அசுரம், இராககதம், பேய் எனப் பன்னிரண்டாம். இவற்றுட் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பெருந்திணை. ஈற்றினின்ற மூன்றுங கைககிளைத் திணை;—'பாங்கனிமித்தம் பன்னிரண்டென்ப, முன்னைய மூன்றுங் கைக் கிளைக் குறிபபே; பின்னர் நான்கும் பெருந் திணை பெறுமே' என்னும் பொருளதிகாரச் சூததிரப் பொருளை நோக்குக. ஆகவே மணறலெட்டு, நிமித்தம் பன்னிரண்டு என்ற வகை யாவும் திணை ஏழு என அடங்குவ. பெருந்திணை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், கைக்கிளை யென்னும் அகம் ஏழினுககும் முறையே காஞ்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை, பாடாண் என்பன புறனும; குறுகு, பகு, முகிழ், நை, மறு(த்), காய், கர(த்), நொ, வெகுள், வகு, வனபு, துன்பு, உரிஞ் என்னும் வினையடிகளோடு தல், அல், அம, ஐ, சி என்னுந் தொழிறபெயர் விகுதிகளுள், ஏற்புடையன கூடிப் பிறந்த தொழிற்பெயர்களாமோ குறுஞ்சி, பாலை, முலலை, நெய்தல், மருதம், கரந்தை, நொச்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை, என்னும் திணைப்பெயர்கள் என்னும் முடிபு ஆராய்தற்குரியது.—அஃதெங்ஙனமாயினும் பாலையும் பாலைப்புறனாகிய வாகையும் 'பகு' 'வகு' என்னும் அடிகளினின்று பிறந்தனவாமென்றல் பொருத்தமுடைத்து. ஆசிரியன் பாலைககு நிலம் வகுத்தானல்லன்; அஃதொழிந்த நான்கனுக்குமே படுதிரை வையத்தைப் பகுத்துக கொடுத்தனன்; பாலை ஏனைய நானகனுளளுஞ் செறிந்து நிற்குமியல்பினதாதலின். இனி உயிரும் உடலும், மணமும் மலரும் போல ஒருமித்திருநதா ரிருவரை அறமும் பொருளுங காரணமாகப் பகுதது நிறுத்து மியல்பினது பாலைத்திணை. பாலைப்புறனாகிய வாகையினியல்பை நோக்குங்காற் பிறபொத்து ஒன்றித்திருந்த மககட் கூட்டத்தினரைச் செய்தொழில் வேற்றுமைச் சிறப்புநோக்கி

அந்தணர் என்றும் அரசரென்றும் ஏனேரென்றும் அறிவரென்றும் தாபதரென்றும் பொருநரென்றும் வகுத்து நிறுத்தியது வாகைத்திணை. பாலையும் வாகையும் பெருககக்கூறும் பொருட்பகுதிகள் அறமும் பொருளுமே யாம்; காஞ்சியும் பெருந்திணையும் துறககங் கூறுஞ் சிறப் புடைய எனவும்; கைக்கிளையும் பாடாணும் ஒருதலையாய அன்பின்பால எனவும் முன்னர்க் கூறினும். எஞ்சிய அகனைங்கும் சிறப்புடை யின்பப் பொருள; எடுத்துக காட்டு வகையால் வீட்டியல் கூறுவ. அங்ஙனமே எஞ்சிய புறனைங்கும் வீரப்போரின்பப்பொருள, எடுத்துக காட்டு வகையால் வீட்டியல் கூறுவ.

மன மொழி மெய்களா லறியவொண்ணுப் பேரின்பப் பொருளை யாண்டும் வெளிப்படையாகக் கூறுவது இயலாத தொன்ருகலின ஆசிரியர் குறிப்பாக வுணர்த்தியது மரபா யிற்று சொற்ருெடர் கருவியாகவறிவது பொருள். சொல் பொருளை யுணர்த்தும்வழி வெளிப்படையாகவும் குறிப்பாகவு முணாத்தும். அங்ஙனம் உணர்த்தும் பொரு ளும் பல்வேறு வகைப்பட்ட மாந்தரது மனநிலைக் கேற்பத் திரிவுபட்டு நிற்கும். அவரவர் கொண்ட பொருளே அவர வர்கசு மெய்ப்பொருளாகும். உதாரணமாக இன்பமென் னுஞ் சொற் கேட்டவிடத்துக கட்குடியன் கள்ளுண்டு களியாடும் இன்பத்தை நினைவு கூருகிருன்; அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். பரிச வினபத்தின்பாலதாகிய இணைவிழைச்சினது பொய்யியல்பை யுணராதான் அவ் விணைவிழைச்சையே இன்பமென வெண்ணுகிருன்; அவ னுக்கு அதுவே மெய்ப்பொருள். கண்ணுககினிய காட்சி யையும் செவிககினிய இசையினையும் மூக்குக்கினிய நறு நாற்றததினையும் இன்பமென எண்ணுவோர்கசு அவையே மெய்ப்பொருள; போர்ககளத்துச் சென்று பகைவரை யெறிந்தும் அவர் எறிந்த வேலை மாாபகததுத் தாங்கியும் புறங்காட்டாது நிற்பதே இன்பமெனக்கொண்ட வீரனுக்கு அதுவே மெய்ப்பொருள். இல்லத்திருந்து குலமகளோடு கூடிக் கண்டும் கேட்டும் உண்டும் உடுத்தும் உற்றும்

உயிர்த்தும் அநுபவிப்பதே இன்பமெனக் கொண்டோனுக்கு அதுவே மெய்ப் பொருள். இனிப் பெண் என்பது 'எற்புச் சட்டம், முடைகுரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து' என்று இவ்வாறு நினைத்து உலகைத் துறந்து கற்பகக்கா நீழலில் அரமகளிர் அடிவருட வீற்றிருப்பேனென நினைந்து தவஞ்செய்வானுக்கு அதுவே மெய்ப்பொருள். இறைவனது பொன்னடி நீழலை யடைந்து அழியாவின்பத்தைப் பெறுவேனென்று நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். அதுவும் வேண்டேன் இன்னுயிர்க்குயிராகிய இறைவனுக்குப் பணிசெய்தலை மேற்கொள்வேனென நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். இங்ஙனே மாறுபட்ட பலவும் இன்பம் என்னும் ஒரு மொழிக்கே பொருளாயினவா றுணர்க. 'தானே யவள், அவளே தான்' என்னுந் தொடர்மொழி செவிப்படலும் இலக்கண வித்துவான் அது தலைமகளுந் தலைமகனும் பொருவிறந்தாரென்பதை யுணர்த்திற்று என்பான். வேத நூல் வல்ல அந்தணன் முற்பட்டு, 'அன்று அன்று; இச் சொற்றொடர், 'அது நீ ஆனாய்' என்னும் மகாவாக்கியப் பொருளைக் குறிப்பினால் உணர்த்துவது' என்பான். சைவ நூல்வல்லான் முன்னிருவர் பொருளையும் மறுத்துப் பொருவிறந்தாராவார் இறைவனும் இறைவியும். இம்மொழி அவரது நித்தியமாகிய அபேதத் தன்மையை உணர்த்திற்று என்பான். தார்க்கிகன் இவ ரனைவரையும் மறுத்து, தான் எழுவாய் அவள் முடிபு; பின்னும் அவள் எழுவாய்; தான் முடிவு ஆதலால் இத் தொடர்மொழி இதரேதரம் என்பான். உலோகாயதன் புன்னகை புரிந்து, 'ஐயன்மீர், இல்லதும் இனியதும் புனைந்துரையன்மின். மரனும் வல்லியும்போலும், எள்ளும் அரிசியும் போலும், பாலும் நீரும்போலும் கலந்திருக்கும் நிலைமையைக் கூறிற்று இச் சொற்றொடர்' என்பான்; இங்ஙனம் ஐந்திணைத்துறை யனைத்தினுக்கும் பொருள்கொள்ளுதல் கூடுமாதலினாலன்றே, வாதவூரடிகளது ஐந்திணைக் கோவையை நோக்கி,

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தெனப
ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என ஆன்றோர் வியந்து கூறினர்.

பலதிறப்பட்ட மொழியினும் பரந்துபட்ட நூல் பலவும் அறம் பொரு ளின்பம் வீடென நாற்பாலுள் அடங்குவன. இவை தொகை விரியாகத் தமிழ் மொழியகத்துச் செறிந்து நிற்பன. தமிழ் மொழிக்கு நூலாவன சங்கச் சானறோர தொகுத்த நூல்களேயாம்; ஏனைய நூல்கள் இவற்றின வேறுபட்டவல்லவாகலான்:—இராமன் கதை, சீவகனகதை, நளன்கதை என நிற்பனவற்றுள் இராமன், சீவகன், நளன எனவரு மிடங்களில் 'தலைவன்' எனக் குறி யீடுசெய்தும் ஒழிந்தவற்றையும ஏற்ற பெற்றி தலைவி, பாங்கன, பாஙகி, அடியோா, வினைவலர் என இவ்வாறு கொண்டும் நோக்குங்கால், பிறகாலத்து நூற்பொருள் முன்னோா நூல் பொருளின் வேறுபடாதுநிற்பது புலப்படும். இனிச் சஙகத்தமிழ் நூலனைத்துந் தொல்காப்பியத்தினு ளடங்குவன. தொல்காப்பியத்து எழுத்துஞ் சொல்லும் பொருளினு ளடங்குவன. பொருள்கூறும் ஒன்பது இயலும் அகத்திணையியல, புறத்திணையியல எனனும் இரண்டனு ளடங்குவன. புறம் அகத்தினு ளடக்கம். அகத்திணை பெருமானடிகள் அருளிச் செய்த 'அன்பினைந்திணை'யினு ளடக்கம்; 'அன்பினைந்திணை' அன்பினு ளடககம்; அன்பு அகவுயிரினு ளடககமென மேலோா கூறுவா. இனித் தோற்றப் பொருளனைத்தும் முதல் கரு உரியென அடஙகு வன. கருப்பொருளும உரிப்பொருளும் நிலம், பொழுது என்னும் முதற் பொருளினு ளடங்குவன. இவை ஆதி பகவனுகிய முதலினை யுடையன; 'அகர முதல வெழுத் தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு' என்னும் பொய்யா மொழிக்குப் பொருள்கொள்ளுமிடத்து 'எழுதது என்பது முதல்சார்பாகிய முப்பத்து மூன்றெழுத்தினையும் அவ்

வெழுத்துக்களின் கூட்டத்தினுற் பிறந்த சொற்களேயும் சொற்ருெடர் கருவியாகிய பொருட் பகுதி யனேத்தினேயுங் குறிக்கும். ஆகவே 'எழுத்தெல்லாம்' என்பது 'சொற் பிரபஞ்சம்.' உலகு என்பது நிலம் பொழுது என்னும் முதற் பொருள்களா லாயது. நிலம் என்பது நிலத்துககுக காரணமாகிய நீரையும், நீருக்குக் காரணமாகிய தீயையும், தீக்குக் காரணமான வளியையும், வளிக்குக் காரணமான வானேயுங் கருதும். 'நிலந் தீ நீர் வளி விசும்போடைந்துங் கலந்த மயகக முலகம், ஆதலின் 'உலகு' எனபது 'பொருட் பிரபஞ்சம்.' சொல்லும் பொருளும் பேதாபேத மாய் நிற்பன. சொன் முதலாகிய அகவுயிர்போலப் பொருண்முதலாகிய இறைவன் தானேயாய் நிற்பதனேடு யாண்டும் வியாபித்து யாவறறினும் செறிந்து நிற்பானென வுணர்த்தும் பொருண்மையது செந்நாப்போதா ருரைத்த உத்தரவேத முதற்செய்யுள்.

இங்ஙனம் ஆராயுங்கால் ஒல்காப் பெருந்தவத் தொல்காப்பியஞருரைத்த பொருணூலும், திருவள்ளுவப் பயனும் பொது நூலாயப் பொருணனகினேயும் உணர்த்து பவாய் இம்மை மறுமைப் பயனே ஒருங்கு தந்து நிற்பன எனபது புலப்படும். பெருமானடிகள், 'எனனே பாவம்; அரசர்க்குக் கவற்சிபெரிதாயிற்று; அதுவும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனேத் தீாககறபாலம்' என அருள் சுரந்து அளித்த 'அன்பினேந்திணே'யும், வாதவூரடிக ளருளிச்செய்த ஐந்திணைக்கோவையும் சிறப்பு நூலாய் அருமறைமொழியாய் வீட்டியலே விளக்கி நிலவுவன. இநத நான்கு நூலும் 'தமிழா் நான்மறை'யென ஆனறேராற் போறறப்படுவன. பொன்னும் மணியும் பொருளெனக் கருதா நுண்பதித் தமிழ் மாநதராற் பொருளெனககாககப் படுவன விவையே. தமிழ் முதுகுடிப் பிறந்த திருவுடைப் பெருமக்க ளனேவரும் இவற்றைப் போற்றிப் படித்து இம்மை மறுமைப்பயனேப் பெறுவார்களாக.

2. அன்பினைந்திணையுரை

இறைவனுரைத்த இந்நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. ஒன்று கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த புறக்கருத்துரை. மற்றொன்று குமரநாயகருரைத்த அகக்கருத்துரை. நக்கீரனாருரையைக் கற்றுணர்ந்தோர் மண்ணகத்துப் புலவராற போற்றப்படுவாரெனின், குமரநாயகனுரையின் உண்மையை யுணர்ந்தோர் மண்ணகத்துப் புலவரும் வானகத்துப் புலவரும் போற்றத் தேவரினும் மிககோரா யந்தமிலினபத் தழிவில் வீட்டைப் பெறுவாரென்பது கூறுமலே யமைகின்றது. மேலாகிய வீடு பேறே அகபபொரு ணூலுககுப் பயனாக அமைந்தது. அஃதன்றி வாளா ஒருவனுககும் ஒருத்திககும் இடையே நிகழ்ந்த அனபின் பெருககத்தைக கூறுவதற்கு அண்டராலும் வேதங்களாலும் அளவிடற்கரிய பரம்பொருளாகிய எம்மிறைவன் ஒரு நூல செய்தளிததா னென்பது ஒருவாற்ருலும் பொருந்தாத தாகும். தமிழ் மொழி யறிஞர் பலர் நககீரனாருரைத்த புறககருத்துரையில் ஈடுபட்டு மறுமைப் பயனை யிழககுந்தகைய ராயினார். இது எற்றினாயிற்றென்ருல், குமரநாயகனுரைத்த குறிப்புரையின் திறத்தை யுணராமையினான் ஆயிற்று. இவ்வுண்மை யுரையின நனமை யிதுவெனவும், இதனைக் கற்பதற்கு அதிகாரியாவார் இவா எனவும் எமது சிற்றறிவுக்கு எட்டிய அளவு எடுத்துககாட்டுதற் கெண்ணினாம். முதற்கண் உரை வெளியிடப்பட்ட அவைக களத்தி னியல்பைக் கூறி அப்பாற் செல்வாம்.

நான்மாடக்கூடலாகிய மதுரைத் திருநகரிலே, சரஸ்வதிதேவியின் அம்சமாகிய நாற்பத்தொன்பதின்மர் தமிழ்ப்புலவர், கன்மாப்பலகை யேறியிருந்து தமிழாராய்ச்சி செய்துகொண் டிருந்த காலத்தி லொருநாள்

அழகே யோருரு வெடுத்தாலனைய ஐந்துவயதுப் பாலக ஞொருவன், புலவ ரவைக்களத்து வந்து நின்ருன்; வெள்ளை வஸ்திரந் தரித்து, வெண்ணிற மலர் மாலை சூடிய மாசற்ற தோற்றமும், பால்மண மாருச் சிவந்த வாயும், அன்ற லர்ந்த தாமரைபோன்ற திருமுகமும் குறுநகையும் விளங்க நின்ற அச் செல்வச் சிறுவனைக் கண்ட மாத்திரத்தே, புலவர் அனைவரும் இருக்கைவிட் டெழுந்து சிரத்திற் குவித்த கரத்தினராகிப் பலவாருய மங்கல நன்மொழி களால் வாழ்த்துரை கூறி அவ்விளஞ் சிறுவனை ஆசனத் திருத்தித் தாங் கீழிருந்து அவனது திருமுகமண்டலத்தின் பொலிவைப் பார்த்த வண்ணமாக விருந்தனர்.

கபிலர் என்னும் பெரும்புலவர் அச் சிறுவனைப் பார்த்து, 'உப்பூரிகுடிகிழார் இழைத்த அருந்தவத்தின் பெரும்பேறே! சிறியோமாகிய யாங்கள் பொருளிலக்கணம் கிடைக்கப்பெருமையாற் கவலுறறேமாக, ஆலவாயி லவிர் சடைக் கடவுள் எம்முறு துயர்ககிரங்கி, அறுபது சூத்தி ரங்களாலாய ஒரு நூலை யருளிச் செய்தனன். அந்நூற்குப் பொருள் வரையறை செய்து உண்மை யுணர்த்தவல்ல ஒரு காருணிகனைத் தருமாறு அக் கடவுளையே வேண்டி நின்றேம்; இளமைச் செவ்வி வாய்ந்த தேவரீரைப் பெற் றேம்; பொருள் வரையறுத்து உண்மை யுணர்த்தியருள வேண்டு'மென்று இரந்து வேண்டினர். உருத்திரசர்மன் என்னும் அக்குழவிப்பருவத்து அறிஞன் குளிர்ச்சி பொருந் திய தனது பசிய கண்ணிணுற் கபிலரைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாதிருந்தனன். புலவருட் சிலர் தாந்தாங் கொண்ட உரையினை விரித்துச் சொல்லி முடித்தபின்னர், கணக்காயஞர் மகஞர் நக்கீரஞர் எழுந்து தாங் கண்ட உரையினை எடுத்து மொழிந்தார். அவ்வுரையைக் கேட்ட மையிஞலோ பிறிதெக்காரணத்திஞலோ சிறுவன் பதந் தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பப் புலவரனைவரும் ஆர்ப்பரித்து, 'மெய்யுரை பெற்ரும் இந்நூற் கெ'ன்ருர். அன்றுமுதல் இறையஞரகப்பொருள் எனனும் அருஞூலுக்கு நக்கீரஞருரையே உரையாக வழங்கி

வருகின்றது. நூல் அருணூல்; ஆதலினாலே, அதற்கு நக்கீரனு ருரைதந் மொழிவயிற் கிடந்த பொருளுரையை விட, மொழித திறத்தா லுரைக்கவொண்ணாத ஓர அருளுரையும் இருத்தல வேண்டுமென ஆராய்தல் ஒருதலை. என்னை ? அருமறை மொழியுரைத்த முடிபும் பொருணூன் முடிபும் ஒனறே யாதலினாலும். ஆரண நூலும் அனபினைந் திணையுங் காரணங்கடந்த கடவுள் வாககாதலினாலும் ஐந்திணையுரைக்கும் அனபின் றிறம் உள்ளத்துணர்வா லநுபவிப்பதேயன்றி இனன வாறிருந்ததெனப் பிறாககுச் சொல்லுந்தரதத தனறுகலானும், நக்கீரனுருரைத்த உரை சொற்பொருளாக விருக்கு மியல்பினதே யன்றி அநுபவப் பொரு ளாகாதென்பது அனைவாக்கு மொப்ப முடிந்த முடிபேயாம். அன்பினைந்திணைககு இலக்கியமாய் நின்ற ஐந்திணைக் கோவையினது உண்மைப் பொருளே அன்பினைந்திணைக்கு முண்மைப்பொரு ளாதல்வேண்டுமெனத் துணிந்து கோடல் மரபேயாம்.

பிற்றைநாளில், மணிவாசகப் பெருமான் ஐந்திணைக் கோர்வையை முற்றுவிக்க, அதனைத் திருச்சிறறம்பலமுடையார் தமது அருமைத் திருக்கரத்தினால் எழுதித்தர, அங்ஙனம் எழுந்த நூலைப் பஞ்சாக்கரத திருப்படியிற் கண்ட பெரியோர் வாதவூரடிகளை நோக்கி, 'ஐய' இந்நூற்குப் பொருள் கூறியருள்க வென வினவினர். அங்ஙனம் வினாவினாககு, அடிகள் மௌனமாக நின்று, தம்மொரு கரதததுச் சுட்டு விரலினால் மணி மன்று ணடிக்கும் இறைவனைச் சுட்டிக்காட்டிப் பரவெளியோ டொருமைப் பட்டனரெனப் புராணங் கூறுகின்றது. இங்ஙனம் ஐந்திணைக்குப் பொருள்கூறிய ஆற்றினை நோக்கும்போது பெரியதோர் ஞான முடிபு புலப்படுகின்றது. சொல்லினாற் சொல்லும் உண்மையுமுளது, சொல்லாமற் சொல்லும் உண்மையுமுளது. கல்லாலின் புடையமர்ந்து எம்மிறைவன் நால்வர் முனிவருக்கு மேலாகிய உண்மைப் பொருளினைச் சொல்லாமற் சொலலினான். மணிமன்றுண் முன்னின்ற மணிவாசக அடிகள் தமது அருணூற் பொருளினைச் சொல்லா

மற் சொல்லியருளினர். இப்பரிசே ஐந்து வயது மூங்கைப் பிள்ளையின் உருவோடு தோற்றிய குமரநாயகனுகிய உருததிரசருமரும் இறைவனளித்த அருணூலின பொருளேச் சொல்லாமற் சொல்லியருளினர்.

அன்பின் வயத்திலீடுபட்டுக் கண்ணீருங் கம்பலேயு மாகித தம்மை மறநது பரவசராகி நின்ற உருத்திரசருமஞர் குறிப்பினுலுரைத்த உண்மையை இலக்கண நூலில் ஈடுபட்டு நினற முது தமிழ்ப புலவர் பொருட்படுத்திஞரலலா. நக்கீரஞர் உரைவிரித்த தருணமும் குமர நாயகஞகிய உருத்திரசர்மர் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிாத்த தருணமும் ஒன்ரு யிருந்தமையிஞல் அவைக் களத் திருந்தோா காகதாலீய நியாயமாக உரையைக் கேட்ட இளையபிள்ளையார் அவ்வுரையி லீடுபட்டுக் கண்ணீர் வாாந்து மெய்ம்மயிா சிலிர்த்தாரென்ப. இது பொருந்தாது. 'கொங்குதோ வாழ்க்கை' என்னும் அருளுரைச் செய்யுள் ஒன்றனுக்குப் பொருள காண வொண்ணுது தியங்கிய நககீரஞர் அன்பினேந்திணைக் குப் பொருள் கண்டாரென்பது அன்பராயிஞர்கசூ நகையை விளேப்பதொன்ரே? அங்ஙனமாயின் அன் பினேந்திணைககு மெய்யுரை கண்டாா யாரோவெனின் முருகமூர்த்தியே மெய்யுரை கண்டாரென்பது. தமிழ்ப் பெருங்குரவனது அவதாரமாகிய உருத்திரசருமர் கண் ணீாவார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து உரையாடாது பரவசமாயிருந்த குறிப்பே அன்பிணைந்திணைக்குப் பெரிய தோருரை யாயிற்று. இக்குறிப்பினுட் பட்டுநின்ற முடிபுகளே உரைக்கவல்லார் யாவா? அரசற்குக் கவற்சி பெரிதா யிற்று, அதுவும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம் என அருள் சுரந்தளித்த நூலன்ரே அன்பிணைந்திணை. இறைமொழியாகிய இந்நூல் நனியுயர்ந்த வீடுபேற்று ஞானத்தையுணர்த்துவது.

'எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளின் பொருட்டு' ஆதல்போல், அறமும் பொருளும் இன்பமும்

ஆராய்வது வீடுபேற்றின் பொருட்டு, வீடுபேற்றின் பொருட்டு இறைவனுரைத்த இந்நூலுக்குப் புலவர் அறத்தின்பாலெனப் பொருளின்பாலென இன்பத்தின்பாலெனப் பலவுரை கூறி மயங்குவாராயினர். இதுகண்டு பரிவுற்ற கறைமிடற் றண்ணல் 'ஐயாட்டைப்பிராயத்து மூங்கைப் பிள்ளைபால் உரையுணர்ந்து தெளிமின்' எனப் பணித்தனன். எம்மண்ணல் தென்முகக்கடவுளாய்க் கல்லாலின் புடையமர்ந்து சொல்லாமற் சொல்லிய உண்மையைக் குமரநாயகனுஞ் சொல்லாமற் சொல்லினன்.

உளத்துக்கொண்ட பெருமிதத்தினல் உண்மையுணராது அலைவுற்ற முதுதமிழ்ப்புலவரை நோக்கி, 'பலவாய சொற் பெருககுங கல்வியினற் பரஞான மடையப்பெறீர். உண்மை யுணரவேண்டின் நீவிர் ஊமராதல்வேண்டு' மெனனுங் குறிப்பினை புணர்த்துதற்கோ, எம்மிறைவன், 'ஊமைப்பிள்ளைபால் உண்மையுணரப் பணித்தனன்.

''சொல்லாடா ஆமரைப்போற் சொல்லிறந்து நீயாகி
னல்லா லெனக்குமுத்தி யாமோ பரா பரமே,''

''பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்னருளாம்.
வாசாமகோசரந்தான் வாய்க்கும் பராபரமே''

என்ற பெரியாருரையின்படி, பொருணூற் பொருளுணர வேண்டினர் ஊமராதல் வேண்டும், அஃதன்றியும் வஞ்சம், பொறுமை, லோபம், மதம் என்னும் அழுக்குப் படியாத ஐயாட்டைப் பிராயத்துப்பாலர் நீர்மைய ராதல் வேண்டும். இவை யாவும் உருத்திரசருமரிடத்துக் காணப் பட்ட குணங்களாதலின் அவருரைத்த உரையின் பெருமையில் ஒரு சிறிதையாயினும் யாமுணர்ந்து கொள்ள விரும்புவோமாயின் யாமும் அந்நீர்மையாராதல் வேண்டும். இறைவனுடைய பேரருளின இரகசியத்தை யார்தா மறிய வல்லாா? முதுதமிழ்ப்புலவர் நாற்பத்தொன்பதின்மரா லறிதற்கரிய உண்மை, ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப் பிள்ளையால் உணர்தற்கெளிய தாயிற்று. வாரீர், தமிழ்ப் புலவீர், நரிவாலைக்கொண்டு கடலாழங் காணவல்லிரோ? அருண்ஞான வொளியின் முன்னா நும்மறிவு ஆதவன்

முன் மின்மினி யாகுமன்ருே? அன்பின் மேனதாகிய இவ் வருணூலுக்குப் பொருள்காண விழைவீரேல் நுமது நூற் கல்வியனைத் தினையும் தென்றிசைககடலினுள் வீசி யெறிந்துவிட்டு, அன்பின் வயத்தராய் உளமுருகிக் கண்ணீருங்கம்பலையுமாய் உரையொழிந்து நின்மின்; அந் நிலையில் அன்பின் பெருக்கத்தை யுணர்ந தநுபவிப்பதற் குரிமை பூணுவீா; இதுவே வழி என்னுங் குறிப்பை வெளிப் படுத்துதற்காகவே தமிழ்ப் பெருங்குரவனுகிய குமர நாயகன் ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப் பிள்ளையாய்க் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்தது நின்றனன்.

3. மேற்றிசைச் செல்வம்

திருவினுனும் அரசினுனும் மேம்பாடுற்றுப் பிற நாடுகள் பலவற்றினும் தமது ஆணை செலுத்தி வருகின்ற ஆங்கிலராதி மேலைநாட்டவரது செல்வப் பெருக்கத்துக்கு உரிய காரணங்கள் எவையென ஆராய்வானெடுத்துக்கொண்டாம்.

பரந்த இப்பொருளை ஆராயுங்கால் மேலைநாட்டாரது அரசியன் முறையும் புலனெறி வழக்கமும் கலைபயினிலைமையும் பொருளசெயல் வகையும் பிறவும் தெற்றெனப் புலப்படுவனவாம். ஆங்ஙனம் புலப்படவே மனத்தின கண் ஊக்கம் மேலிட்டு அவா படைத்த திருவை யாமும் படைப்பதற்கு முயல்வேமாதலின இவ்வாராய்ச்சி பெரிதும் பயனுடைத்தாமென்க. பண்டைநாளில் நமது முன்னோர் சிறப்புற்றிருந்தாரென்று வாளா புராணம் பாடிக்கொண்டிருப்பதனுல் உறுபயன் யாதோ வறியோம். அயனுட்டாரோடு கொள்வனவுங் கொடுப்பனவுஞ் செய்யாதொழியிற் செல்வம் நிலைபெருது. உயிர்க்குறுதி பயக்கும் நூல்கள் அவரிடத்துள்ளன. நமது உண்மை நூல்களை நாம் கொடுப்பதற்கு முன்னமே அவற்றின் சிறப்பையுணர்ந்த மேனுட்டார் தாமாகவே யெடுத்துக்கொண்டனர். அவர் பன்னுள் வருந்திச் செய்த அரிய ஆராய்ச்சியின பயனுகத் திரட்டி வைத்திருக்கிற எண்ணிறந்தனவாகிய கணிதநூல், வானநூல், ஒளிநூல், ஒலிநூல், மின்னியக்கநூல், அனல்நூல், உடல்நூல், மனநூல், சீவநூல், பொருட்டன்மைநூல், இரசாயன நூல, உலக சரித்திரம், பூகோள விவரணம், சிற்பநூல், வர்த்தக நூல், முதலியவற்றில் ஒன்றையேனும் நாம் தமிழ்ப் படுத்தவில்லை. என்னே, நம் பேதைமையிருந்தவாறு! இங்ஙனஞ் செய்யாதொழிந்தது ஆங்கிலங்கற்ற தமிழ்

மக்கள் அனைவர் மேலும் பொறுத்த குற்றமாகும். பட்டணவாசிகளாகிய தமிழ்மககள் பெரிதும் ஆங்கிலப் பத்திரிகைகளையே ஆதரிக்கிறார்கள். தாம் ஆராய்ந்து கண்ட முடிபுகளை ஆங்கிலமொழியி லெழுதி அம் மொழிககே மேலும் மேலும் மதிப்புண்டாககுகின்றனர். ஆங்கிலத்திற் கவியெழுதவுந் தொடஙகிவிட்டார்கள்; வேறு நாம் பேசுவதென்ன? கவிசிரேஷ்டராகிய ரவீந்திர நாத தாகுர் தமது தாய்மொழியிற் கவியெழுதினமை யினாற்றான் உலகத்தாரது நன்மதிப்பைப் பெற்றாரென்பதை ஆங்கிலங் கற்ற தமிழ்மககள் அறியாாகள்போலும்! எட்டு முறை குட்டிக்கரணம் போட்டாலும் தாய்மொழியன்றிப் பிறிதொருமொழியில் அம்மொழியாளரால் முதற்றரத்த தென்று மதிக்கப்படத்தக்க நூலியற்றல் இயலவே இயலாது.

இனி உயர்தரக் கல்விக்கழகங்களிற் கல்வியறிவூட்டும் முறையைப் பாாத்தால் தினையளவுமருந்தைப் பெறுவதற்கு மலைமுழுவதையுஞ் சுமப்பிக்குந் தோற்றமாயிருக்கிறது. யோக்கியதாபட்டம் பெறுவதற்கு முயலுகிற மாணவன் தான் தெரிந்துகொண்ட பொருட்டுறையில் நிறைந்த புலமையுடையவ னாயிருப்பின், ஆங்கிலமொழியிற் சொல் வன்மை யில்லாதவனாயிருப்பினும், தகாதவனென்று தள்ளப்படுகிறான். ஆங்கிலமோ இலக்கண வரம்பில்லாத முரட்டு மொழி; பத்தாண்டு பயிலினும், கருதிய பொருளைத் தெளிவுற உரைக்குஞ் சொல்வன்மையைப் பெறுவது மிகவும் அரிதாகும். தாய்மொழியில் உரைத்தால் இனி மையைப் பயக்கததக்க பொருட்டுறைகள் வேற்றுமொழியில் உரைக்கப்படின் வெறுப்பைத் தருவனவாம். இதனால் மாணாக்கன் கற்குங் கல்வியில் மன ஊக்கஞ் செல்லாத வனாக வருந்துகிறான். இன்னோரன்ன பல காரணங்களால் உயர்தரக் கல்வியறிவும் தாய்மொழியிலே ஊட்டப்பட வேண்டுமென்பது மறுக்கொணா உண்மையாகின்றது யாம் வடநாட்டுக்குப் போயிருந்தபொழுது ஹரித்துவாரத்தில் ஆரியசமாஜத்தாரால் நடத்தப்படும் குருகுலம் என்னும்

உயர்தரக் கல்விக் கழகத்தில் இரண்டு நாட்டங்கியிருந்து கலைபயிற்று முறைமையை நன்குகக் கவனித்துப் பார்த்தோம். பன்னீராட்டைப் பிராயத்துச் சிறுவர்களெல்லாம் வடமொழியில் வசனிக்கவும் நூல்களை வாசித் தின்புறவுந் தக்க பாண்டித்திய முடையவர்களாக விருப்பதைக் கண்டு மகிழ்ந்தோம். ஹிந்திபாஷைமூலமாக மேலைத் தேசசரித்திரம், பௌதிகசாஸ்திரம் இவையெல்லாம் உயாவாகக் கற்பிககப்படுகின்றன. இக்கல்விக்கழகத்தில் வித்தியாலங்காரன் எனும் பட்டம் பெற்ற மாணவன் சென்னையில் எம். ஏ, பட்டம்பெற்ற மாணவனோடு ஒத்துநோக்கப்படிற் குறைந்தவனுகக் காணப்படான். இவன் தாய்மொழியிற் கல்வி பயின்றவனுதலாற் றன்னூர்க்குச் சென்றதும் தான் பெற்ற செல்வததைப் பிறரும் அநுபவிக்கும்படி கொடுககிருன். இதனுல இவன் பயின்ற கல்வி ஆயிர மடங்கு பயன்றருகிறது. நம் நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப்பணத்தைககொண்டு உயர்தரக கல்விச்சாலைகள் நடத்தப்படுகின்றன; ஆதலால் இக்கல்விச்சாலைகளினின்று பிறககும் கலையறிவு அனைவாக்கும் பயன்றருவதன்றோ நீதியும் மரபு மாகும். குஜராத் வித்தியாபீடம், காசி வித்தியாபீடம் இவற்றில் அனைத்துக் கல்வியும் தாய்மொழிமூலமாகவே தரப்படுகின்றன. வங்காளிபாஷையிலும் அநேக உயர்தர மொழிபெயர்ப்பு நூல்கள் வந்துவிட்டன. காளிகட்டத்துச் சர்வகலாசாலையார் தாய்மொழியிலே எல்லாக்கல்வியும் பயிற்றப்பட வேண்டுமெனனும் சட்டத்தைச் சீககிரங் கொண்டுவந்துவிடுவார்கள். ஆநதிர கன்னட மலையாள நாட்டாரும தம்மொழியை வளர்பபதில் முன்னேற்றமடைந்து வருகிருர்கள. இவ் விஷயத்திற் சென்னைச் சருவ கலாசாலையாரும் தமிழ் மக்களுமே மிகவும் பிற்பட்டு நிற்கிருாகள். தமிழில் மொழிபெயாப்பு நூலெழுத முன்வருபவா சிலா நிரம்பிய தமிழறிவினமையான் ஆங்கில மக்களும் தமிழ்மக்களும் ஒருங்கு வெறுக்கத்தக்க பயற்றுப் பச்சரிசிநடையில் (பைந்தமிழும் வெள்ளையர் ஆங்கிலமும் சரிக்குச்சரி கலந்த

நடையைப் பயற்றுப்பச்சரிசிநடை யென்றும்; மணிப் பிரவாளமென்றுற்போல) நூலெழுதி முடிககின்றுர்கள். இவ்வாறெழுந்த நூல்களால் விளையும் பயன் ஒன்று மில்லை. ஒரோவழி அயனுட்டுச் சொற்களைச் சேர்த் துக்கொள்வதனுற் குற்றமில்லை; முடிந்தநூல் தமிழ் மணநு கமழ்வதாகவிருததல்வேண்டும். அல்லாவிடில் நின்றுநிலவாது.

இத்தகைய எண்ணங்கள் மனத்தில் உதிக்க இராம பிரானுக்கு அணைகட்டுவதற்கு உதவிபுரிந்த சிறிய அணிற்பிளளையைப்போலச் செந்தமிழ்த்தாய்க்கு இயன்ற தொண்டுசெய்யவேண்டுமென்று எண்ணி மேற்றிசைச் செல்வம் (The wealth of the west), என்னும் இந் நூலையும், விஞ்ஞானதீபம் (The Light of science) எனப் பின்னுமொரு நூலையும் எழுத ஆரம்பித்தோம். இவை யிரண்டும் சுருக்க நூலாகப் பலவாய பொருட்டுறைகளைத் தம்முள் அடக்கியனவாக இருத்தல் வேண்டுமென்பது எமது எண்ணம். அதிகாரவகையைக கூற இவ்வுண்மை புலப்படும். இம்முன்னுரை முடிந்ததும் அடுதத அதிகார மாக மேனுட்டு நாகரிக வரலாற்றைக் கூறத் தொடங்கி, சுமேரிய, அக்கேடிய, ஆசுரேய, பாபிலோனிய எகிப்திய நாகரிக நிலைமையையும், அடுதத அதிகாரத்திலே இப்பொருளையே தொடர்ந்து கிரேகக, ரோமானிய நாகரிகம் வளர்ந்து பரந்து மேற்றிசைக்குச் சென்ற வரலாற்றினை யும், அடுத்த அதிகாரத்தில் மத்தியகால சரித்திரம் என்னும் பெயர்க கீழ் இருள் பரவியிருந்த ஐரோப்பாக் கண்டத்தில் அறிவுச்சுடா புகுந்தவாறும், அஃது கிழக்குத் திசையிலிருந்து சென்று மேறகில் வெற்றிக்கொடி நாட்டிய அராபியராற் கொடுக்கபபட்ட கொடையாமென்பதுஞ் சொல்லி, அப்பால் அடுத்த அதிகாரத்திற கப்பலவர்த்தக நோக்கமாகப் புறம்போந்த மேனுட்டார் பிறதேசங்களைக கைப்பற்றியவாறும், தமது வர்த்தகம் கைத்தொழில் இவற்றை விருததிசெய்முறையிற் பிறநாட்டாரையறிந்தும் அறியாமலும் துன்புறுத்தியவாறும், உலாந்தாககாரர்,

பிராஞ்சியர், போர்த்துக்கீசராதிய ஏனைய மேனாட்டாரை அடக்கி ஆங்கிலேயா பரந்த சக்கராதிபத்தியத்தை நிலை நிறுத்தினமையுஞ் சொல்லி, அதற்கடுத்த அதிகாரத்தில மேனாட்டு அரசியல் முறையை விளக்கிக குடிகள் எவ்வாறு தங்களுடைய அரசாகளுககு நல்லறிவுறுத்தி வேண்டும்பொழுது நெருக்கித் துன்புறுத்தி யாவரானும் விரும்பப்படத்தக்க சுய அரசுச் சலாக்கியத்தைப் பெற்றுக கொண்டாாக ளென்பதைச் சொல்லி, பின்னா் வரும் ஆறு அதிகாரங்களில் முறையே மேனாட்டுக கல்விக் கழகங்கள், விஞ்ஞான நூறபெருககம், மகாயுத்தமும் அதனால் நோந்த மாறுதல்களும், அமெரிககரது முன்னேறறம, வேதாந்த ஞானம் மேனாட்டிற் பரவுதல், ஆசியாக்கண்டந் துயிலொழிந்தெழுதல என்னும் பொருள்களைக் கூறி முடிப்பாம். விஞ்ஞானதீபமும் இததகைய செய்தி தாஙகிய அதிகாரங்களால் முடியும். முதல் வரும் அதிகாரங்கள் உற்பத்தி விளககமெனபபட்டு முறையே சூரியசந்திரோற்பத்தி (வானநூல்), மலைகடலுற்பத்தி (பூமிநூல), தாவரசங்கமோற்பத்தி (தாவரநூல், விலஙகு நூல்), மானிடசரீர அமைபபு (கேசாதிபாதநூல்) இவற்றைக் கூறுவன. ஏனைய அதிகாரங்கள் தத்துவவிளக்கம எனப்பட்டு முறையே பொதுவியல், ஒலியியல், அனலியல், ஒளியியல், காந்தவியல், மின்னியல், மினனியக்கவியல, இரசாயனவியல் என நடப்பன.

நாம கூறப்புகுந்த பொருளெல்லாம ஆராய்ந்து பார்க்குமிடத்துத் தமிழ்ப்புலவரால அகம் புறம் என வகுக்கப்பட்ட இருபெருங பொருட்பகுதியிற் புறத்தின் பால அடங்குவனவாம். சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைததாகிய வீடும், உள்ளததுணாவால் அநுபவிக்க வேண்டிய இன்பமும் பிறரால் வேறுபடுததப்படாத நிலைமையினவாதலின் இவற்றைக கூறும் அகப்பொருளிலக்கணங்கள் ஒரு காலத்தும் மாறுபடா நிலைமையின. ஆலவாயி லவிர்சடைக்கடவுள் அருளிய அன்பினைந்திணை

தொல்காப்பியனு ருரைத்த அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகிய விவை ஊழிககாலத்தும் அழிவுபெரு இலக்கணங்களாம். புறப் பொருளிலககணம் அத்தகையதன்று. ஏனையநாட்டாரது நாகரிகமுறையாலும் நமது நாட்டில் ஆணைசெலுத்தி வருகின்ற ஆங்கிலரது அரசியன முறையாலும் விகற்ப முறும் நிலைமையது. இலக்கணநூல், அதிலும் புறப் பொருள், உலக வாழ்க்கைக்கு உபயோகமாகி நிற்றல் வேண்டும். கற்குங் கலவிதானும் உள்ளத்திற் கினிமை பயத்தல், உயிர்கஉறுதிபயத்தல் உலகவாழ்க்கைக குறுபய னளித்தல ஆகிய மூன்றுவகையானும் அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் வீட்டையும் தருவதாகவேண் டும். தற்காலத்துத் தமிழ்ப்புலவர் ஏனைய மூன்று புருஷார்த் தங்களைப் பெற்றும் இரண்டாவதான தும் உலகவாழ்க்கைக் குறுபய னளிப்பதுமான பொருளைப் பெருது வருந்துவதைக் காண்கின்ருேம். இதனுற் புறப்பொருணூல்கள் பயனற்று நிற்பது வெளிப்படையாகின்றது. அரசியன்முறை, மந்திர சபையமைப்பு, அமர்மேற் செல்லல், பொருள்செயல்வகை இவையெல்லாம் புறப்பொருட் பகுதிக ளன்ருே? தற் காலத்துக் கேற்ப இவற்றைக கூறு நூல்கள் ஒனருவது தமிழ்மொழியி லிலலேயே. இந்நாண் மரபுகள அறம் பிறழ்ந்தனபோற் ருேற்றினும், 'அரசனெவ்வழிக் குடி களுமவ்வழி' யென்பதற் கிணங்க நம்மாற் கைககொண் டொழுகவேண்டுவன வாகின்றன. ஒரு சில உதாரணங் காட்டி விளக்குவாம். வேற்றுப்புலத்துக் களவினுலே சென்று பசுநிரையைக் கொண்டுபோந்து காத்தற்குரியது வெட்சித்திணை. இது முற்காலத்து மனனர் போர் ஆரம் பிக்கும் பொருட்டுச் செய்துகொண்ட முறை. இக் காலத்தோ என்ருல் மாற்றரசனுக்குச் செய்தியனுப்பி இன்ன இன்ன கொள்கைகளுக்கு அவன் உடனபடாதவழி அமர் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்து அமர் ஆரம்பிப்பது முறை. வில்லும் கணையும் இக்காலதது அமர்முறைக்குப் பயன்படா. அமர்மேற் செல்லுமுறை

முற்றுமே இக்காலத்து வேறுபட்டது. இனிச் சட்ட சபையமைப்பினை நோக்குவோமாயின் இந்நாளிற் குலம் கல்வி யிவற்றினும் பார்க்கப பொருட்செல்வமே பெரி தும் வேண்டற்பாலதாகத் தோற்றுகிறது. பொரு ளில்லாதார் குடிப்பிறநதாராயினும் ஞனமிக்காராயினும் ராஜமந்திரத்தில் இடம் பெறுர். இந்நாளிலுள்ள சட்ட சபையில் விசுவாமித்திரருககும் வசிட்டருக்கும் இட மில்லை; இவர்கள் தினையளவும் பொன்னில்லாத துறவிகளாதலின். காருண்ய அரசாங்கத்தினர் சிறிது சிறிதாகவேனும் நமககுச் சுயவரசுச் சலாககியத்தைத் தநதுவருகிற இந்த நாளில் அவ்வகையாகிய சலாக் கியத்தைப் பயனபடுத்த வேண்டிய அறிவினை விருத்தி பண்ணிககொள்ளுதல் அவசியமலலவா? இந்த விஷ யத்தில் வர்த்தமானப் பத்திரிகைகள் பெரிதும் முயன்று வருகின்றன. ஆயினும் ஆராய்ந்தமைத்தநூல் இல் லாதவழித் தெளிவுற விஷயஙகளை அறிந்துகொள்ளுதல் கூடாது.

இக்காலத்திற் புறப்பொருளாராய்ச்சியே குறைந்து போயிற்று. இன்னன் என்றிரங்குகிற மன்னைக்காஞ்சி சரமகவிகளில் வெளிப்படுகிறது. யாககையுஞ் செல்வ மும் இளமையும் நிலையா என்று அழுகிற அழுகையே தமிழ்வாணருககு இயல்பாயிற்று. நிலையாப் பொருள் களை விடுவாரோ மிகச் சிலர்; அவற்றைப்பற்றி யணைத் துககொண்டு தேடித் துய்ப்பதற்கு வலியின்மையால் நிலையா, நிலையா, என்று பொய்க்காஞ்சி பாடி யிம்மை மறுமைச் சுகத்தை யிழப்பவரே மிகப்பலா. இனிப் பாடாண்டிணையை யவமதித்து ஆண்மையில்லா அசடர் களுககுப் பாட்டிசைத்து அவர் தலைக்கடையிற் காத் திருந்து வன்சொறகளையே பரிசிலாகப் பெற்று மீளுகிற தமிழ்வாணர் பலா. இவ்வாறு இயல்பிற் றிரிபுபட்ட காஞ்சியும் பாடாணும் ஒழிய ஏனைய ஆண்டன்மைககுரிய வாகை, தும்பை முதலிய புறப்பொருட் பகுதிகள் மறைந் தொழிந்து விட்டன. கவிநயவினிமையையும் பிறவினி

மையையும் தருகிற அகப்பொரு ணறவினை யுண்டு மது வுண்டு மயஙகிய வண்டைப்போலச் செயலின்றிக் கிடந்தோம்; அடிமைத்தன்மையும் வந்தெய்திற்று. ஐயோ! இந்நிலைமை யினி வேண்டாம். வீரத்தையும் ஆண்மை யையுந் தருகிற புறப்பொருளை நாடுவோம். தவராஜ சிங்கமாகிய விவேகாநந்தசுவாமி சொல்லுகிறார்: 'எழுந் திருஙகள், சோம்பலையும் மூடததனத்தையும் வீசியெறிந்து விட்டு வெளியே உலாவி உலகத்தின் ஏனைய பாகஙகளி லுள்ள மாந்தாகள் முனனேற்றமடைநதுகொண்டு போவதைப் பாருஙகள். எததனை நாளைககு மூலையில் ஒதுங்கிககிடககப் போகிறீர்கள். நீங்கள் சுத்த வீரா களின் வழிப்பிறந்தவர்கள் என்பதை மறந்துவிட்டீர்களா? சூரனுககு உயிா துரும்பு; தேச முன்னேற்றத்துககாக உயிரையும் கொடுககத் தயாராயிருககும் வாலிபர்கள் ஆயிரககணக்கான பேர் முன்வரவேண்டும். மேனிலையை யடைவதற்கு முயலுவோம். அம் முயற்சியில உயிர் போனாலும் போகட்டும்.' முநநாளில இருந்த நமது தமிழ் நாட்டுத தாய்மாா எவ்வளவு வீரம்படைததவராக விருந்தார்கள்:

'நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொணட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடைக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.'

இது முன்னாளியல்பு.

'தந்தை மதியினுஞ் சாலுநன் மதியோன்
என்மகன் தீரன எசமான் கோபித்
தெட்டி யுதைத்த காலினைப் பற்றி
முத்த மிட்டு முன்னின்று பணிந்து
ஐயன் காலுக் கடிமைதுயர் விளைத்தனன்

என்னக் கூறி யீரைந்து வெண்பொன்
சம்பள வுயர்ச்சி சாலப் பெற்றனன்.'

என மகிழ்வது இந்நாளியல்பு. நாம் அறிந்த வரையிற் றமிழ்நாட்டாரனைவரும் சாதிமத பேதமில்லாது கைக் கொள்ளத்தக்க நூல் ஒன்று உள்ளது. அது புறநானூறு. இனி, மேற்றிசைச் செல்வத்தை ஆரம்பித்து மேனுட்டு நாகரிகம் வந்த வரலாற்றினைச் சொல்லத் தொடங்கு வாம்.

4. நாகரிக வரலாறு

அழகு, அன்பு, ஞானம், கவிததுவம் இவற்றைப் பெருக்கி, மேலைநா டனைததும் உய்யுமாறு அறிவுச்சுடர் பரப்பிநின்றது அததேனு நகரம். இந்நகரவாசிகள தமது நாட்டை ஹெலலாஸ் என்றும் தம்மை ஹெல்லோனியர் என்றும் பெயரிட்டு வழங்கினாகள் அவாகளுள ஒரு பாலாருககு அயோனியா என்று பெயர். இம்மொழியின் சிதைவே யவனரென்பது. இதனுல நமது நூல்களில் யவனபுரம் என்று குறிககப்பட்டது இவ் வத்தேனு நகரத்தையே யெனபது தெளிவாகின்றது. அ∴தன்றியும் வடமொழியில் வானநூ லியற்றிய ஆசிரியராகிய வராகமிஹிரா யவனபுரத்துககுக கூறிய தேசாந்தர அக்ஷாம்ச பாகைகளை நோககுமிடதது அத்தேனுநகரமே யவனபுரம் என்பது நிச்சயமாகின்றது. யவனபுரததிலே கவிசிரேஷ்டர்களும தத்துவ நூலாசிரியர்களும் பலா இருந்தமையினுல, பிறநாடுகளிலிருந்து மாணவர்கள் அங்குச் சென்று கல்வி பயில்வது இயல்பாக விருந்தது. இத்தகைய . பெருமை வாய்ந்த அததேனு நகரத்தார் தமது நாகரிகத்தைப பிறருதவி யினறி வளர்த்துக் கொண்டார்களோ வென்ருல், இல்லை. இவாகள் எழுத்து முறையைப் பினீசியரிடமிருந்து கறறுககொண்டதாகவும், தததுவஞானததை எகிப்தியரிடமிருந்து உணர்ந்துகொண்டதாகவும் பூர்விக நூல்களிலே கூறுகிருர்கள். ஆராயுமிடததுப் பரதகண்டத்திலிருந்தும் இவர்கள் பல விஷயங்களை யறிந்துகொண்டதாகத் தெரியவருகிறது. இவ்விஷயத்தை யடுத்த அதிகாரத்தில் விரித்தெழுதுவாம். எகிப்தியருடைய நாகரிகம் மிகவும் பூர்விகமானது. ஆசுர் என்னும் பட்டணத்தைத் தலைநகராகக்கொண்ட ஆசுரேய நாட்டின் நாகரிகம்

எகிப்திய நாகரிகத்துக்கும் முந்தியது. இவ்வாசுரேய நாகரிகந்தானும் பாபிலோனிய நாகரிகத்தைப் பின் பற்றியது. பாபிலோனிய சீர்திருத்தம் சுமேரிய அகசேடிய நாகரிகத்தின வழிவந்தது. இங்குக் கூறியன யாவும் ஆராய்ந்து தாபிக்கப்பட்ட உண்மைகள். சுமேரிய அகசேடிய நாகரிகத்துக்கும் தமிழ்நாட்டுப் பூர்விக நாகரிகத்துக்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

ஈற்றில் குறிபபிட்ட விஷயத்தைப்பற்றிப் பிரபல ஐரோப்பிய பண்டிதர்களாகிய ஸர். எச். எச். ஜான்ஸ்டன், எச். ஜி. உவெல்ஸ், உவில் விறட்ஸ்காவென, பிளன்ற், ஹக்ஸ்லி இவாகள் சொல்வதை மொழி பெயர்த்து எழுதுவாம். முன்னையோர் இருவருஞ் சொல்வது, புதிய ஆராய்ச்சி முறையின் முடிபாககக கண்டது; பிஷப் கால்டுவெல் பண்டிதருடைய கொள்கைக்கு மாறுபட்டது; யுகதிககு ஏற்றதாகத தோற்றுகிறது. அது வருமாறு: உலகத்தில் முதன்முதற் கட்டிடங்களையும் பட்டணங் களையும் உண்டாக்கியவர்கள் சுமேரியரென்னுஞ் சாதியார். இவர்கள் யூதவகுப்பு, ஆரியவகுப்பைச சேர்ந்தவர்க ளல்லர்; எஙகிருந்து வந்தாாகளோ தெரியவிலலை. இவாகளுடைய பாஷை பலுககிஸ்தானத்தின் பல பாகங களிலும காககேசியமலை நாட்டிலும் உளள பாஷைகளையும் ஸ்பானியாவில் ஒரு பாகததிற பேசப்படுகிற பாஸ்க் என்னும பாஷையையும் ஒத்திருககிறது இப்பாஷைக ளெலலாம் திராவிட மொழிகளோடு நெருங்கிய சமபந்த முடையன. சுமேரியா கோபுரத்தோடு கூடிய கோயில் களைக கட்டினாாகள். நிப்பூர் என்னும் இடத்திலே தமது பிரதான தெய்வமாகிய எல்—லில் எனனுஞ சூரிய தேவனுக்கு ஒரு கோயிலைக் கட்டியிருந்தார்கள். பிளன்ற், ஹகஸலி இவர்கள் சொலலுவது: எகிப்தியரும் திராவிடரும் ஒரே குலமுறையில வந்தவாகளாக விருத்தல் வேண்டும். முன்னுளிற் கறுப்பென்றும் வெள்ளை யென்றுஞ் சொலலககூடாத மங்கல் நிறத்தினராகிய வரும் மிகவுஞ் சீர்திருத்த மெய்தியவருமாகிய ஒரு

சாதியார் ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிராஞ்சு, ஸ்பானியா என்னு மிவற்றிலும், மத்தியதரைக்கடலின் இருபக்கத்திலும், எகிப்திலும், இந்தியா முழுமையிலும், சீனதேசத்திற் பசிபிக் சமுத்திரக் கரையிலும், அமெரிககா விற் பீரு, மெகசிகோ ஆகிய இரண்டு நாட்டிலும் பரவி யிருந்தார்கள். இவர்கள சூரியனையும் சர்ப்பங்களையும் சமயக்கொள்கைகளிற் சம்பநதப்படுததியும், இன்றும் இந்தியாவில் வழங்குகிற சுவஸ்திக அடையாளத்தையு மங்ஙனே சமயககொள்கைகளிற் கொண்டும் வந்தவா கள். இவர்கள் கிறிஸ்தவாப்தத்துக்குப் பதினையாயிரம் ஆண்டுககு முற்பட்டவர்கள். அதுமுதல் கி. மு. ஆயிரம் ஆண்டுவரையும் அதாவது பதினாலாயிர வருடததுககு இவர்களுடைய நாகரிகம் நிலைபெற்றிருந்தது; வடககி லிருந்துவந்த வெள்ளைநிறமுளள ஒருசாதியாா இவர்களைத் துரத்திவிட்டாாகள். ஐரோப்பாவின தெற்கு மேற்குப் பாரிசங்களிற் புதிய கற்காலத்தினா ஆகிய இவாகள் குறைந்தபடி பத்தாயிரம் வருஷங்களுககுத் தமது பாஷையைப் பேசிககொண்டு வந்தார்கள். ஆரிய பாஷை வருதலும் இவாகளுடைய மொழி அருகி மறைந்து போயிற்று. சென்ற வருஷததிற் கிறீற் என்னுந் தீவி லகப்பட்ட கற்சாமான்களை யாராய்நத ஸர். எச். எச். ஜான்ஸ்டன் என்னும் பண்டிதர் கிறிஸ்தவாப்தத்துககு மூவாயிரம் வருஷததுக்கு முன்னுள்ள அச்சாசனங்களில் எழுதப்பட்ட மொழியும் திராவிட மொழியோடு சம்பந்த முடைய தென்கிறுர்.

உற்றுநோக்கும்போது எகிப்தின் பிரதானநதியாகிய நீலநதி, சுமேரியத் தலைநகராகிய நிப்பூர், எல் வேல் என்னுங் கடவுட்பெயர்கள் இவை தமிழ்மொழியாக விருக்கின்றன. பின்னும் யவனமொழி எழுத்துக்களின் வடிவம் தமிழெழுத் துக்களோடும் கிரந்தலிபியிலுள்ள எழுத்துக்களோடும் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இதனை விரிவாக யவன நாகரிகத்தை யாராயுமிடத்து ஆராய்வோம். சுமேரிய அக்கேடிய சமயக் கொள்கைகளும் விசாரிக்கத்

தக்கன. முதலிலே இவர்களது அரசியல் நாகரிகத்தைச் சுருக்கமாகச் சொல்லி அப்பாற் செல்வாம். எரேக் என்னும் சுமேரியப்பட்டணத்தில் கிறிஸ்துவுக்கு முன் இரண்டாயிரத் தெழுநூற்றைம்பதாம் ஆண்டிலே சார்கோன் என்னும் அக்கேடிய சாதியா னொருவன் தன்னுடைய வல்லமையினாலே சக்கரவர்த்தியாகிப் பாரஸீக விரிகுடா முதல் மத்தியதரைக்கடல வரையுமுள்ள தேசங்களை ஆண்டுவந்தான். இவன் திருத்தமுற்ற சுமேரியமொழியையே அரசபாஷையாகக் கொண்டு தனது நாட்டைச் சுமேரிய அக்கேடியம் என்று வழங்கினான். சிலகாலத்திற்குப் பின் கிழக்கிலுள்ள ஏலம் என்னும் தேசத்தவரும் மேற்கிலுள்ள அமோர் தேசத்தவரும் இந்நாட்டை நெருக்கி யுத்தஞ் செய்தார்கள். அமோரியர் வெற்றிபெற்று, கி. மு. ஆண்டு இரண்டாயிரத்திற் பாபிலோனிய நகரத்தை ஸ்தாபித்தார்கள். இவர்களது அரசன பெயர் ஹம்முருபியென்பது.

ஹம்முருபியரசன் செங்கோல் நடாத்திய காலத்துப் பாபிலோனியம் மிகவுஞ் சீர்திருத்தமுற்றிருந்தது. சூசா எனனும் இடத்திறகுச சமீபத்திலே மோர்கன் எனபவரால் இன்றைக்கு இருபத்தொரு வருஷங்களுக்கு முனபு கண்டெடுக்கப்பட்ட சிலாசாசனம் இதற்குப போதிய சானறாகும். எட்டடி யுயரமாகிய இக்கல்லிலே இருநூற் றெண்பதத்திரண்டு பிரிவுகளா லமைந்த ஒரு சட்டம் வரையப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் தன்மையை யாராயுமிடத்து இதனைக் கைக்கொண்டு நடந்த சாதியார் மிகவும் நாகரிகம் படைத்தவர்களா யிருக்கவேண்டு மென்னு முண்மை புலப்படுகின்றது. யவனபுர ரோமபுர நாகரிகம் மேனாட்டு நாகரிகத்தை எவ்வாறு வழிப்படுத் திற்றோ அவ்வாறு பாபிலோனிய நாகரிகமானது யவன புர நாகரிகத்துக்கு முதலாக நின்றது. எபிரேய நாகரிக மும், எகிபதிய ஆசுரேய, பாபிலோனிய, பினீசிய நாகரிகங் களின் வழிவந்ததன்றித் தனக்கென ஒரு பற்றுக்கோடு இல்லாதது. நமது தாய்நாடாகிய பரதகண்டத்தின்

நாகரிமோ இவையெல்லாவற்றுக்கும் முற்பட்டது. செல்வச் செருக்கினுல் அறிவு மூடுண்டு கிடக்கிற மேற்றிசைப் பிரபுக்கள் இதனை யறிந்தாலும் வெளியிடுவதில்லை. நமது நாகரிகத்தி லீடுபட்ட மேனுட்டு அறிவுடையார் சிலர் நமது முன்னேருடைய பெருமையைப் பெருகக் கூறிப் பின்னேராகிய நம்மை இழிவுபடுத்துவர். இனி நாமே நமது முன்னேருடைய பெருமையைப்பற்றி வாய்ப்பறையறைய வெளிப்படுமிடத்து அச்செயல் அன்னி யருக்கு நகையை விளைக்கு மன்றி நம்பால் மதிப்புண் டாககாது. என்னே? ஆண்மை குன்றிச் சிறுமையடைந் திருக்கிற வறியவ னெருவன் செல்வர்பாற் சென்று தன முன்னேர் பெயரைச் சொல்லி யிரக்கின்ற செய் கையை இழிதொழிலாக உலகம் மதிககு மாதலின். பின்னர்ச் செய்யவேண்டுவ தென்ன? நமமுடைய சிறுமைக் கெல்லாம் காரணமாயிருக்கிற பொருமையையும் பிரிவினை யையும் ஒருங்கே களைந்துவிட்டு உடல் பொருள் ஆவி மூன்றையுந் தேசசேவைக்கே ஒப்புக்கொடுத்து நமது தேசத்தையும் மொழியையும் பெருக்கமுறப் பண்ணுவோ மாயின் நாமும் பெருமை யடைவோம்; நம் முன்னேரும் பெருமையடைவர்.

பாபிலோனியம் சிறப்புற்றிருந்த காலத்தில் வடக்கே தைகிரிஸ் நதிக்கரையிலே யுள்ள ஆசூர், நினிவே என்னும் நகரங்களிலே ஆசுரேயர் என்னும் செமித்திய குலத்தார் வசித்து வந்தார்கள். இவர்களது நாட்டுக்கு மேற்கி லுள்ள தேசத்தில கித்தியர் என்னும் ஒருசாதியார் இருந் தார்கள். இவர்கள் ஆரிய மொழியும் ஆரியமதக கொள் கையும் உடையவர்களென்பது சில ஐரோப்பிய பண்டிதர் களுடைய துணிபு. கித்தியருக்கும் ஆசுரேயருக்கு மிடையிற் சச்சரவுகள் இருந்தன. ஆங்ஙனமே தெற்கே யுள்ள பாபிலோனியருக்கும் ஆசுரேயருக்கு மிடையிற் சிறு சண்டைகள் நடந்துகொண் டிருந்தன. சார்கோன் என்னுஞ் சுமேரிய அக்கேடிய அரசன் ஆசுரேயரை வென்று சிலகாலம் அவரது நாட்டைக் கைப்பற்றியிருந்

தான். பின்னர் மித்தானி நகரத்தி லரசுபுரிந்த துஷ்ரட்டன் என்னும் கித்திய அரசன் நினிவேநகரத்தைப் பிடித்துச் சிலகாலம தன்னுணை செலுத்தி வந்தான். கி. மு. ஆயிரத்தொருநூறும் ஆண்டுவரையில் ஆசுரேயர் திக்லாத்பிலேசா என்னும் தமது அரசனுடைய சேனுதிபத்தியத்தின் கீழ்ப் படையெடுத்துச் சென்று பாபிலோனியத்தை வென்றூர்கள். விவிலிய நூலிற் பேர் குறிக்கப்பட்டிருககிற மூன்றும் திக்லாத்பிலேசர் கி. மு. எழுநூற்று நாற்பத்தைந்தாமாண்டுவரையில் இருந்தவன். இவனது புத்திரனுகிய நான்காம் சால்மனேசர் சுமேரியாவில் நடநத ஒரு யுதததத்தில் இறநதுபோகவே உரிமையில்லாத பிறனெருவன் இராச்சியத்தைக் கைப்பற்றி இரண்டாம் சார்கோன் என்னும் பெயரோடு அரசுபுரிந்தான். இரண்டாஞ் சார்கோனுடைய மகன் சினக்கிரிபு என்பவன். இப்பெயரை ஆங்கில மொழியிற் சிலர் சென்னுச்செரிப் என உச்சரித்து வழங்குவர். சினக்கிரிபு என்னும் பெயர் சின் என்னும் பாபிலோனிய தெய்வப் பெயரினின்று வந்தது. இந்தச் சினககிரிபுதான் எகிப்துககுப் படையெடுத்துச் சென்றவன். சைநியம் நோய்வாய்ப்பட்டமையால் மீண்டுவந்துவிட்டான். இவனது பௌத்திரனுகிய ஆசுர்வனிபாலன் என்பவன் பின்னுளிற் படையெடுத்துச் சென்று எகிப்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றினுன். யவனா இவன் பெயரைச் சார்டானுப்பாலுஸ் என்று வழங்குவா. இரண்டாஞ் சார்கோனுடைய காலத்துககுப் பின் நூற்றைம்பது வருஷத்துககுததான் ஆசுரேய ராச்சியம நிலைபெற்றிருந்தது. இதன்பின் செமித்திய குலத்தாராகிய காலதேயா, ஆரியகுலத்தாராகிய மீதியர் இவாகள் பாரசீகருடைய உதவியைக் கொண்டு கி. மு. அறுநூற்றூறும் ஆண்டுவரையிற் பாபிலோனியத்தைக் கைபபற்றினுர்கள். அதுமுதல் கி. மு. ஐஞ்ஞூற்று முப்பத்தொன்பதாம் ஆண்டுவரையும் காலதேய அதிபதிபகளின் கீழ்ப பாபிலோனிய ராசரீகம் நடைபெற்றுவந்தது. இவ்வதிபதிகளுட் சிறப்புவாய்ந்தவன் இரண்டாம் நேபுகாத்து

னேச்சார். பாரசீக சக்கராதிபத்தியத்தை நிலைநிறுத்திய சைறஸ் அரசன் காலதேய மன்னனை வென்று கி. மு. ஐஞ்ஞூற்று முப்பத்தொன்பதாமாண்டிற் பாபிலோனியத்தைக கைப்பற்றினன்.

சமயநிலை, நாகரிகநிலையை மதிப்பிடுவதோரளவு கோல் ஆதலினால், பாபிலோனிய ஆசுரேய சாதியாரது சமயக்கொள்கைகளைப்பற்றிச் சிறிதாராய்ந்து அப்பாற் செல்லுவாம். பரிசுத்தநகரம் எனப் பொருள்படும் எரிது என்னும் பழம்பதி பாபிலோனிய நாட்டாருடைய விசேஷ ஸ்தலமாக விருந்தது. இது ஊர் என்னும் நகரத்துக்கு இரண்டரை யோசனை தெற்கே பாரசீகக்குடாக்கரையி லிருந்ததாகத் தெரியவருகிறது. இந்நாளில உளநாட்டி லிருக்கிற இந்த நகரத்திலே எயா என்னும் கடற்றெய்வத் துக்கு ஒரு கோயிலிருந்தது. ததிப்பாயுந் திரை யொலியில் அத்தெய்வத்தினது வாசகமும் பிற்பகலிற் கடற்புறத்தினின்று வீசும் மந்தமாருதததில் அவரது இனிய சுவாசமும் புலப்பட்டனவாயினும் அன்பர்கள் அவர் உருவினைக் கண்டுகொள்ளவில்லை. அறிவுடையோர் சமுத்திரககரையை நோக்கினர்; தினந்தினஞ் சமுத்திரத் தினின்று உதித்து அவிரொளி பரப்பி இருளினை யகற்றிப் பகற்காலம் முழுவதும் மனிதவாக்கத்தினரிடையேயிருந்து ஏற்படு காலையில இல்லத்திற் கேகுஞ் செங்கதிர் மண்டிலத்தின் இயல்பினைக் கண்டாாகள். கண்டு, செஞ்ஞாயிறு கடற்றெய்வத்தின் புதல்வனாயிருத்தல் வேண்டுமென நிச்சயித்துப் பரிசுத்த புதல்வன் என்னும் பொருளினதாகிய மார்துக் என்னும் பெயரிட்டு வழங்கினாகள். மார்துக் என்னும் மொழி பிற்காலத்திற் சிதைந்து மெரொடக் ஆயிற்று. இந்தப் பரிசுத்தபுதல்வர் தமது தந்தைக்கும் மனிதவர்க்கத்தினருக்கு மிடையில் மத்தியஸ்தராக ஏற்பட்டார். இவர் மனிதரைத் துன்புறுத்திய சர்ப்பத்தின் சிரத்தைக் காலால் மிதித்து வெற்றி பெற்றார். இச்சர்ப்பந்தான் எத்தன்மையதோ வென்றால்

ஏழு தலைகளையும் ஏழு வால்களையு முடையதாய் இருளுக்கும் பாபச்செயல்களுக்கும் அரசாயிருப்பது. கிரணங்களாகிய அம்புகளைச் செலுத்தி மார்துக் இச்சர்ப்பத்தைக் காயப்படுத்த அதனினின்று ஒழுகிய குருதி திசைகளைச் சிவக்கப்பண்ணிற்று. அந்திப் பொழுதில் இச்சர்ப்பம் உயிர் பெற்று மார்துக்கின் குதிகாலைக் கடித்து அவரை மேற்கொண்டது. இங்ஙனே தினந்தோறும் நடக்கும் கடற்றெய்வத்தின் புதல்வனுகிய மார்துக்கினுடைய வழிபாடு சிறந்துவந்த காலத்தில் இவரது தந்தையாகிய எயாவின லக்ஷணங்களும் ஜகத்காரணரென்று பாபிலோனியராற் கருதப்பட்ட வேல் என்னுந் தெய்வத்தின் லக்ஷணங்களும் இவர்மேல் ஏற்பட்டு இவர் வேல்மெரொடக எனனும் பெயரினைப் பூண்டார். ஹம்முருபியரசனின் வமிசத்தவர்கள் இத்தெய்வத்துக்குப் பல கோயில்களைக் கட்டினுர்கள். இககாலத்தில் எபிரேயராகிய யூதசாதியாா பாபிலோனியராற் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்கள; பாபிலோனியத்தின் கடைசியரசனுகிய நபொநிதன் என்பவன் தனது சுகாநுபவத்தைப் பெரிதுங் கருதிககொண் டிருந்தமையால் ஆலயசேவையெல்லாம் குறைபாடுற்றது. இவனது புதல்வனுகிய வேல்சாசர் மீதும் புரோகிதர்களுக்கு விருப்பமில்லாமலிருந்தபடியால் பாரசீக அரசனுகிய மாற்றரசனை உவந்தேற்று அவன் கையிற் புரோகிதர்கள் அரசை ஒப்பித்தார்கள். வனுந்தரத்தி லலைந்து திரிந்த யூதசாதியார் நாகரிகமுறையைப் பயின்றுகொள்வதற்குப் பாபிலோனிய நாட்டுச் சிறைவாசம் காரணமாயிருந்தது. யூதரது ஸ்மிருதியாகிய தல்முத் என்னும் நூல் பாபிலோனிய சட்டமுறைகளைப் பின்பற்றி யெழுதபபட்டது. பாபிலோனிய நாட்டிற் கல்விச்சாலைகள் பல இருந்தன. அயல்நாடுகளிலிருந்தவர்கள் பலரும் இங்குவந்து கலவி பயின்றுர்கள்.

இனி ஆசுரேய சாதியாரது சமநிலையைப்பற்றி யொருசிறிது ஆராய்வாம். இவர்களது சக்கராதிபத்தியம் அநேக தேசங்களைத் தன்னு ளடக்கியிருந்தது.

ஒருகாலத்திற் பாரசீகம், மீதியம், பாபிலோனியம், ஆர்மீனியம், சீரியம், பினீசியம், பாலஸ்தீனம், எகிப்தின் சில பாகங்கள் ஆகிய எல்லாம் ஆசுரேய சக்கராதிபத்தியத்தின் கீழிருந்தன. இந்நாட்களில் எகிப்தின நாகரிகத்தினும் பார்க்க ஆசுரேய நாகரிகம் மேம்பாடுற்று விளங்கியது. பாபிலோனியத்தில் எல், ரு, மாாதுக எனனும் பெயாகளைகொண்ட சூரியதேவன் ஆசுரேயத்தாரால் ஆசூர் எனனும் பெயரினுற் றுதிக்கப்பட்டான் (ஆசூர் எனனும் பதததிற் சூரியனென்னும் பதத்தின் பிராதிபதிகந் தோற்றுவதும், ரு என்னும் பதததில் ரவி தொனிப்பதும், எல் என்னும் மொழி தமிழிற பரிதியங்கடவுளுக்குரிய பெயராதலும் உற்றுநோக்கற்பாலன). இச்சூரியதேவனேடு ஒப்புடைய மூவா தேவர்க ளுளர். இவா அநு, வேல், எயா என்னும் பெயரினா். மேலும் சின், ஸாமஸ், உல் என வேறு திரிமூர்த்திகளும் உளர். சின் மற்றெல்லாத் தேவர்களினுஞ் சிறந்து விளங்கினர். இவருக்கு ஊர், போர்சிப்பா. பாபிலோன், கலா, தூர்சர்க்கிஞ முதலிய இடங்களிலெல்லாம் பெரிய கோயிலக ளமைந்திருந்தன. ஆண்டின் மூன்ரும் மாதமாகிய சிவன் என்னும் மாதம் இவருக்கு உரியதாகவிருந்தது. இளம்பிறைச் சந்திரன் இவருடைய இலச்சினை; இவ்வடையாளத்தினுற் குறிககப் படுவா. அனறேல நீண்ட அங்கியணிந்த மானிடவுருவமும் சிரசில மும்முடியும் முடியின்மீது பிறைச்சந்திரனும் உள்ள உருவம் இவருடைய உருவமாகும். ஆசுரேய பாபிலோனிய காலதேயமனைத்தினும் படைத்தற் கடவுளுககு வேல் என்னும் யெருண்டு.

இல்வாறெல்லாம் மேலைத்தேசசாஸ்திரிக ளாராய்ந்து கண்டிருக்கிற முடிபுகளை நமது புராணேதிகாச முடிபுகளோடு ஒட்டி யுகதிகொண்டு ஊகிக்கக் கிடக்குஞ் சித்தாத்தங்கள் சில உள. அவற்றுள் ஒரு சிலவற்றைக் குறிப்பிடுவாம். அவற்றை முடிந்த முடிபுகள் என்று கொள்ளுதற்குப் போதிய சான்றில்லையாதலால் 'இருத்தல் கூடும்' என்னும் படியிற் கொண்டு ஆராய்வது அறிஞர்

கடன். ஸ்காந்தத்திற் சிங்கமுகாசுரன் வடமேற்குத் திசையிலுள்ள ஆசுரம் என்னும் நகரிலிருந்து வந்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆசுரம் அந்த ஆசுரந் தானோவென்று எண்ணக் கிடக்கின்றது. சிங்கமுகன் சிவபத்தியுடையவன். ஆதலால் ஆசுரத்தாரது பிரதான தெய்வமாகிய பிறைச்சந்திரனை முடியிற்சூடிய சின் என்னுந் தெய்வம் சந்திரனையுருவப்படுததிய தெய்வமோ அன்றேல், சந்திர சேகரன்ருனோ வென்று ஐயுறவேண்டி யிருககின்றது. எல், வேல், ஆசூர், எயா (அயன்), ஊர் என்னும் மொழிகளும் ஆராயற்பாலன.

தற்காலத்திலுள்ள பெரிய நகரங்களோடு ஒத்த சிறப்பினவாகிய நகரங்கள் எரிது, பாபிலோன், ஆசூர், நினிவே, நிப்பூர் என்னும் இடங்களி லிருந்தனவென்றும் இவற்றில் வசித்த மனிதர்கள் மிகவும் நாகரிகம் பொருந் தியவர்களா யிருந்தார்கள் என்றும் அறியவே இத்தேயங் களுககும் முந்தி நாகரிகமுற்றிருந்த வேறு பல தேயஙகள் இருந்திருக்க வேண்டுமென்னும் உண்மை புலப்படு கினறது. புலப்படவே மனித சாதியாரது தோற்றத்துககு எல்லை கூறுவதும், ஆறுயிர வருஷத்துக்குமுன உலக மில்லையெனறு சொலவதும மூடவாககியமாமெனபது வெளிப்படையாகும். மிகப பழமை பொருந்தியனவும் எகிப்திய யவனபுர ரோமபுர நாகரிகஙகளுக்கு உற்பத்திக் காரணமா யிருநதனவும், இயூபிருட்டஸ், றைகிரிஸ் என்னும் நதிகளின் கரையில் வளர்ந்தனவுமாகிய சுமேரிய, அககேடிய, பாபிலோனிய, ஆசுரேய, காலதேய நாகரிகங் களைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தாம். இனி இவற்றையும் எகிப்திய நாகரிகத்தையும் பின்பற்றியதாகிய எபிரேய நாகரிகத்தைப்பற்றிச் சில கூறி, அப்பால் நீல நதிக்கரையில் வளர்ந்த எகிப்து நாட்டின் நாகரிகத்தை ஆராயப்புகுவாம்.

கற்பகக்கா நீழலில் வைகுவாரேனும் அமராவதி நகரத்தாரது வாழ்க்கை அவ்வளவு சிறந்ததாகக் காணப்

படவில்லை. ஏனையதேச சரித்திரங்களை ஆராய்வதுபோல விண்ணவர் நாட்டுச் சரித்திரத்தை யாராய்ந்து எழுதுவோ மாயின் அங்குள்ளார் அமிழ்துண்டு அழியாநிலை பெற்றிருக்கும் வாழ்நாளிற் பெரும்பாகத்தை அடிமைத் தனத்திலும் சிறைவாசத்திலுங் கழித்ததாக எழுதவேண்டி வரும். ஆண்டன்மை படைத்த சூரபதுமன் இராவணேசுர ஞதியோர் பெருந்தவஞ் செய்து எல்லாரையும் ஒப்ப நோக்கும் இறைவனிடத்துப் பெற்ற அரியவரங்களினுல் வான நாடரை அடிமைப்படுத்த அவரது துன்பத்திற்கு இரங்கிய காவற்கடவுள் மண்ணிடை யுதித்து அசுரரை மடக்கிய கதைகளைக் கூறு நூல்களே நமது புராணேதி காசங்க ளாகும். இவற்றை யொப்ப எபிரேய சாதியார் எகிப்தியராலும் பாபிலோனிய ஆசுரேயராலும் பிலிஸ் தினிய ராதியோராலும் அடிமைப்படுத்தப்பட்டார்களென் றும் தம்மை அடிமையாக்கிய சாதியாரிடமிருந்து நாகரிக முறையைப் பயின்றுகொண்டார்களென்றுந் தெரியவரு கிறது. சுருக்கமாகிய இவ்வாராய்ச்சியில் இசசாதியாரது சரிததிரத்தைப் பெருக ஆராய இடமிலலையாதலின் இவர்களுடைய அரசருள் மிகச்சிறந்த சாலோமோன் அரசனுடைய காலத்தைப்பற்றி ஒருசிறிது மட்டும் கூறி முடிப்பாம்.

பிலிஸ்தினியர் என்னுஞ் சாதியாருககு யூதர் அடிமைப்பட்டிருந்த காலத்தில் சவுல் என்னும ஒரு வீரன் யூதசேனுதிபதியாக ஏற்பட்டு அம்மோனியர், மோவாபியர் அமாலேக்கியர் முதலிய சாதியார்களை வென்ருனெனினும் பிலிஸ்தினியரை வெல்லவில்லை. அக்காலத்தில் இளம் பிராயத்தில் ஆட்டிடையன் ருெழில் புரிந்தவரும் ஆண்ட வன் மேல் அளவிறந்த அன்பின் பெருக்கத்தால் இசைப் பாககளை யியற்றி அவற்றை யிசைக்கருவிகளிற் சேர்த்திப் பாடுமியல்பினரும் ஆகிய தாவீ தென்னும் அரசர் பிலிஸ் தினியரை வென்று மணிமுடிசூடிப் பெருமையுற்ருர். இவரது புதல்வரே சாலோமோன அரசர். இவர் நீதி மன்னரும் ஞானவானுமாகவிருந்தார். இவருடைய காலத்

தில் எருசலேம்பட்டணத்தின் தேவாலயம் பெரும்பொருள் செலவிட்டுக் கட்டப்பட்டது. இவ்வரசர் எகிப்து முதலிய பிறநாடுகளோடு வியாபாரத்தொடர்பு உடையவராயிருந்தார். தமிழ்நாட்டாரோடும் கொடுக்கல் வாங்கல் செய்தார். நமது மொழிகள் சில எபிரேயபாஷையிற் கலந்திருப்பது இதற்கு ஒரு சான்ருகும். தமிழ் அகில், எபிரேயமொழி அஹல்; தமிழ்த் தோகை (மயில்), எபிரேய மொழி துகிம்; வடமொழிக் கவி (குரங்கு), எபிரேயமொழி கொவ். வடமொழி இபம் (யானை) எபிரேயமொழி ஹபின். சாலோமோன் அரசனுடைய காலத்திற் பினீசிய தேசத்தாருக்குத் தலைவனுகத் தயர் என்னும் நகரத்தில் வசித்த அரசனுக்குப் பெயர் ஹிராம் என்பது. பினீசியர் கப்பலோட்டு மாலுமித்தொழிலிற் சிறந்தவர்கள். இவர்களைத் துணைக்கொண்டு சாலோமோன் அரசனுடைய கப்பல்கள் மூன்ருண்டுக் கொருமுறை கிழக்குத் தேசங்களுக்குப் போய் ஒபீர் என்னும் துறைமுகத்திலிருந்து பொன், வெள்ளி, யானைத்தந்தம், மயில், குரங்கு, நவமணி முதலியவற்றை ஏற்றிக்கொண்டு போயினவென்று தெரியவருகிறது. ஒபீர் இலங்கைத்தீவாக இருத்தல் வேண்டுமெனபது பலரது துணிபு. பினீசியருடைய நாகரிகமுஞ் சிறப்புற்றிருந்தது. இதனை யவனபுர நாகரிகத்தை ஆராயும்போது ஆராய்வாம்.

5. எகிப்திய நாகரிகம்.

கேரளதேயத்திலிருந்து கப்பலேறிச் சூரியாஸ்தமன திசையை நோககி நேராகப் போவோமாயின் பலநூறு காவதங்கள் கழிய மேற்றிசைக் கடலின் எல்லை வந்தெய்தும். இவ்வெல்லையி லுள்ளது ஆபிரிககாக் கண்டமெனப் பெயரிய பெருநிலப்பரப்பு. இதன் வடபாரிசத்தில் முன்னாளிற் சாகரமாயிருந்து இந்நாளிற் பாலைவனமாயிருக்கிற சகரா வனாந்தரம் பரந்து கிடக்கின்றது. சகராவுககுக் கிழககே அதாவது ஆபிரிககாக் கண்டதகின் வடகிழககுக் கோடியிலே நீலநதி பாய்தலினாற் பலவகை வளங்களும் பொருந்திய எகிப்து நாடு உளது. இந்நாட்டிற்குச் செல்வமளிககும் நீலநதி தெற்கே யுதித்து வடக்கு நோக்கி யோடி நாட்டின் நீள முழுவதையும் கடந்து ஆபிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடுவணதாகப் பொருந்தியிருக்கும் மத்தியதரைக கடலினுட் பாய்கின்றது. ஆசியாவின் தென்மேற்குக் கோடியிலுள்ள அராபி நாட்டினையும் எகிப்து நாட்டினையும் பிரித்துநிற்பன செங்கடலும் சுவெஸ கால்வாயுமாம். நமது நாட்டிலிருந்து மேனாட்டுக்குச் செல்வோர் செங்கடல், சுவெஸ் கால்வாய், மத்திய தரைக்கடல் இவற்றைக் கடந்து அத்லாந்திச் சமுத்திர வாயிலாகச் செல்வா. முன்னாளிற்போலவே இந்நாளிலும் எகிப்து நாடு மேற்றிசைச் செலவமும் கீழ்த்திசைச் செல்வமும் ஒனறுசேர்தற் குரிய நாடாக விருக்கின்றது. இந்நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் பூர்வசம்பந்த முள்ளதாதலால் இதனது நாகரிக வியல்பைச் சற்று விரிவாக ஆராய்வாம்.

எகிப்தியர் நீலநதிக் கரையை யடைவதற்குமுன் கிழக்கிலிருந்து கடல் கடந்து வந்ததாக அவர்களது பூர்வ சரித்திரஞ் சொல்லுகிறது. தமது பூர்வ தேயத்தை

எகிப்தியர் 'பண்டு' என்னும் பெயரால் வழங்கினர். பண்டுதாம் இருந்துவந்த நாட்டினைப் 'பண்டு' என வழங்கினரோ வென்பது ஆராயற்பாலது. பூர்வ எகிப்தியர் ஏழாயிரத்துச் சில்வானம் வருஷங்களுக்கு முன்னர் இருந்தார்களெனினும் அவருடைய அரசர் பலரது உடலங்கள் மருந்திட்டுச் சேமிக்கப்பட்டிருககின்றன வாதலால் அவற்றை யின்றும் பார்க்கலாகும். திராவிடரும் பூர்வ எகிப்தியரும் ஒரே குலமுறையில் வந்தவரென்பது ஹக்ஸ்லி முதலிய சாஸ்திர விற்பன்னர்களுடைய கருத்து. சென்ற ஆண்டிற் கிரேத தீவிற் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலுள்ள மொழி திராவிடமொழிகளோடு சம்பந்த முடையதென மேனாட்டு அறிஞர் கூறுகின்றனா. பூர்வ எகிப்தியர் ஆதியிற் சித்திரங்களால் மொழிகளைக் குறியீடு செய்தனர். பின்னுளில் வரி வடிவெழுத்தைக் கிரேத தீவத்தாரிடமிருந்து பயின்றுகொண்டனர் என்று எண்ண இடமுண்டு. கிரேத தீவத்தாருடைய நாகரிகத்தைப்பற்றி யும் உலகில் வடிவெழுத்து உண்டான காலத்தைப் பற்றியும் பின்னராராய்வாம். எகிப்து நாட்டினது நாகரிகத்தை யாராயும்போது முதலிலே காணப்படுகிற சிறப் பியல்பு எதுவோவென்னில் தொன்றுதொட்டு இந்நாடு உணவுப்பொருள் முதலியவற்றுற் குறைவுபாடில்லாத தாய்ச் செல்வவளம பொருந்தியதாய் இருந்தமையினுல் இந்நாட்டார் பிற நாட்டுககுச் சென்றுரல்லா. பிற நாட்டார் இந்நாட்டுச் செலவத்தைக் கவர விரும்பிப் பல முறை படையெடுத்து வந்து இந்நாட்டினைப் பற்றி அரசு புரிந்தனர் என்பது. தற்காலததிற் சுவெஸ்கால்வாயைப் பரிபாலிப்பதற்காக ஐரோப்பிய ராஜாங்கங்கள் எகிப்தின் அரசியலோடு தொடர்புடையனவா யிருக்கின்றன.

சென்ற ஒருமாத காலமாக வர்த்தமானப் பத்திரிகைகள் எகிப்து நாட்டினைப்பற்றி யிருவேறு வகையான விசேஷ சமாசாரங்களைத் தந்துவருகின்றன. அவற்றுள் ஒன்று, எகிப்துநாட்டின் தற்கால அரசியல் நிலையைப் பற்றியது. காருணிய ஆங்கில அரசாங்கத்தார்

எகிப்து நாட்டுக்குப் பூரணசுதந்தரம் கொடுத்துவிட்டார்களென்றும், அங்ஙனமாயினும் அலன்பி பிரபுவும் ஆங்கில சைனியங்களும் இன்னும் எகிப்திலிருந்து புறப்படவில்லையென்றும், எகிப்திய தேசாபிமானியாகிய சாக்லுல் பாஷா இன்னுஞ் சிறைச்சாலையிற்றான் இருந்து வருகிறாரென்றுங் கூறுவது. மற்றொன்று எகிப்து நாட்டிலுள்ள லுகசொர் நகரத்துக்குச் சமீபத்தில் துதங்காமன் என்னும் பூர்விக அரசனொருவனுடைய சமாதிககட்டிடங் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதனுட் பொன்னாலும் மணியாலும் அலங்கரிககப்பட்ட அழகுபொருந்திய கருங்காலிக் கட்டில்களும், நவமணி யிழைத்த ஆபரணங்களும் விலையுயர்ந்த பிறபொருள்கள் பலவும் அகப்பட்டனவென்றும், அவற்றினைக் கண்டுபிடித்த கார்னார்பன் பிரபு அறிவு விருததியைக கருதினவரே யன்றிப் பொன்னையும் மணியையும் பொருட்படுத்துபவரல்ல ராதலால் ஏற்கனவே எகிப்திய அரசாங்கத்தாரோடு செய்துகொண்ட உடம்படிக்கையிற் றமசகுப பங்குவேண்டாமென்று சொல்லிவிட்டாரென்றும், அங்ஙனமாயினும் வழககப்படி அவருக்கு அரைப்பங்கு கொடுப்பது மரபா மெனவுங் கூறுவது. துதங்காமனுடைய சமாதிககட்டிடத்தைப் பார்வையிடுவதற்காக இங்கிலாந்து, பிரஞ்சு, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கலைநூல்வல்லோருஞ் செல்வப்பிரபுககளும் வந்து சேருகிறார்கள். மேற்றிசை யறிஞருசகு எகிபது தேசத்தின்மீது இத்தனை யார்வ முண்டாவதற்குக் காரண மென்னவெனில், தற்கால ஐரோப்பிய நாகரிகத்துககுத் தாயகமாகிய யவனபுர ரோமபுர நாகரிகஙகள் உண்டாவதற்கு முற்பட்டதாய் அவை யனைததுசகும் நிலைககளமாய் இருந்ததுவும் ஆசுரேய, பாரசீக, எபிரேய, பினீசிய, கிரேத (Cretan) நாகரிகஙகளோடு தொடர்புடையதுவும் எகிப்திய நாகரிகமாதலானும், பிரேதசேமக கட்டிடங்களிற் காணப்பட்ட கல்வெட்டுககளைக் கொண்டு எகிப்தின் சரித்திரத்தைத் தொடர்ச்சியாகவே அறிந்துகொள்ளுதல் கூடு

மாதலானும் மேற்றிசை யறிஞர்கள் எகிப்திய புராதன ஆராய்ச்சி (Egyptology) என ஒரு கலைநூற் பிரிவு ஏற்படுத்திப் பெருக ஆராய்ந்து வருகிறார்கள்.

அஃதன்றியும் பின்னுளில் ஒருவர்பின் ஞெருவராய்ப் பலவேறு சாதியார் எகிப்து நாட்டினைக் கைப்பற்றி, அதிகாரஞ் செலுத்தினராதலால் அச்சாதியார் பலருடைய சரித்திரத்தை யாராய்வதற்கும் எகிப்திய சரித்திர வாராய்ச்சி யின்றியமையாத தொன்றும். பூர்வ எகிப்தின் நாகரிக உயர்ச்சிக்கு அறிகுறியாக இன்றும் நின்றுநிலவு கின்ற 'பிரமிட்ஸ்' (Pyramids) எனப்படும் பிரேதசேமக் கட்டிடங்களின் அமைப்பை நோககும்போது இன்றைக்கு ஆருயிரத்துச் சில்வானம் ஆண்டுகளுக்கு முன் அவற்றைக் கட்டி முடித்த பூர்வ எகிப்தியர் அக்காலத்துக் குப பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உயர்ந்த நாக ரிகம் படைத்தவாகளாக இருந்திருககவேண்டும் என்பது புலப்படுகின்றது. உலகில் நாகரிகம் ஏற்பட்ட காலத் துககு முற்றெல்லை கூறுவது ஒருவாற்றுனும் இயலாத தொன்றும். தற்கால ஐரோப்பியா நாகரிகம் அடைந்த காலம் மிக அணித்தானதாதலின் சில்லாயிரம் ஆண்டுக ளுககுட்பட்ட தமது முன்னேற்றத்தை யளவுகோலாகக் கொண்டு ஏனையோரும் தம் முன்னேரைப்போலவே யிருந் திருக்கவேண்டும் என்ற சித்தாந்தத்தை யேற்படுத்தி உலகு நாடோறும் மேனிலையை யடைந்துகொண்டு போகின்ற தென்பர். இனி, நாமோவென்றுற் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பு நமது முன்னேர் சீருற்றிருந்தா ரென நமது நூல்கள் கூறுகின்ற வாதலின் உலகு காலாந் தரத்திற் கீழ்நிலையை யடைந்துகொண்டு போகின்ற தெனபோம். இரு சாராருடைய கொள்கையும் . ஒரு வகையில் உண்மையேயாயினும் இவ்வுலகு உயர்வது மின்றித் தாழ்வதுமின்றி மிக மிகப் பூர்வகாலந் தொட்டு ஒரேபடித்தாக விருககிறதென்பது பொருத்தமான முடி பெனல் பிழையாகாது. வடகோடி யுயரத் தென்கோடி தாழ்வதும், குடபாலிற் செல்வம் மிகுதலால் குணபால்

வறுமையுறுவதும், குணபால் உயர்ச்சியடையக் குடபால் தாழ்வதும் இயல்பேயாகும். இந்நாளிற் பல தேயங்களுக கிடையிற் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டிருப்பதுபோல அந் நாளிலும் கலத்தில் செல்வதும் பண்ட மாற்றுவதும் இருந்ததென்பதற் கையமில்லை. இந்நாளிலுள்ள இயந்திரக் கப்பல் விரைவிற் செல்வன. அந்நாளிலுள்ள மரககலங் கள் காற்றோட்டத்துக் கேற்றவாறு விரைந்தோ பதமை யாகவோ செல்வன; இதுவே வேறுபாடு.

எகிப்து நாட்டின் நாகரிகம் கலியுக ஆரம்பத்துக்கும் முந்தியதென அறிகிறோம். ஆயினும் விரிவஞ்சி இவ் வாராய்ச்சியிற் கலியுக ஆரம்பந் தொட்டு மேல்நடந்த காலத்திற் சம்பவித்த ஒருசில விசேஷக் குறிப்புகளை மட்டுஞ் சொல்லி முடிப்பாம். கலியபதம் 5024-ஆம் ஆண்டு நடக்கிறது. ஆதலிற் கலியுக ஆரம்பம் கி. மு. 3101-ஆம் ஆண்டு ஆதல் வேண்டும், பெபபி 1 (Pepy I) என்னும் எகிப்திய அரனுடைய காலம் கி. மு. 3447-ஆம் ஆணடு என நிச்சயிககபபட்டிருககிறது. அதாவது கலியுக ஆரம்பத்துககு 346 வருஷங்களுககு முன்னே பெப்பி என்னும் அரசன எகிப்தில் அரசுபுரிந்தான என்பதாம். இவன் ஆறுவது இராஜவமிசத்தவன். இவனுடைய காலத்துககு முன்பு ஐந்து இராஜவம்சங்கள் அரசாட்சி புரிந்தன; அவற்றின் காலவெல்லை எத்தனை நூற்றாண்டுகளோ அறியோம். இக்காலத்தில் மெம்பிஸ் (Memphis) என்னும் நகரம் எகிப்தின் ராஜதானியா யிருந் தது. இக்காலம் புராதன பாரம்பரிய காலமென்னலாம். இக்காலத்திற்றான் பிரமிட்ஸ் என்னும் பிரேதசேமக்கட்டிடங் கள் கட்டப்பட்டன. இககட்டடங்கள் இனறும் அழியா திருக்கின்றன. இவற்றைக கட்டினவர்களுடைய சிறபநூல் வன்மைக்கும் லக்ஷக்கணக்கான சனங்களுக்கு உணவு முதலியன கொடுத்து இப்பாரிய கட்டிடங்களைக் கட்டு வித்த அரசர்களுடைய செல்வப் பெருக்கத்துக்கும் இக கட்டிடஙகளே சாட்சியாக நிற்கின்றன. இக்காலத்திற

போல அக்காலத்தில் வரிப்பணம் வாங்குகிற வழக்கம் இருந்ததில்லை. அறுப்புக்காலம் முடிந்தபின் சனங்கள் மூன்று மாசத்துக்கு அரசனுடைய பணி செய்யவேண்டும். அவ்வாறு பணிசெய்கின்ற நாட்களில் அவர்களுக்கு வேண்டிய உணவு முதலியன அரச களஞ்சியத்திலிருந்து கொடுக்கப்படும். அரசருடைய சொந்த வயல் நிலங்களிலிருந்து விளைந்து வருகிற நெல் பிரஜைக ளனைவரும் உண்டு மிஞ்சத்தக்க அளவினதா யிருக்கும். 'பிரமிட்ஸ்' கட்டப்பட்டிருக்கிற நகரத்துக்குப் பெயர் 'கீசே' என்பது. கலியுக ஆரம்பத்துக்கு 234 வருஷங்களுக்குமுன் 'தீப்ஸ்' என்னும் நகரம் ராஜதானி யாயிற்று. இதுமுதல் கலி 1500-ஆம் ஆண்டுவரையுமுள்ள காலத்தை மத்திய பாரம்பரிய காலம் என்னலாம். இக்காலத்திற் கட்டப்பட்ட சிறந்த கட்டிடமாகிய 'குளத்தலை முற்றக் கோயில்' (Lopero hounit temple at the head of the lake), மொயெறிஸ் என்னும் குளத்தின் வாயிலில் அமைக்கப்பட்டுப் பேரழகு வாய்ந்திருந்தது. இதனைப்பற்றி ஹெறொடொற்றஸ் என்னும் யவனபுர அறிஞர் தாம் எழுதிய இதிகாசநூலிற் சொல்லியிருப்பதை மொழிபெயர்த்துத் தருவாம். 'இக்கோயிலின் அழகு சொல்லால் வணிக்குந்தரத்ததன்று; யவனபுரத்திலுள்ள கட்டிடங்கள் அனைத்தும் ஒருங்குசேரினும் இதனோடு இணைசொலல வாரா. யவனபுரத்தில் எபேசஸ் பட்டினத்திலுள்ள கோயில் சிறப்பு வாய்ந்தது. சமோஸ் நகரிலுள்ளதும அத்தகையதே யாயினும் யவனரது செய்தொழில் வன்மை யனைத்துந் திரண்டாலும் செய்துமுடிக்க வொண்ணாத இத்திருமனை எகிப்திய ரியற்றிய பிரமிட்ஸினையும் வெல்லுந்தகைமையது.' - இவ்வாறு புகழப்பட்ட இக்கட்டிடம் முற்றாக அழிந்து போயிற்று. ஆயினும் இது அரசர் வசிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு பெருமாளிகை யென்பது அறியக் கிடக்கின்றது. கலி 343-இல் அரசுபுரிந்த எகிப்திய அரசன் பெயர் உசேர்தசன் என்பது. இவனுடைய காலத்தில் சனங்கள் எவ்வாறு வாழ்ந்தார்களென்று

அறிவதற்கு அக்காலத்திலிருந்த அமெனியென்னும் அரமனை யுத்தியோகஸ்தன் ஒருவனைப்பற்றி யெழுதினதை மொழிபெயர்த்துத் தருவாம்: 'அரசருடைய தொழிற்சாலை களை நேர்மையொடு மேற்பார்த்துவந்த அமெனி, எல்லா நற்குணங்களும் நிறையப்பெற்றவனா யிருந்தான். வறியோருடைய சிறுவரையும் கணவனை யிழந்த உயவற் பெண்டிரையும் இவன் ஒருபோதும் வருத்தியதில்லை. தனது மேற்பார்வையின் கீழிருந்த நாடனைத்தினையும் நெல்விளையும் நாடாக்கினா னதலால் பஞ்சகாலத்திலும் சனங்கள் பசியால் வருந்தினாரலலர்.' - முன்னாளிலிருந்த மன்னாகள் உணவுப்பொருள்களை விருத்திபண்ணுவதிற் கண்ணுங் கருத்துமா யிருந்தாாகள். மத்திய பாரம்பரிய காலத்துக்குப் பிந்திய காலத்தை நவ பாரம்பரிய காலம் (New Empire) என்னலாம். இக் காலத்திற்றான் எகிப்துநாட்டிற் குடியேறியிருந்த எபிரேயர் அந்நாட்டினை விட்டு மோசேஸ் என்னுந் தலைவரால் வழி நடத்தப்பட்டுப் பாலைவனங் கடந்து பலஸ்தீனத்தை யடைந்தது. எபிரேயர் யாத்திரைக காலம் கலி 1900-ஆம் ஆண்டாக விருக்க வேண்டும். இக்காலத்திலிருந்த பார்வோன் (பாரோன், Pharoah) மன்னன் பெயர் இரண்டாம் இராமேசு. இதனோடு சம்பந்தப்பட்ட கதைகளும் பாபிலோனிய ராச்சியம் அழிவுற்ற கதை முதலியனவும் விவிலிய நூலின் பூர்வபாகத்திற் காணப்படுவன. இதற்குச் சற்று முந்திய காலத்தில் ஹைக்ஸோஸ் (Hyksos) என்னும் பொதுவ மன்னர்கள் (Shepherd kings) எகிப்தினைக் கைப்பற்றி அரசியல் நடத்தி வந்தார்களா. ஆசுரேய மன்னராகிய சினக்கிரிபு எகிபதுக்குப் படையெடுத்துவந்த காலம் கலி 2388-ஆம் ஆண்டு ஆகும். கலி 2485-இல் நெக்கோ என்னும் பார்வோன் அரசுபுரிந்தான். அவனுடைய காலத்தில் எகிப்திய மரக்கலங்கள் ஆபிரிக்காக் கண்டத்தைச் சுற்றி யோடினதாக அறிகிறோம். இக்காலத்தின் பின் அரசனுடைய கொடுங்கோலினாலும் சமயக் கணக்கர் களாகிய குருவகுப்பினருடைய கொடுமையினாலும்

சனங்கள் வறுமையுற்று வலியிழந்தனராக, வேறு சாதியார் ஒருவர்பின் ஒருவராய் எகிப்து நாட்டைக கைப்பற்றினர். சைறஸ் என்னும் பாரசீக அரசன் கலி 2549-இல் (அதாவது புத்ததேவர் உலகில் வசிதத காலத்தில்) எகிபது நாட்டைக் கைப்பற்றினுன்; அவனை மேற்கொண்ட அலெகசாந்தர் சக்கரவர்த்தி யென்னும் யவனபுர மன்னர் கலி 2769-இல் எகிப்து நாட்டில் தம்முடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினர். இவருடைய இராஜதானி இன்றும் அலெகசாந்திரியா என்னும் பெயரோடு நின்று நிலவுகின்றது. அலெகசாந்தருடைய காலத்துக்குப் பின் அவருடைய சக்கராதிபத்தியம் அல்லோலகலலோலப்பட்டுவிடடது. எகிப்து நாடு இரு நூறு ஆண்டுகளுககுச் சுய அரசுடையதாகித் தொலமி (Ptolemy) எனனும் வமிசத்தாராற் பராமரிக்கப்பட்டு வந்தது. அந்தொனி என்னும் ரோமானிய மன்னருடைய உள்ளத்தைக கவர்ந்த பேரழகு வாய்ந்த கிளியோப்பத்திரா என்னும் ராணி, தொலமி வமிசத்தைச் சேர்ந்தவள். இவளுடைய காலத்தோடு எகிப்திய நாகரிகம் அழிந்து போயிற்று. தொலமி வமிச காலததில் கல்வி மிகவும் சிறப்புறப் பரிபாலிககப்பட்டு வந்தது. வானநூல் முதலியன பெருக ஆராயப்பட்டுவந்தன. கலி 2971-இல் ரோமபுரச் சக்கரவாத்தியாகிய ஆகஸ்டஸ் மன்னர் எகிப்தினைக் கைப்பற்றினுர். அதன்பின் சில நூற்ருண்டுகள் கழிய எகிப்தில் கிறிஸ்தவ சபையொன்று ஏற்பட்டது. மதோன்மத்தம் பிடித்த ஆதிக் கிறிஸ்தவர் கல்விச்சாலைகளை யழிதததுவும் ஹைபேசியா என்னும் கலைச்செலவிககுச் செய்த அவமானங்களும் எழுதுந் தரத்த வல்ல. இதனபின் அராபியர் எகிப்து நாட்டைக கைப்பற்றி நெறி தவருது அரசியல் புரிந்து வருவா ராயினுர்.

மேற்காட்டிய சுருக்க வரலாற்றினுல் எகிப்து நாட்டுககும் பிற நாடுகளுக்கும் உள்ள தொடர்பினை விளககினும். எகிப்து நாட்டுககும் தமிழ்நாட்டுக்கு முள்ள தொடர்பினைச் சுருக்கமாக விளக்கும்பொருட்டுப் பல

கலையும் கற்றுவல்ல அறிஞரும் தவப்பெருஞ் செல்வரு மாகிய ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் 'பரிவ்ராஜகம்' என்னும் நூலில் எழுதியிருக்கிற சில குறிப்புகளை மொழி பெயர்த்துத் தருவாம். பரிவ்ராஜகமென்னும் நூல் சுவாமிகள் இரண்டாம் முறை மேற்றிசை செல்லும்போது தமது யாத்திரையைப்பற்றி யெழுதிய விருத்தாந்தமாகும்.

'கப்பல் வடக்குநோக்கிச் செங்கடலி னூடாகச் செல்லுகிறது. இககரையிற் பரந்து கிடப்பது பூர்விக எகிப்து தேயம். பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு பண்டு (மலையாளதேயம் என்று எண்ண இடமுண்டு) என்னும் நாட்டிலிருந்து வந்த எகிப்தியர் இந்நாட்டிற் சிறந்த நாகரிகத்தை விருத்திபண்ணினார்கள். யவன புரத்தார் இவர்களுக்கு மாணுக்கராவார். பூர்வ எகிப் தியருடைய கட்டிடங்கள் இன்றும் நிலைத்திருக்கின்றன. இவர்கள் சுருள்குழலும் காதணியு முடையவர்களாய் சுத்த வெண்ணிற வேட்டி யணிபவர்களா யிருந்தார்கள்.

'தொலடியர் காலத்தில் அசோகச் சக்கரவர்த்தி எகிப்துக்குப் புத்த சந்நியாசிகளை யனுப்பிவைத்தார்.

'கரு நிறமும் நீண்ட மயிரும் நேரிய மூக்கும் சரிவில் லாத கரிய விழியும் உடைய ஒரு சாதியார் பூர்வ எகிப் திலும் பாபிலோனியத்திலும் வசித்தார்கள். அச்சாதியார் இந்நாளில் இந்தியா முழுமையிலும் விசேஷமாகத் தெற்குப் பாகத்திலும் வசித்துவருகிறார்கள். ஐரோப்பா வின் சில பாகங்களிலும் இவர்களைக் காண்டல் கூடும். இவர்களே திராவிட ரெனப்படுவர்.'

6. யவனபுரத்துக் கலைச்செல்வம்.

இனி, யவனபுரத்து நாகரிக வளர்ச்சியை ஆராய்வா னெடுத்துக்கொண்டாம். இந்நாடு அழகு, அன்பு, ஞானம், கவித்துவம் என்னும் இவற்றிற்கு உறைவிட மாய் மேலைநாடனைத்தும் உய்யுமாறு அறிவுச்சுடர் பரப்பி நின்றது என முன்னமே கூறினும். ஹோமர் என்னும் கவிச்சககரவர்ததி பிறந்த நாடிது; சாக்கிரட்டீஸ், பிளேற்றோ, அறிஸ்ரொட்டில் என்னும் தத்துவஞானிகளைத் தோற்றுவித்த தாய்நாடிது; கண்கவர் வனப்பினையுடைய ஆடவரையும் பெண்மக்களையும் அளித்த அழகுவாய்ந்த நாடிது. அரசியல் மரபும் சிறந்து விளங்கிய நாடிது வாதலின் இதன் பெருமையை ஆயிரம் அறிஞர் ஆயிரம் எழுதுகோல்கொண்டு எழுதுவாரெனினும் நிறைவுறக் கூறுரென்பது புனைந்துரையாகாது. அங்ஙனமாதலின், மிகச்சுருங்கிய இவ்வாராய்ச்சியில் இப்பரந்த பொருளை யாங்ஙனம் நடாத்துவோமெனின், பலதுறைப்பட்ட பொருணமீதும் சில சில கூறிக் கலைச் செல்வமாகிய ஒருதுறைப்பொருளை விரிவுறக கூறி ஒருவாறு முடிப்ப மெனபது.

யவனபுரவாசிகள் யாண்டிருந்து யவனபுரத்துக்கு வந்தனர்? இவரோடு ஒத்தகுலததினராவர் யாவருளர்? தமிழரும் பரதகண்டவாசிகளும் ஆகிய எமக்கும் இவர்க் கும் இயைந்த தொடர்புதான் எனனை? என்னும் இவை முதறகண் ஆராயற்பாலன. கலி 2774-ஆம் ஆண்டில் அலக்சாண்டா என்னும் யவனபுரத்துச் சககரவாத்தி சிநதுநதிதீரத்தை நோககிச் சைங்யங்களோடு வந்து பரத கண்டத்தின ஒரு பாகத்தில் வெற்றிக் கொடி நாட்டினு ரெனவும், அதற்கு இருபததிரண்டு ஆண்டுகளுக்குப் பின்

சந்திரகுப்தன் என்னும் பெயர்பூண்ட பாரதகண்டத்துச் சக்கரவர்த்தி யவனசேனைகளை வென்று வாகைமாலை சூடிச் சார்வபௌமனாக அரசுபுரிந்தனனெனவும், இவன யவனபுரத்து அரசிளங்குமரி யொருத்தியை மணந்தானெனவும் இவனது சமஸ்தானத்திற் சிலகாலம் வதிந்த மெகஸ்தினீஸ் என்னும் யவனபுரத்தறிஞர் பரத கண்டத்தின் இயல்பினை விரித்துரைக்கும் ஒருநூல் செய் திருக்கிறாரெனவும் இம்மன்னனுக்குப் பின் அரசுபுரிந்த பிந்துசாரமன்னனது காலத்திலும் அதற்குப்பின் பட்டத் துக்குவந்த அசோக சக்கரவர்த்தியின் காலத்திலும் பரத கண்டத்துககும் யவனபுரத்துக்கும் நெருங்கிய தொடர் பிருந்ததாமெனவும், பௌத்தமத சந்நியாசிகள் யவன புரத்துக்குச் சென்று மதபோதனை செய்தார்களெனவும் தாலேஸ், எமபெடோக்கிளீஸ், அனெக்ஸாகோரஸ், டெமோகிறிற்றஸ், பைதாகோராஸ் என்னும் யவனபுரத் தறிஞர்கள் பரதகண்டத்துக்கு வந்திருத்தலகூடுமெனவும், எம்பெடோககிளீஸினுடைய கொள்கை சாங்கிய மதக் கொள்கையையும். சாக்கிரட்டீஸினுடைய ஞானம் வேதாந்தஞானத்தையும் நிகாத்திருப்பதாமெனவும் பல நூல்வாயிலாக அறிகின்றோம்.

மன்னன் கரிகால்வளவனுடைய காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் முசிறியினும், காவிரிப்பூம்பட்டினத்தினும் யவனவர்த்தகர் வந்து வதிந்திருந்தனரெனச் சிலப்பதி காரம் ஆதியாய தமிழ்நூல்களானறிகின்றோம். அஃதன்றி யும், யவனபுரவாசிகளது பூர்வநிலையம் ஆசியாக்கண்டத் திலேயே இருந்தது; அவரது சமயநெறி, கலைமரபு ஆதியன நமது ஆரிய முன்னோரது ஒழுககவழக்கங்களை நிகர்த் திருந்தன. யவனபுரத்துமொழி வடமொழியோடு நெருங் கிய தொடர்புடையது. இவற்றானும் இன்னோரன்ன பிற காரணங்களாலும் யவனபுரத்தார் ஆரிய வகுப்பின ரென்பதாக ஆராய்ச்சிவல்ல பண்டிதர்கள் நிச்சயித்துச் சொல்லுகிறார்கள். கலி இரண்டாயிரம் அதாவது கிறிஸ்தவாப்தத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட

காலத்திலே யவனபுரத்தார் வடக்கிலுள்ள அயற்றேயங்களிலிருந்து வந்து யவனபுரத்திற் குடியேறினரென்பதாக அறிகின்றோம். இவர் வருவதற்குமுன்பு அந்நாட்டிலிருந்தோர் ஏஜியர் என்னும் ஜாதியார். உயர்ந்த நாகரிகமுடைய இச் சாதியாரும் கிரேத தீவத்தாரும் திராவிட வகுப்பினராமென ஐரோப்பிய பண்டிதர்கள் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பூர்வ யவனர் அக்கேயர், டோரியர், அயேலியர், அயோனியர் எனப் பலவகுப்பினராயிருந்தனர். ஒன்றுசேர்ந்த பின்னர் ஹெல்லேனியர் என்னும் பொதுப்பெயர் இவர்க்கு உளதாயிற்று. இவர் உறைந்த நாடு ஹெல்லாஸ் என்னும் பெயரினைப் பெற்றது. யவனபுர நாகரிகத்துக்கு முற்பட்ட பாபிலோனிய, ஆசுரேய, பினீசிய, எகிப்திய, கிரேத, ஏஜிய நாகரிகங்கள் ஹெல்லேனிய நாகரிகத்துக்கு வழிகாட்டிகளாக நின்றன.

ஹோமர் என்னுங் கவிச்சக்கரவர்த்தி யியற்றிய வீர காவியங்கள் இரண்டும் பலநூற்றாண்டுகளாக எழுதா மரபினவாக விருந்தனவாமென அறிகின்றோம். நமது சுருதிகளும் அவ்வண்ணமே யிருந்தனவாகலின் அக்கர விலககணம் தோற்றுதற்கு முன்னமே அருங்காவியங்கள் தோற்றுதல் கூடுமென்னும் உண்மை நிலைபேறுடையதாகின்றது. இத்தொடர்பிலே, தமிழெழுத்து வரலாற்றைப்பற்றி ஒருசில குறிப்புகள் கூறுதல் மற்றொன்று விரித்தலாமாயினும் தமிழாராய்ச்சியாளர்க்குப் பயன்றருவதாமாதலின் எழுதன் மேற்கொண்டாம்.

பழைமை வாய்ந்த வடமொழி, தென்மொழி யிலக்கண நூல்கள் எழுத்துக்களின் வரிவடிவ விலக்கணத்தையுந் தருகின்றனவாதலின் அக்கரவிலக்கண மேற்பட்ட காலம் அவற்றுக்கு முற்பட்ட காலமாக விருத்தல்வேண்டும். வடமொழி யிலக்கண நூல்களாகிய காலாப, சாந்திர, சாரஸ்வத, முக்தபோத, சுபத்ம, ஹேமசந்திர வியாகரணங்க ளனைத்தினுக்கும் முற்பட்டதாய்த் தனித்தலைமை சான்று விளங்குவது

பாணினீய வியாகரணம். பாணினிமுனிவர்க்கு முற்பட்ட யாஸ்க முனிவரா சாகடாயனம், சாகல்யம், கார்க்கியம் என்னும் வியாகரணநூல்களை மேற்கோளாகக் காட்டினர்; இவையனைத்தினுக்கும் முற்பட்டது ஐந்திர வியாகரணம். பாணினி முனிவர் தந்த சிறந்தநூல் தோன்றியபின்னர் அதற்கு முற்பட்ட நூல்கள் வழக்கொழிந்து வீழ்ந்தன. இக்காலத்தில் வழங்குஞ் சாகடாயனம் வேறு, பூர்வ சாகடாயனம் வேறு என்ப. தமிழிலக்கண நூல்களாகிய நன்னூல், தொன்னூல, சின்னூல் எனப் பெயரிய பன்னூல் களுக்கும் முற்பட்டு ஒப்புயர்வின்றி விளங்குவது தொல் காப்பியம். தொல்காப்பியம் எழுந்த காலத்து ஐந்திரவியா காரணம் வழக்கிலிருந்தமையானும், தொல்காப்பியர் நூலியற்றிய காலம் வியாசபகவான் வேதங்களை வகுத்த காலத்துக்கு முற்பட்டதாமென ஆசிரியர் நச்சினார்க் கினியாருரைத்தா ராதலினாலும் பிற காரணங்களாலும் தொல்காப்பியமானது பாரதயுத்தகாலமெனச் சரித்திர ஆராய்ச்சியாளரால் நிச்சயித்துரைக்கப்பட்ட கலி 1600 (கி. மு. 1500)க்கு முற்பட்ட தாதல்வேண்டும். பாணி னீயம் கலி 2700 வரையிற் றோன்றியதென ஆராய்ச்சி யாளர் கூறுவர். தொலகாப்பியத்துக்கு முற்பட்ட ஐந்திரம் சுருதிநூல்போல் எழுதாமரபினதா யிருந்ததோ எழுதப்பட் டிருந்ததோ வரிவடிவ இலக்கணத்தைத் தந்ததோ தாரா தொழிந்ததோ என்பன ஒருவாற்றானும் நிச்சயித்தல் கூடாத முடிபுகளாம். வடமொழியாளர் வரிவடிவெழுத் தைத் தமிழ் மொழியாளரிடமிருந்து பயின்றுகொண்டா ரென்பது றைஸ்டேவிட்ஸ் முதலிய ஆங்கில பண்டிதர் களுடைய சித்தாந்தமாகும். தேவநாகரலிபி பூர்வத்தில் எழுதப்பட்ட உருவத்தில் மேலிழுக்கப்பட்ட கோடின்றி யிருந்ததெனவும், அவ்வுருவத்தில் அதற்கும் தென்னாட்டில் வழங்குகிற •கிரந்தலிபிக்கும் ஒற்றுமை யிருந்ததெனவும் அறிஞர் கூறுவர். கிரந்தலிபி பழந்தமிழெழுத்தைப் பின் பற்றி யெழுந்தது. பழைய சாசனங்களில் வழங்குகிற வட்டெழுத்துத் தொல்காப்பியர் காலத் தெழுத்தினின்றுந்

திரிவுபட்டதாமாயினும் உள்ளவற்றுட் பழமையான தாதலின் அதனையே பழந்தமிமிழெழுத்தெனக் கொள்வாம். இப்பழந்தமிழெழுத்துகளும் யவனபுர அக்ஷரத்துகளும் உருவ ஒற்றுமை யிருக்கிறது.

யவனபுர மொழியின் நெடுங்கணக்கு இருபத்து நான்கு எழுத்துக்களைக் கொண்டது; உயிரெழுத்து ஏழு, மெய்யெழுத்துப் பதினேழு; சந்தியக்கரங்கள் பலவுளவாயினும் அவை ஈரெழுத்துக்கூடிய வரிவடிவினவாதலின் தனியெழுத்தென ஆராய்தல வேண்டா. மெய்யெழுத்துப் பதினேழனுள் தமிழ் மொழிக்கும் யவனபுர மொழிகளும் ஒலியுருவத்தாற் பொதுவெழுத்தாவன ப, க, த, ல, ம, ந, ர, ச என்னும் எட்டுமாம். இருமொழிகளும் பொதுவாகிய இவ்வெட்டு மெய்களும் ஒத்த வரிவடிவினவாக விருககினறன. உயிரெழுத்துக்களுள் ஏகார ஓகாரங்கள் ஒத்த வடிவின். எகர ஒகரங்கள வேறுபட்ட வடிவின. யவனமொழி இகர உரங்கள் பழந்தமிழ் யகர வகரங்களை நிகர்த்தன; யவனபுரத்தார் யகரவகர ஒலியுருவை முறையே இகர உகரங்களாற் குறியீடு செய்வாராதலினல் இவையும் ஒப்புமையுடையனவாம். யவனமொழியில் ஆகார, ஈகார, ஊகார ஒலிவடிவங்கள் அவற்றேடு இனச்சாரபுடைய குற்றெழுத்துக்களாற் குறியீடு செய்யப் படுவன. எஞ்சிநின்ற ஒன்பது மெய்களுள் ஒரு மூன்று ஒலிவடிவினலும் வரிவடிவினலும், ஖, ஗, ஘, ஆகிய கிரந்தாக்ஷரங்களை நிகர்த்தன. மற்ருெரு மூன்று ஒலிவடிவத்திற் ப, க, ட எனபவற்றேடு சேர்ந்து எழுந்த ஸ்ப, ஸ்க, ஸ்ட என்பனவற்றை நிகர்த்தன. எஞ்சிநின்ற ஒரு மூன்றும் ப, க, ட என்பவற்றுக்கு இனமாய் நலிந்த ஓசையுடையன. ஈற்றிற்காட்டிய ஆறுமெய்களும் எகர ஒகர உயிர்களும் பிற்காலத்தில் யவன மொழியிற் சேர்க்கப்பட்டனவாமென்று எண்ண இடமுண்டு. அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்குத் தமிழ் நெடுங்கணக்கோடு பூரண ஒற்றுமை யுடையதென்பது நிறுவப்படுகின்றது. இவ்விருமொழியின் வரிவடிவங்கள்

ஒன்றினின் றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின் வேருகிய மற்றொரு மொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவாமோ என்பதனை மேலாராய்வாம்.

இனி வடமொழித் தேவநாகரலிபியில் க, ச, ட, ப, ல, ம, ந, ர என நின்ற எட்டுமெய்களைக் குறிக்கின்ற வரிவடிவெழுத்துக்களை மேல் கோடும் கீழ்நோக்கியிழுத்த நேர்கோடும் தவிர்த்து எழுதுங்காற் பெறப்படும் உருவம பழந்தமிழுருவத்தை நிகர்த்தது. இவ்வெட்டு மெய்களும் தமிழ்மொழிக்கும் யவனபுர மொழிக்கும் பொதுவாகி மெய்யெழுத்துக்களாமென்பது இத்தொடர்பில் உளங் கொளற்பாலது. இனித் தேவநாகரலிபியில் ஓகாரம் அகரவுயிரோடு நேர்கோடு ஒன்றும் மேல் விசிறி யிரண் டுஞ் சேர்ந்த வரிவடிவத்தையுடையதே யன்றிக கிரந்த, யவன, தமிழ்மொழி ஓகாரத்தைப்போலத் தனக்கென் றொரு சிறப்புருவ மில்லாதது. தேவநாகரலிபி யகர, வகர மெய்களை மேல்கோடு, நேர்கோடு தவிர்த்தெழுதப் பெறப்படும் உருவம் பழந்தமிழ் யகர வகரங்களை நிகர்த்தது. தேவநாகரலிபி, அகர, இகர, உகர, ஏகாரங் களை மேல்கோடு நேர்கோடு தவிர்த்தெழுதப் பெறப் படும் வரிவடிவங்கள் பழந்தமிழ் அ, இ, உ, எ என்பன வற்றை நிகர்த்தன. இங்ஙனம் கண்ட ஒற்றுமை, வேற்றுமைகளை உளங்கொண்டு யவனமொழி, தமிழ் மொழி, வடமொழி என்னும் இம்மொழிகளின் வரிவடி வெழுத்து வரலாற்றை யாராய்வாம்.

யவனபுரத்தார், தாம் வரிவடிவெழுத்தைப் பினீசிய ரிடமிருந்து பயின்று கொண்டதாக உரைக்கின்றனர். அங்ஙனம் பயின்றுகொண்ட காலம் கி. மு. ஏழாவது நூற்றாண்டு என்பா. பினீசிய எழுத்து எகிபதிய சித்திர வெழுத்தின் வழி வந்தது; மிகப் பூர்விகமானது. எகிப்திய சித்திரவெழுத்து, பொருளை அதன் வடிவத்தினுற் குறிக்கு நீர்மைய தாதலிற் பிறமொழியினின்று தோன்ருதது. எகிப் திய அக்கரவிலககணத்தை யறிந்த பினீசியா தமது

மொழியை எழுதுவதற்காகிய ஒரு வரிவடிவெழுத்து முறையை வகுத்துக்கொண்ட காலம், கலி ஆயிரம் (கி.மு. 2100) வரையிலிருக்கலாம் என அறிஞர் அபிப்பிராயப் படுகின்றனர். தமிழ் வரிவடிவெழுத்துக்கும் யவனபுர வரி வடிவெழுத்துக்கும் உள்ள தொடர்பினை நோககும்போது தமிழரும் யவனபுரத்தாரும் பினீசியரிடமிருந்து எழுத்து முறையைப் பயின்றுகொண்டார்களென் றெண்ண வேண்டி யிருக்கிறது. சில காலத்துக்குப் பின் தமிழ் நாட்டார் வடமொழியை எழுதுவதற்குத் தமிழக் கரங் களைச் சிறிது திரிவுபடுத்தியும் புது அக்கரங்களை வகுத்தும் வருங்கால யவன மொழியிலிருந்து எடுக்குந் தகையவாகவிருந்த வ, ம, ஞ என்னும் மூன்று எழுத்துக் களையும் எடுததுக்கொண்டார்களென்பது பூாவிக யவன வெழுத்துக்களுககும் பூர்விகக் கிரந்த அக்ஷரங்களுக்கும் இடையேயமைந்த உருவ வொற்றுமையாற் புலப்படு கின்றது. பரந்த விப்பொருளை நன்காராயின் இந்தியாவி லிக்காலத்தில் வழங்குகிற அக்ஷர முறைகளைத்தும், அராபிய முதலிய செமித்திய மொழியக்ஷரங்களும், யவன புர ரோமபுர அக்ஷரங்களும், இவற்றின் வழித்தோன்றி இந்நாளில் மேற்றிசையில் வழங்குகிற ஆங்கிலேய முதலிய அக்ஷரங்களும், ஆகிய அனைத்தும் பினீசிய அக்ஷரங்களின் வழிவந்தனவாமெனவும், பினீசிய அக்ஷரம் எகிப்திய அக்ஷர முறையினின்றுந் தோற்றியதாமெனவும் அறிவாம்.

இனி, யவனபுரத்து வீரகாவியங்களைப் பற்றி ஒருசில கூறி அப்பாற் செல்வாம்.

ஹோமர் என்னும் மகாகவி யியற்றிய இலியட் (Iliad), ஒடிஸி, (Odyssey) என்னுங் காப்பியங்களிரண்டும் யவன புரத்தாருக்கு நாற்பொருள் பயக்கும் நீர்மையவாகப் பின்னூல் பலவற்றுக்கு முதனூலாக நிலைபெற்றிருந்தன. இந்நூ லிரண்டினெடுங் கதையினுற் றொடர்புடையதும் ரோமாபுரியில் அகஸ்டஸ் மன்னனது அவைக்களத் திருந்த வேர்ஜில் என்னும் மஹாகவியினு லியற்றப்பட்டது

மாகிய 'ஏநேயகாவியத்'தைப் பற்றிச் செந்தமிழ் 14-ஆம் தொகுதி 8-ஆம் பகுதியில் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றும். அக்கட்டுரையில் இலியட், ஒடிசி என்னுங் காவியங்களின் கதைச்சுருக்கமுந் தரப்பட்டிருககிறது.

இக் காவியம் ஒவ்வொன்றும் இருபத்து நான்கு காதைகளா னமைந்தன. முப்பது காதைகளா னமைந்த மணிமேகலை நூலின செய்யுட்டொகை முப்பது அகவற்பா வானது போல இவ்விரு காப்பியங்களும் இருபத்து நான்கு வீரப்பாக்களால் முடிந்தன. வீரப்பா பலவாய அடிகளால் நீண்டு நடக்கும் நீர்மையது. இதன் யாப்பினை யாராயுமிடத்து அடியொன்றுக்கு ஆறுசீராய் முதலைந்து சீரும் குரு லகு லகு என நிற்க ஈற்றுச்சீர் குரு குரு என முடிவது எனக் காண்போம். ஒரே வொருசீர் இடையினுங் குரு குரு என நிற்பதுண்டு. வடமொழி யாப்பின் வழிவந்த செய்யுளினங்கள் தமிழில் வந்து நடப்பதுபோல யவனபுர மொழியின் வழி வந்த வீரப்பாவையும் தொல்லாசிரிய ருரைத்த கலிப்பாவகையினுளடக்கித் தமிழில் எழுதுவாம். குரு லகு லகு குரு லகு லகு குரு என்பது பாதி அடியாக வும் இதனை யிரட்டித்தது ஓரடியாகவும் கொள்ளுங்கால் யவனமொழி வீரப்பா வடி பலவகையினுள் ஒருவகை வந்தெய்தும். இலியட், ஒடிசி யென்னுங் காப்பியத்தினுட் சிறந்த சில பாகங்களை இவ் யாப்பினி லமைத்துத் தருவாம்.

7. மேற்றிசைச் செல்வம்

ஹோமர் என்னும் மகாகவி யியற்றியதும் யவன புரத்துக் காவியங்களுள் முதல் வைத்து எண்ணப்படுவது மாகிய இலியட் என்னும் தொடர்நிலைச் செய்யுளைப் பற்றிச் சில கூறுவாம். இலீயம் என்னும் நாட்டில் நடந்த பெரும் போரினை விரித்துக் கூறும் இந்நூலினை ஈலிய மகாகாவியம் என வழங்கலாகும். இலிய நாட்டு அரசனாகிய பிரிய (Priam) மன்னனுடைய இளைய மகன் பரீசன் (Paris) என்பவன் அழகே யோருரு வெடுத்தாலனைய பெருநலம் வாய்ந்தவளும் யவனபுரத்து மன்னன் மேனிலாவ (Menelaus)னுடைய மனையாட்டியுமாகிய ஏலேனை (Helena) வைக் கைப்பற்றித் தன்னூர்க்குக் கொண்டு சென்றான். அவளைச் சிறைமீட்குங் காரணமாக யவனபுரத்தார் இலிய நாட்டின்மீது படையெடுத்துச் சென்றனர். ஆங்ஙனம் நிகழ்ந்த பெரும்போரின் ஒரு பாகத்தைக் கூறும் நூல் ஈலிய மகாகாவியமாகும். உலீச மகாகாவியமும், ஏநேய மகாகாவியமும் இப்போரோடு தொடர்புற்று நின்ற வரலாறுகள் சிலவற்றை விரித்துக் கூறுவன. ஈலிய மகாகாவியம் தண்டியாசிரியர் பெருங் காப்பியத்திற்கு எடுத்தோதிய வனப்பு அனைத்தும் அமையப் பெற்றது; அகிலேசன் (Achilles) வஞ்சினமுரைத்த காதை, அணிவகுப்புக்காதை, மேனிலாவ பரீசர் தனியமர் புரிந்தகாதை, முதற்போர்க்காதை, தயமீதன் (Diomed) போர்த்திற முறைத்தகாதை, விறல்வீரர் மூவர் திற லுரைத்த காதை, ஏகனும் (Hector) அஜனும் (AJax) தனியமர் புரிந்தகாதை, இரண்டாம் போர்க்காதை, அகிலேசனைப் படைத்துணை யழைத்தகாதை, தயமீதனும் உலீசனும் (Ulysses) நள்ளிருளிற் போர்புரிந்தகாதை, அகமம்னன் (Agamemnon) போர்த்திற முறைக்கும் மூன்

ரும் போர்க்காதை, முழுமுத லரணங்கொண்ட உழிஞை வீரர்காதை, நான்காம் போர்க்காதை, மேகலே காட்டித் தேவராஜனை வஞ்சித்தகாதை, அஜன் போர்த்திற முறைக் கும் ஐந்தாம் போர்க்காதை, பத்திரோகலன்பட்ட ஆரும் போர்ககாதை, மேனிலாவன் போர்த்திற முரைத்த ஏழாம் போர்க்காதை, அகிலேசன் சோகமுரைததகாதை, அகி லேச அகமன்னர் நட்புக்கோட் காதை, அகிலேசன் போர்த்திற முரைத்தகாதை, காமாந்தரநதி தீரத்துப் போர்நிகழ்ந்த காதை, ஏகதன் பட்டகாதை, பத்திரோகல னுக்குப் பாடலொடு ஆடல்கொண்ட காதை, பிரிய மன் னன் புத்திரசோகக காதை என்னும் இருபத்து நான்கு பரிச்சேதங்களால் நடப்பது. இககாவிய ரத்தினத்தின் சிற்சில பாகங்களைத் தமிழறிஞர் பொருட்டு மொழி பெயர்த்து வெளியிடுங் கருத்துடையேன். நேரம் வாய்த் துழி அக்கடமையை நிறைவேற் றுவேன்.

ஹோமருடைய காலம் கலி 2057 என ஒரு சாராரும் கலி 2250 என மற்ருெரு சாராருங் கூறுவர். கலி 2300 வரையிலிருந்த ஹெசியொட் என்னும் பெரும் புலவர், 'நாளும் வினையும்' எனப் பெயரிய நூலொன் று செய்தளித் தார. இந்நூல் நமது மொழியிலுள்ள பதினெண் கீழ்க் கணக்கினையொத்த நடையினது. ஹோமர் இயற்றிய தனிப்பாசுரங்களும் பலவுள. இவையாவும் வீரச்சுவை யும் இன்பச் சுவையும் செறிந்தன. ஹோமருடைய காலத்தில் யவனபுரம் முடியுடை வேந்தராலும் குறுநில மன்னராலும் ஆளப்பட்டு வந்தது. மன்னரும் வள்ளல் களும் தமது முன்னோர் திறமையைப் பாணர் பாடக் கேட்டு மகிழ்வடைவர். தம்மையுந் தமது முன்னோரை யும் பாடும் பாணருக்கு வேண்டுவன கொடுப்பார. இக் காரணத்திலுலே கவியென்னும் பயிர் நன்கு வளாந்தோங் கியது. கவிஞர் தெய்வதருவினை நிகர்த்தாரேனும் வரை யாது கொடுக்கும் வள்ளல்களாகிய மேகங்கள் பொன்மாரி பொழியாவிடின் மலர்ந்து நறுமணங கஞற்றுது வாட்ட முற்றுச் சோர்வரென்பது வெளிப்படை. மகாகவியாகிய

ஹோமர் உயிரோடிருந்த காலத்தில் அவருடைய புகழ் விளங்கவில்லையெனக கர்ணபரம்பரையா னறிகின்றோம். இம் மகாகவி பிறவிக் குருடர் என்பதும் ஒரு பரம்பரைக் கதை. இவர், யாழைக் கையிலேந்திக்கொண்டு ஊர் தோறுஞ் சென்று அன்னத்துக்குத் தானும் அலைவுற்றா ரெனவும் அறிகிறோம். இவர் தமது பெருங காப்பியத்தை இயற்றிய காலத்தில் யவனமொழி எழுதாமொழியா யிருநதது. காப்பியம் செவிவாயிலாகவே பல நூற்றாண்டு களுக்குள் யாண்டும் பரந்து நிலைபெற் றிருந்தது. இக் கவியின ஆற்றலைப் பிற்காலத்தாரே நன்கு அறிந்தனர்,

வீரகாவியங்களுக்குரிய யாப்பாகிய வீரப்பாவைப் பற்றி முன்னமே கூறினோம். இதன் பின்னர், நமது மொழியி லுள்ள கொச்சக வொருபோகின் நடையதாகிய 'எலிஜியக்' (Elegiac) என்னும் ஒருவகைப்பாவும் நமது அகவற்பாவை ஒருபுடையொத்த நடையினதாகிய 'ஐயேம்பிக்' (Iambic) எனனும் ஒருவகைப் பாவும் தோன்றின. கொச்சகவொரு போகின் நடையினதாகிய யாப்புக்கு வீரமும் காதலும் நீதிமொழியும் பொருளாக அமைந்த செய்யுட்கள் உரிய வாயின. கையறுநிலை, மன்னைக்காஞ்சி போன்ற செய்யுட்களும் இவ்யாப்பிலே பாடப்பட்டன. இத்தகைய இயற்பாக்கள் தோன்றிய காலத்துக்குப் பின்றை நமது மொழியிலுள்ள வண்ணம, சிந்து, வரிப்பாட்டு என்னும் இவற்றை நிகர்த்த இசைப்பாக்கள் எழுந்தன. இவற் றுக்குத் திணை அகத்திணையே யாயிற்று. ஆர்க்கிலோகர் (Archilocus), அல்கேயர் (Alcaeus), சிமோனிதர் (Simonides), பிண்டேர் (Pindar), அல்கமன் (Alcman) எனனும் புலவர்களும் சபோ (Sappho) என்னும் கவிவல்ல பெண்மணியும் இசைப்பாக்கள் பல எழுதினார்கள்; இவற் றுட் பெரும்பாலன அழிந்து போயின; ஒரு சில இனறும் நின்று நிலவுகின்றன. தேவபாணிப் பாடல்களும், விழாக் காலங்களில் தேவர்ப் பரவுவார் பலர் ஒருங்கு நின்று பாடு தற்கேற்ற குரவைப் பாடல்களும், இசைப்பாவுக்குரிய இலக்கணங்களோடு தோன்றின.

இதன்மேல் நாடகவியல்கள் தோன்றின. காடுகெழு செல்விக்குப் பரவுக் கடன் கொடுக்குங்கால் அவளது நிலைமையைச் சிறப்புறக் கூறி வழுத்தி நின்றாடும் கொற்றவை நிலையாகிய பொதுவியற்கூத்தும் வெறியாட்டயர்ந்த வெங்களத்து மறியறுத்துக குருதிப்பலி செலுத்தி வேலனை வழுத்தி நினருடும் காந்தள் ஆகிய பொது வியற் கூத்தும் ஒருபுடை யொப்பெனற்குரிய கூத்தே பண்டை யவனபுரத்தில் ரிருஜடி (Tragedy) என்னும் பெயரால் வழங்கப்பட்டது. ரிருஜெடி என்னும் சொல் லுக்குப் பொருள் 'ஆட்டுமறிக் கவிதை' யென்பது, உண் டாட்டுத் தெய்வமாகிய டயனிச (Dionysus) னுக்கு வேனில்விழாக் கொண்டாடுங் காலத்து, ஓர் ஆட்டுக் கடாவைப் பலிசெலுத்தி அத்தெய்வத்தினது மெய்க் கீர்த்தியையும் அவனைப் பரவும் வீரரது புகழையுங் கூறு வதே ரிருஜெடிக்கு உரிய பொருளா யிருந்தது. கிறிஸ்து வுக்கு முன் 525-ஆம் ஆண்டில் (கலி 2576 -இல்) இருந்த அய்சகலீஸ் (Aeschylus) என்னும் புலவர், வீர ருடைய மெய்க்கீர்த்தியைப் பாடும் ஆடற்பாட்டினைச் சீர்ப்படுத்தி அதனைக கூற்றும் மாற்றமும் மிடைந்த நடையினதாக்கி, ஆடலரங்கினும் வினவுதற்கு ஒருவரும், விடுப்பதற்கு ஒருவரும் உடனிசைத்திசைப்போர் பலருமாக அமைத்தாரதலினுல், இவரையே, யவனபுரத்து நாடக வியலுக்குத் தந்தை யெனறல் சாலும். இவருக்குப் பின் வந்த சோபக்கிளீஸ் (Sophocles) என்பவர் அரஙகத்தில் மூவர் நால்வர் ஒருங்கு தோன்றி யாடுமாறு கவியமைத் தார், இவருக்குப் பின்வந்த யூறிப்பிடீஸ் (Euripides) என்னும் புலவர் நாடகத்தை மேலும் விருத்தி செய்தார், அய்சகலீஸ் 70 நாடகமும், சொபககிளீஸ் 113 நாடகமும், யூறிப்பிடீஸ் 92 நாடகமும் எழுதி முடித்தார்கள். இவர் மூவரும் எழுதிய நாடகங்கள் வீரா புகழ் கூறும் ரிருஜெடி யின் பாலவாகலின், வீரம், வெகுளி, உருத்திரம், சோகம், பெருமிதம் என்னுஞ் சுவைகள் பொருந்தி விளங்கு வன.

வேனில்வேள் ஆகிய தயனிசன் என்னுந் தெய்வத்துக்கு விழாக் கொண்டாடுங் காலம் மாவும் புள்ளும் துணையொடுவதியும் வசந்தகால மாதலினுல் அக்காலத்து உண்டாட்டினுல் களி தியங்கிஞேரும், யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து காம நுகாவோருமாகிய இளையாருடைய உள்ளத்தில் உவகையும் நகையும் தோறறுவது இயல்பேயாம். நகைச்சுவையும் உவகைச் சுவையும் நிறைந்த நாடகங்கள் 'கமிடி' (Comedy) எனப்படுவன: இச்சொல்லுக்குப் பொருள் 'சிறுகுடிப் பாட்டு', 'பண்ணைப் பாட்டு' என்று கொள்ளலாகும். நமது தமிழ்மொழியிலுள்ள குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு என்னும் இவை யவனபுரத்தாரது பண்ணைப்பாட்டு இலக்கணங்களைப் பெரிதும் பெற்றன, கி. மு. 427-ஆம் ஆண்டிலிருந்த அறிஸ்டோபாணிஸ் (Arisrophanes) என்னும் பெரும் புலவர் சமூகவாழ்க்கையிலுள்ள தவறுதல்களையும் தலைவராகவுள்ளோரது குறைவுகளையும் எடுத்துக் காட்டுவதற்குப் பண்ணைப்பாட்டினை உபயோகித்தார். பறவைகளும் வண்டுகளும் கார்முகிலும் தங்கள் கருத்தை வெளியிட்டுச் சொல்லுவதாக அமைத்து இப்பெரும் புலவர் சமூக வாழ்க்கையிலுள்ள தீமைகளை யெடுத்துக் காட்டும் நீர்மை மிக வியக்கத்தக்கது. இவரனைய புலவர் ஒருவர் இந் நாட்களில் நம்மிடையே யிருப்பாராகில் நமது சமூக வாழ்க்கையிலிருககும் தீமைகளைக் குறவஞ்சி நாடகமாகவோ உழத்திப் பாட்டாகவோ பாடி நம்மை நகைப் பிப்பதோடு நல்வழிப்படுத்துவதற்கும் வல்லவராவார்.

நாடகங்கள் பலவாக நிறைந்த பின்னர் வசன நூல்கள் எழுந்தன. பாடலானது நிரம்பிய சுவையும் *பா*வமும் உடையதாயிருத்தல் வேண்டும். அதிலும் இசைப்பா *பா*விகமும் மெய்ப்பாடும் பெற்றன்றிப் பிறக்க மாட்டாது. ஆசானொருவன் தன் மாணுக்கனுக்கு அறிவு நிறைவுறுத்தும் பொருட்டு இலக்கணம், தருககம், அறநெறி, தேசசரிதத்திரம், விஞ்ஞான சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் என்னும் இவற்றைச் சொல்லிவைக்கு மிடத்துத்

தெளிவுவேண்டப்படுவதேயன்றிப் பாவிகமும் மெய்ப் பாடும் வேண்டப்படா; ஆதலால் இவற்றைக் கூறும் நூல்களை உரைநடையில் அமைத்தலே பொருத்தமாம். நமது முன்னோர் செப்பலோசை வாய்ந்த வெண்பா வினும், சொற்சீ ரடிபெற்ற சூத்திரப்பாவினும் அமைத் ததுவும் பொருத்தமேயாம். யவனபுரத்தார் மேற்குறிப் பிட்ட பொருள்கண்மேலனவாய பல வசனநூல்கள் இயற்றினார்கள். கி. மு. 484-இல் பிறந்த ஹெரொ டொற்றஸ் (Herodotus) எனபவர் யவனபுரத்துத் தேசசரித்திர மொன்றைச் சிறப்புற எழுதினார். இவ ருக்குப் பின் வந்த துசிடிடீஸ் (Thucydides) என்பவர் பாரசீகருக்கும் யவனபுரத்தாருக்கும் இடையில் நடந்த பெலப்பொண்ணேசிய யுத்தத்தைக குறித்த ஒரு இதி காசநூலை எழுதினார். இந்த யுத்தத்தினது வரலாறு முதலியவற்றை யவனபுரத்து அரசியல்வரன்முறை யென்னுந் தலைப்பெயர்கீழ் ஆராய்வாம், செனொபன் (Xenophon) எனப் பெயரிய ஒரு தளகர்த்தனும் சரித் திரச்சார்பாக இயற்றிய நூல் ஒன்று உண்டு.

யவனபுரத்தில் சுயவரசு நிலைத்திருந்த காலம்வரை யும் இயல் இசை நாடகநூல்களும், அர்த்தசாஸ்திரம், அலங்காரசாஸ்திரம் என்னும் இவையும் பெருகிவளர்ந்தன. அரசியல் நிலை ததும்பியபின்னர் மொழியும் வீழ்வெய்தி யது. சுயவரசு நிலைத்திருந்த காலத்தில் நீதிமன்றத் திலும் அத்தாணிமண்டபத்திலுஞ் சிறப்படைவதற்குச் சொல்வன்மை யின்றியமையாத தொன்றாயிருந்தது. டெமொஸ்தினீஸ் (Demosthenes) போன்ற சொல் வன்மையிற் சிறந்தோர், மககளாற் பெரிதும் மதிக்கப் பட்டார்கள். அமர்க்களத்தினின்று போராபுரிந்த வீரன் அப் போரினைச் சிறப்பித்துப் பாடும் பாடலுக்கும் போர் முனையை யொருபொழுதுங் காணாத கோழைநெஞ்சன் போரினைச் சிறப்பித்துப் பாடும் பாடலுச்கும் பெரிதும் வேற்றுமை யுண்டு, தமிழ்நூலிற் தலைசிறந்து விளங்கும் புறநானூறு என்னும் நூலானது வடிவேலேந்தி அடுக

ளத்துப் பொருத சுத்தவீரர்களாற் பாடப்பட்ட வஞ்சினக் காஞ்சிபோன்ற செய்யுட்களைத் தன்னகத்துக் கொண்டமையானன்றோ நாம் அதனைப் பொன்னேபோற் போற்றுகிறோம். யவனபுரத்துப் பூர்வ நூல்களும் இத்தகையனவே; ஆதலினாலன்றோ அவை இன்றும் நிலைபெற்று நின்று தேவருலகத்து அமுதம்போலப் படிப்போருக்கு உற்சாகத்தையுந் தீரவீரத்தையும் தருகின்றன. ஆங்கில நாட்டிலுள்ள இளைஞர்கள் கணக்காயரிடத்துக் கல்வி கற்குங் காலத்திலேயே லத்தீன், கிறீக் மொழிகளைப் படித்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பாலப்பருவத்திலேயே வீரமும் பெருமிதமும் உடையவர்களாய் விளங்குகிறார்கள். நமதுநாட்டில கற்று வல்லோரென்றிருப்போர்தாமும் புறநானூற்றினைப் படிப்பதில்லை. நேற்றும் இன்றும் வெளிவந்த பிழைபொதிந்த, சீர்கெட்ட நாவல்களே நமது சிறுவர் செவிக்கு உணவாகின்றன. வீர காவியங்களைக் கற்றால் உள்ளம் வீரத்தன்மையடையும்; ஆதலால் மேற்றிசையோர் தமது சிறுவருக்கு ஈலியமகா காவியம், லத்தீனமொழியில் சீசர் எனனுஞ் சக்கரவர்த்தியெழுதிய காலதேயயுத்தம் (Gallic War) என்னும் நூல் இவைகளைக் கற்பித்துவைப்பர்.

யவனபுரத்துத் தத்துவஞானிகளைப்பற்றியும் அவர்களெழுதிய நூல்களைப்பற்றியும் ஒருசில கூறுவாம். கி. மு. 600 (கலி 2500) அளவில் மிலேதஸ் (Miletus) என்னும் நாட்டில் வசித்த தாலேஸ் (Thales) என்னும் தத்துவஞானி பூதநூல், வானநூல், கணிதநூல், என்னுமிவற்றில் வல்லவரெனப் பெயர்வாய்ந்தவர். இவர் அனைத்துப் பொருள்களுக்கும் நீரே முதற்காரணம் எனக் கூறினார். இவர் மாணவராகிய அனக்சிமாண்டர் (Anaximander) என்பவர், மழை, ஆகாயத்தினின்று வருஷிக்கிறதாதலால் நீருக்கும் முதற்காரணமாகிய ஆகாயமே அனைத்துக்கும் முதற்காரணம் என்றார். இவர் மாணவராகிய அனக்சிமெனஸ் (Anaximenes) அனைத்தினும் சலனத்தை யுண்டாக்குகின்ற பிராணனே முதற்

காரணமாகும் என்னுங் கொள்கையினை நிறுவினர். இங்ஙனம் முதற்பொரு ளாராய்ச்சி நடந்துகொண்டிருந்த காலத்திற்றானே, முதற்பொருளுக்கும் பிறபொருளுளவேல் அவற்றுக்கும் இடையிலுள்ள தொடர்பு (Relation) இத்தன்மையதென ஆராயும் ஆராய்ச்சியும் நடந்தது. இவ்வாராய்ச்சியின் பயனாக மூவகைப்பட்ட கொள்கைகள் நிலைபெற்றன. இவை மேலைத் தேசத்துத் தத்துவ சாஸ்திரத்தில் இன்றும் நின்று நிலவுகின்றன வாதலால் இவற்றைச் சற்று விரிவாக நோக்குவது இன்றியமையாத தாகின்றது. ஆவதும் அழிவதுமாகிய தோற்றம் பொய்த்தோற்றம் என்றார் ஒரு சாரார். இவரது கொள்கையின்படி ஆதியிலுள்ளதே (Being) பொருளெனப்படுவது; ஆவதும் (Becoming) அழிவதும் உள்ளதெனப்பட்ட முதற்பொருளினின்று வேறுபட்டன வல்லவாகலான், அவற்றினைப் பிறிதுபொருள் எனல் வேண்டா என்பது. இக்கொள்கையோர் எலெயாரிக்ஸ் (Eleatics) எனப்படுவார். ஹெறுக்கிளிற்றஸ் (Heraclitus) என்பவருடைய கொள்கையின்படி ஆவதும் அழிவதுமே பிரத்திக்ஷமாகக் காணப்படுவ வாதலால், நிலைபெற்ற நீர்மையதாகிய முதற்பொருள என்பதொன்றில்லை யென்பது. மூன்றும் வகையாருள் அணுப்பரிணுமவாதிகள் நிலைபெற்ற முதற் பொருளுமுண்டு, ஆதல் அழிதலும் உண்டு என்னுங் கொள்கையினர்.

முதல்வகையோருட் டலைசிறந்தோர் செனோபானெஸ் (Xenophanes), பார்மெனிடஸ் (Parmenides), மெலிசஸ் (Melissus), சேனோ (Zeno), கோர்கியாஸ் (Gorgias) என்பவர்கள். பூர்வயவனர் பலதெய்வ வணக்கமுடையவர்களா யிருந்தார்கள். செனோபானஸ் என்பவர் பல தெய்வ வணக்கத்தைக் கண்டித்து, ஆண்டவன் ஒருவனே யென்றும், அவன் அகண்ட ரூபி யென்றும், காணுங் கண்ணனைத்தும் கேட்குஞ் செவி யனைத்தும், உணரும் உள்ளமனைத்தும் அவனதே யென்றும் போதித்தார். இவருடைய மாணவராகிய பார்மெனிடஸ்

என்பவர் இறைவனொருவனே அனைத்துமா யிருக்கிறு னென்றும், அவன வேறுபாடெய்தப்பெருதவ ஞதலால் ஆவதும் அழிவதுமாகத் தோற்றுகிற தோற்றம் பொய்த் தோற்றம் என்றும் விரித்து விளககினுர். சகத்தோற்றம் பொய்த்தோற்ற மாயினும் சிருஷ்டி, சங்காரம் உண்டு என்பதும் அவை, காலவெல்லையுட் பட்டனவென்பதும் இவரது கொள்கை. இவரது மாணவரான மெலிசஸ் என்பவர் தோற்றமும் அழிவும் பொய்யாதலின் உலகம் அநாதியாக நிலைத்திருப்பது என்றும், அது ஈச்வர ணிடத்து உள்ளது. என்றுங கூறினுர். சேனே என்பவர் சலனம் என்பதொன் றில்லையென்றும், அனைத்துப் பொருள்களுக்கும் இடந்தருகிற ஆகாயம் என்பதை ஒரு பொருளாகக் கொள்வோமாயின் அந்தப் பொருளுககு இடந்தருதற்குப் பிறிதொரு ஆகாயம் வேண்டப்படும் ஆதலால் ஆகாயம் பொருளெனப் படாதென்றும் விளககினுா. அவர் மாணுக்கா கோர்ககியாஸ் என்பவர் ஏனைய பூதங்களும் இலபொருளெனக் காட்டி, ஒரு பொருளுமில்லையென வாதிசகுங் கொள்கையினராக விருநதார்.

ஏனைய தத்துவ சாஸ்திரக் கொள்கைகளை விசாரிக்கப் புகுமுன் யவனயுரத்துத் தேவைகளைப் பற்றி ஒருசில கூறு வாம். வானகத்தையும் மண்ணகத்தையும் உருவகப் படுத்தி, அவற்றை முறையே யுருனஸ் (Uranus), என்ப தொரு ஆண்தெய்வமாகவும் கே- ம- (Ge) என்பதொரு பெண் தெய்வமாகவும் பூர்வயவனர் வணங்கினர். இவ் விரு தெய்வங்களுக்கும் பலபூதர்கள் (Titans) புதல்வ ராகத் தோற்றின ரெனவும், அவருட் சிரேட்டர்; கிரே ஞெஸ் (Chrones) என்பதாகவும் புராணங் கூறுகிறது. கிரேஞெஸ், என்னும் மொழிக்குக் காலம் என்பது பொருள். கையில் அரிவாள் ஏந்திய ஒரு வயோதிகனது தோற்றமாகும் இந்தத் தெய்வத்தினது தோற்றம். கிரேஞெஸ், றேயா (Rhea)வை மணமுடித்துப் பல

புதல்வர்களையும் புதல்வியர்களையும் தோற்றுவித்தார். தன் மகனொருவன் தன்னிலும் மிக்கவனாகித் தான் அரசு புரியும் தேவலோக ராஜ்யத்தைக் கைப்பற்றுவான் என்பதைச் கிரேநொஸ் அறிந்தமையினாலே றேயா பெறுகிற சிசுக்களை யெல்லாம் பிறந்தவுடனே எடுத்து விழுங்கிவிடுவது கிரேநொஸுக்கு இயற்கையாயிருந்தது. றேயா ஒரு வகைச் சூழ்ச்சியினால ஈற்றிற் பிறந்த சிசுவாகிய ஜுப்பிற்றரை (Jupiter) மறைத்துவைத்துவிட்டாள். இந்தப்பிள்ளை ஜுப்பிற்றர் வளர்ந்து பெரியவனாகித் தந்தையை வென்று, தந்தையினால் விழுங்கப்பட்ட தனது உடன் பிறந்தாரனைவரையும் தந்தை வயிற்றிலிருந்து அழைப்பித்துத் தனக்குத் துணையாக்கி, அதன்பின்னர் தந்தையைத் தேவலோகத்திலிருந்து துரததிவிட்டுத் தானே தேவலோகத்துககுத் தலைவனாயினன். தனது சகோதரனாகிய பொசெயிடனை (Poseido.) நீருலகத்துககுத் தலைவனாகவும், மற்றொரு சகோதரனாகிய பிளூட்டோவை இருளுலக (நரகலோக) த்துக்குத் தலைவனாகவும் ஆக்கினான். தனது உடன் பிறந்தாளாகிய ஜுனோ (Juno) வைத் தேவலோகத்துக்கு ராணியாககினான்; சீறெஸ் (Ceres) என்னும் மற்றொரு சகோதரியைத் தானியங்களுக்கு அதிபதி யாக்கினான்; வெஸ்டா என்னும் மற்றொரு சகோதரியை அட்டிலுக்கும் அட்டிலில் வைகும் அக்கினிக்குந் தலைவியாக்கினான். தேவராஜனுடைய மகன் அபல்லோ (Apollo), கவிதைக்கும் இசைக்கும் தலைவன். கையில் யாழும் வில்லும் ஏந்திய ஏர்மிக்க இளைஞனுடைய உருவம் இத்தெய்வத்தினது உருவம். தேவராஜனுடைய மற்றொரு புதல்வனாகிய ஹேர்மெஸ் (Hermes), தேவர்களுக்குத் தூதுவனாயினன். இத்தெய்வத்தைப் பற்றி ஹோமர் பாடிய இன்னிசைக் கவிதை யொன்றுண்டு. இத்தெய்வத்துககு வானிலும் மண்ணிலும் விரைந்து சென்று சஞ்சரிப்பதற்கு உபகாரமாகக் கால்களிலும் தலைப்பாகையிலும் சிறகுகளுண்டு. கையில் பாம்பு இரண்டு, சுற்றிய தண்டு ஒன்று உண்டு. அக்னிலோகத்

துக்கு அரசனும் கொற்றொழில் வல்லவனுமாகிய வல்கன் (Vulcan) என்னுந் தெய்வமும், தேவசேனாதிபதியாகிய அறேஸ் (Ares) என்னுந் தெய்வமும் முறையே கொற்றொழிலோராலும் சேனைத் தலைவராலும் வணங்கப்பட்டு வந்தனர். தேவராஜனுடைய சிரத்திலிருந்து கவசம் பூண்ட தோற்றத்தோடு கூடிய ஒரு பெண் மகவு வெளிப்பட்டாள். இவள் ஞானத்துக்கும் வீரத்துக்குமுரிய தெய்வமாயினாள்; இவள் பெயர் அத்தேனா (Athena) என்பது; இவள் ஞானத்துக்கும் வீரத்திற்குமுரிய தெய்வமாதலால் இவள் சிந்தை சிறிதேனுங் காமத்தின்பாற் சென்றிலது. அபல்லோவோடு உடன்றோன்றிய ஆர்டெமிஸ் (Artemis) என்னுந் தேவதை, வில்லும் அம்பும் ஏந்தி வேட்டைத் தொழிலுக்கு உரிய தெய்வமாயினாள்; இவளைச் சந்திர மண்டலத்துககு அதிதேவதையாகவும், அபல்லோவைச் சூரியமண்டலததுக்கு அதிதேவதையாகவும் யவனபுரத்தார கொண்டார்கள். ஆவிரதை (Aphrodite), தேவராஜனுடைய மற்றொரு புதல்வி. இவள் அழகுக்குங் காமத்துக்குந் தெய்வம்; இவள் புதல்வன் ஏரொஸ் (Eros). இவன் என்றும் பாலப்பருவங் கழியாத மன்மத தேவன். ஜூப்பிற்றர், பொசெயிடன், அபல்லோ, வல்கன், அரேஸ், ஹேர்மஸ், ஜூனோ, அத்தேனா. ஆர்டெமிஸ், ஆவிரதை, வெஸ்டா. சீறெஸ் என்னும் பன்னிரு தேவதைகளுமே சிறப்புடையனவாக யவனர்களாற் கொண்டாடப்பட்டுவந்த தேவதைகளாம்,

ஜூப்பிற்றர் என்னும் மொழி த்யாஉஸ் பித்ரு (Dyaus Pitar) என்னும் வடசொல்லினது சிதைவாகும்; இத் தெய்வத்தை த்யாஉஸ் என்னும் மொழியினது சிதைவாகிய சேயுஸ் (Zeus) என்னும் பெயரினாலும் வழங்குவதுண்டு, த்யாஉஸ் எனனும் வடமொழி, பிரகாசம் என்னும் பொருளினையுடையது. இப்பெயர் கடவுட் பெயராக இருக்குவேதத்திலும் வழங்கப்படுகிறது. யுரேனஸ் என்பது உராணஸ் என்பதின் சிதைவு, உகர வகர ஒற்றுமை பற்றி இச்சொல் வடமொழியில் வருண

என்று வழங்கும். ரிக்ஸம்ஹிதையில் வருணன் என்னும் மொழி வானமண்டிலத்துக்குத் தலைவனாகிய தேவ தேவனைக் குறிப்பது. பின்னாட்களில் இம்மொழி கடற் றெய்வத்தின் பெயரைக் குறிப்பதாயிற்று. பூர்வ யவனர் தமது முன்னோராகிய ஆரிய மக்களிடத்திருந்து பிரிந்து போய காலத்து இந்த இரண்டு தெய்வப் பெயரையும் அறிந்திருந்தார்க ளென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. காலதேவதை சூரியனுடைய புதல்வன் என்பது நமது புராணங்களின் கொள்கை. சூரியன் காலதேவதை யுடைய மகனுக்கு மகன் என்பது யவனபுரத்துக் கொள்கை. ஆகாசமாகிய வெறுவெளிக்குத் தேவதை யுரனஸ்; அதனின்றும் தோற்றிய காலதத்துவத்துக்குத் தேவதை கிரோணஸ். இத்தேவதைக்குச் சற்றேண் (Saturn) என்னும் பெயரும் உண்டு; அதினின்று தோற்றிய ஒளிக்குத் தேவதை ஜூப்பிற்றர்; அதனின்று தோற்றிய சூரியசந்திரருக்குத் தேவதைகள் அபல்லோவும் ஆர்டெமிசும் என்று இவ்வாறு அறியலாகும். பொசெயிடனுக்கு மற்றொரு பெயர் நெப்ரியூன் (Neptune); ஜூனோவுக்கு மற்றொரு பெயர் ஹேரே (Here); அத்தேனாவுக்கு மற்றப் பெயர்கள் பல்லாஸ் (Pallas), மினெர்வா (Minerva); வல்கனுக்கு மற்றொரு பெயர் ஹெபெஸ்தஸ் Hephae-tus), அறேசுக்கு மற்றொரு பெயர் மார்ஸ் (Mars); ஹெர்மெசுக்கு மற்றொரு பெயர் மேர்க்கரி (Mercury), ஆர்டெமிசுக்கு மற்றொரு பெயர் டயனா (Diana), ஆவிரதைக்கு மற்றொரு பெயர் வீநசை (Venus), வெஸ்டாவுக்கு மற்றொரு பெயர் ஹெஸ்டிய (Hestia), சீறெசுக்கு மற்றொரு பெயர் டெமீற்றர் (Demetur). இனி, யவனபுரத்துத் தத்துவஞானம் என்னும் தலைப் பெயர்க்கீழ் யவனபுரத்து அறிஞருள் தலைசிறந்த தத்துவ ஞானிகளினுடைய கொள்கைகளை ஆராய்வோம்.

8. உலக புராணம்

பெருங்கதை யென்னும் நூலிலே நமக்குக் கிடைத்திருக்கும் பகுதியின் தொடக்கத்திலே, 'பொருள்புரி நூலும், அலகைசான்ற உலகபுராணமும்' என்னும் அடிகள் காணப்படுகின்றன. உலக புராணம்-உலகத்தின் பழைய வரலாற்றினைக் கூறும் நூல். ஆசிரியர் தொல்காப்பியனார், 'தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே' என்றாராகலின், புராணத்தினைத் 'தொன்மை' என்றல் பழந்தமிழ் வழக்காமென அறிகின்றோம். 'பஞ்சலக்ஷணம்'—அஃதாவது சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சாநு சரிதம் என ஐவகை யிலக்கணத்தது புராணம் என்பது வடநூலார் கூற்று. சர்க்கம் என்பது உலகத்தின் தோற்றம்; பிரதிசர்க்கம், உயிர்த்தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் குறிக்கும்; வம்சம் மன்னர் பரம்பரையைக கூறுவது; மந்வந்தரம் காலவரையறையினையும் மநுககளது ஆட்சிக் காலங்களையும் கூறுவது; வம்சாநு சரிதம் மன்னா பரம்பரையோடு தொடாபுடைய கிளைக் கதைகளைக் கூறுவது. மத்ஸ்ய புராணம், அக்கினி புராணம், பாகவதபுராணம் என்னும் புராணங்களுக்குள்ளே பரதகண்டத்தின் பழைய வரலாற்றுப்பகுதிகள் காணப்படுவ என அறிஞர் கூறுவர். தகடூர் யாத்திரை என்னுந் தமிழ்த் தொன்மை நூல் நமக்குக் கிடைத்திலது.

தமிழரது பழைய வரலாற்றினைப் பற்றிய சில சில முடிபுகள் தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரை, இறையனாரகப்பொருள் நக்கீரனாருரை, சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரை யென்னும் இவை தம்முள்ளே காணப்படுகின்றன. இம்முடிபுகள் வரலாற்று நூலாசிரியர் (Historians) ஆராய்ந்து கண்ட சரித்திர

முடிபுகளோடு ஒருபுடை ஒத்திருக்கின்றனவாதலின் உரைநூன் முடிபுகள் வெறுங்கதைகளல்ல வென்பது துணியப்படுகின்றது.

பாண்டிய மன்னர் தமிழ் வளர்த்த முச்சங்கங்களின் வரலாறு இறையனாரகப்பொரு ளுரையினுள்ளே கூறப் பட்டது. 'சங்கம்' என்பது பிற்காலத்துச் சொல். 'கூடல்' என்னும் பழந் தமிழ்ச்சொல் இப்பொருளினது, இது மதுரைமாநகரின் பெயர்களுள் ஒன்று. தலைச் சங்கத்துப் பெரியோர் இருந்து தமிழராய்ந்தது கடல் கொள்ளப் பட்ட மதுரையென்ப,

'வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி'

எனச் சிலப்பதிகாரம் கூறுதலின், குமரியாற்றினுக்குத் தெற்கே ப∴றுளி எனப் பெயரிய ஆறு இருந்த உண்மை பெறப்படுகின்றது.

'முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'

என்னும் புறப்பாட்டு, கடல்கோளுக்கு முன்னிருந்த தலைச் சங்கத்துப் புலவரொருவராற் பாடப்பட்டது. கடல் கோள் வரலாற்றினை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வேனிற்காதை யுரையினுள்ளே விரிவாகக் கூறுகின்றார். இது எப்பொழுது நிகழ்ந்தது என்பதை முதலிலே ஆராய் வாம்.

தலைச்சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டும், இடைச் சங்கம் மூவாயிரத்தெழுநூறு ஆண்டும், கடைச் சங்கம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது ஆண்டும் நிலைபெற்றிருந்தன வென்பது உரைநூன் முடிபு. தலைச் சங்கம் கடல்கோளினாலே அழிந்தது. கடல் கோளுக்குப் பன்னூறாண்டுகளுக்குப் பின் கபாடபுரத்

திலே இடைச்சங்கம் தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும். தலைச் சங்கம் இரீஇய பாண்டியர்கள் காய்சினவழுதி முதற் கடுங்கோன் ஈருக எண்பத்தொன்பதின்மர். இடைச்சங்கம் இரீஇயினுர் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன ஈருக ஐம்பத்தொன்பதின்மர். கடுங் கோனுக்கும் வெண்டேர்ச் செழியனுக்கும் இடைப்பட எத்தனை மன்னர் அரசு புரிந்தனர் என யாம் அறியோம். இடைச்சங்கத் திறுதியிலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது. கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் கடைச்சங்கத்தைத் தொடங்கினுன். உக்கிரப்பெருவழுதி காலத்திலே கடைச்சங்கம் ஒழிந்தது. இது கிறிஸ்துவின் பிறப்பிற்கு அணித்தான காலத்திலே நிகழ்ந்ததென எண்ண இடமுண்டு. அங்ஙனமாதலின் தலைச்சங்கத் திறுதிக் கடல்கோள் கி. மு. 5550-ஆம் ஆண்டுக்கு முந்தியதாதல் வேண்டும்.

தமிழரது நாகரிகம் மிகமிகப் பழமை வாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதன் முதல் நாகரிக வழ்கையெய்திய சாதியாரென்பதற்கும், கடல் கடந்து சென்று தமது நாகரிகத்தைப் பலப்பல நாடுகளிலும் பரப்பினுர் என்பதற்கும் வாணிகத்துறையிலும் கணித நூல், வானநூல், முதலிய நூற்றுறைகளிலும் வல்லுநரா யிருந்தா ரென்பதற்கும் பல சான்றுகள் கிடைத்திருக் கின்றன. இவைதம்மைச் சுருக்கமாக ஆராய்ந்து கூறு தலே 'உலகபுராணம்' என்னும் இப்பொருளுரையின் நோக்கமாகும்.

கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமய குரவரும் பம்பாய் நகர்ப் பல்கலைக் கழகததுச் சரித்திர ஆராய்ச்சித் துறைத் தலைவரும் ஆகிய வணககத்துக்குரிய எச். ஹீராஸ் சுவாமியார் (Rev. Fr. H. Heras) பழந் தமிழரது வரலாற்றினைப் பெருக ஆராய்ந்து நூல்கள் வாயிலாகவும் பத்திரிகை வாயிலாகவும் வெளியிட்டிருக்கின்றுர். ஆரிய நாகரிக முதன்மையை எவ்வாற்றுனும் நிலைநிறுத்த

வேண்டுமென்னும் விருப்புடைய ஒருசாரார் இவர்க்கு இன்னல் விளைவிக்க முனைந்து நிற்பது இவரது கல்வி நிறைவையும் நடுவு நிலைமையையும் தெளிவுறக் காட்டு கின்றது. இவர் இஸ்பெயின் தேசத்திற் பிறந்தவர்; துற வொழுக்க முடையவர்: ஆதலினாலே ஆரியர் பக்கமோ திராவிடர் பக்கமோ சாராது நடு நின்று உண்மை கூறும் ஆற்றல் வாய்ந்தவர். சிந்துநதி தீரத்திலே முகிஞ்சதரோ என்னும் இடத்திலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலைபெற்றிருந்த நாகரிகத்தைக் குறித்து இவர் கூறும் முடிபுகளில் ஒரு சிலவற்றை முதலிலே தருவாம்.

இம்முடிபுகள் கல்கத்தா நகரினின்று வெளிவரும் இந்திய நாகரிகம் (Indian Culture) என்னும் ஆராய்ச்சிப் பத்திரிகையில் 1937-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிவந்தன: 'முகிஞ்சதரோ' விளககமுறறிருந்த காலத் திலே சிந்து நாடு (இந்திய) ஆனது மீனாடு, பறவைநாடு, மரங்கொத்திநாடு, ஏழ்நாடு எனும் நாற்பெரும் பிரிவின தாக இருந்தது. சிந்துநதியின் வலப்புறத்திலே இருந்த மீனாட்டிலே வாழ்ந்தோரது கொடியிலே இணை மீனகள் பொறிக்கப்பட்டிருந்தன. இந்நாட்டுத் தலைநகராகிய நண்டூர் என்பதே இப்பொழுது நிலத்தை யகழ்ந்து காணப் பட்ட முகிஞ்சதரோ (இறந்தோர் தரை) என்னும் இட மாகும். உடையூர், ஊரிலூர், எய்கையூா, மூனூர் (வட மொழியாளர் கூறும் திரிபுரம்) என்னும் நகாகளும் மீனாட்டிலிருந்தன. மரங்கொத்திநாடு பனிபடர்ந்த மலை நாட்டிலிருந்தது. இங்கு வாழ்ந்தோர் சிவலிங்கத்தையும் மூவிலைவேலையும் வழிபட்ட 'வேளிர்' ஆவர்.' (பிற் காலத்திலே 'வேளிர்' எனவும் வேளாளர் எனவும் வழங்கப்பட்டோர் இவரென எண்ண இடமுண்டு.)

முகிஞ்சதரோவிலிருந்த பழைய மக்கள் மிதுன ராசியினை 'யாழ்' என்னும் பழந்தமிழ்ப் பெயரினாலே வழங்கி னார்களென்றும் 'யாழ்' உருவத்தினாலே குறியிட்டார்க ளென்றும் ஹீராஸ்சுவாமியார் மற்றோரிடத்திலே குறிப்

பிட்டிருக்கின்றனர், இப் பழைய மக்கள் இசைநூலிலும் வானநூலிலும் அறிவு பெற்றிருந்தமையை இது காட்டுகின்றது. முகிஞ்சதரோ நாகரிகம் பழந்தமிழ் நாகரிகத்தோடும் யூபிருற்றஸ்-ரைகிறிஸ் நதிக்கரையிலே பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் விளங்கிய சுமேரிய நாகரிகத்தோடும் தொடர்புடையது என்பது அறிஞர் கருத்து. சுமேரியர் தமிழர் வழி வந்தவர்களே என்பதற்குப் பல சான்றுகள் உள.

பிரித்தானியப் பழம்பொருட் காட்சிச்சாலையிலே (British Museum) எகிப்திய ஆசுரேயப் பகுதிக்கு உதவித் தலைவராகிய எச். ஆர். ஹால் (H. R. Hall) என்னும் பேரறிஞர் தாம் எழுதிய புராதன சரித்திர நூலிலே (The Ancient History of the Near East) பின்வருமாறு கூறுகிருர்: சுமேரியரது உருவச்சாயல் அவர்களது ஓவியங்களினலே தெளிவாகப் புலப்படுகிறது. அது அவர்கள் நாட்டிற்கு அணித்தாக வாழ்ந்த செமித்திய குலத்தார், ஆரிய குலத்தாரின் உருவச்சாயலினின்றும் வேறுபட்டது, அவர்களது மொழியும் மேற்குறித்த இருசாராரின் மொழிகளினின்றும் வேறுபட்டது. இக்காலத்து இந்தியனின் உருவச்சாயல் பலலாயிரம் ஆண்டுகளின் முன்பு வாழ்ந்த திராவிட முன்னோரின் உருவச்சாயலை நிகர்த்தது. இக்காலத்துக் கிரேக்கர், இத்தாலியரின் உருவச்சாயலை நிகர்த்திருப்பதுபோல இந்தியாவிலும் திராவிட உருவச்சாயலே நிலைபெற்று நின்றது. ஆரியகுல உருவச்சாயல் மிக முந்தியே அழிந்து போயிற்று. பழைய சுமேரியர் திராவிட குலத்தாரென்பது சுமேரிய உருவங்களைக் கூர்ந்து நோக்குவோருக்கு இனிது புலப்படும், திராவிடமொழிகளை இக்காலத்திலும் வழங்கும் தென்னிந்தியனின் உருவத்தோற்றமே பழைய சுமேரியனின் உருவத்தோற்றம். பழைய சுமேரியர் இந்தியாவிலிருந்து கரை வழியாகவும் பாரசீகக்கடல் வழியாகவும் சுமேரு நாட்டிற் குடியேறினர்களென்றும் எண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புது நாட்டிற்குக்

கொண்டுவந்த நாகரிகம் சிந்துநதிக் கரையிலே வளர்ச்சி யெய்தியிருக்கலாம். சித்திரங்களை எழுத்தாக வழங்கிய முறையினின்று செப்பமெய்திய இவர்களது எழுத்து முறை பின்னுளிலே பாபிலோனியத்திலே சதுரமுனை எழுத்தாணிகளாலே பசுமண் வட்டிகைகளிலே எழுதப் பட்டு ஆப்பு வடிவ எழுத்துக்களாக ('Cuneiform' என் னும்) உருத் திரிந்தது. இவர்கள் சிநதுநதிக கரையி லிருந்து சுமேரு நாட்டிற்கு வரும் வழியிலே ஏலம் (Elam) எனனும் நாட்டிலே தமது நாகரிகத்தைப் பரப்பினுர்கள்.

சிந்துநதிக கரையிலிருந்த மீனுட்டு நண்டூராகிய முகிஞ்சதரோவின் வரலாற்றையும் பழைய சுமேரியே வரலாற்றினையும், 'குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள வடதிசைக கங்கையும் இமயமுங் கொண்டு தென்றிசை யாண்ட தென்னவன் வாழி' என்னும் சிலப்பதிகாரக் கூற்றையும் நாம் படிக்கும்போது தலைச்சங்கத் திறுதிக் கடல்கோளின்பின் பாண்டியனது ஆட்சியிலிருந்த தமிழ் மக்களுள் ஒரு பகுதியார் கடல் கடந்து பாரசீகக் கடல் வழியாகச் சென்று யூபிருற்றஸ்-ரைகிறிஸ் நதிககரையி லிருந்த நாட்டிற் குடியேறி அதறகுச் சுமேரியா என்னும் பெயரிட்டு வழஙகினுர்களெனபதும், மற்றொரு பகுதியினர் வடதிசைக் கஙகையும் இமயமுங கொண்டு சிந்துநதிக கரையிலே தாம் குடியேறிய நாட்டிறகு மீனுடு எனப் பெயரிட்டு இணைககயல் பொறிதத கொடியுடையராய் வாழ்ந்தாரென்பதும் புலனுகின்றன. இஙகு உறைந்து சிலகாலத்தின்பின் கரைவழியாகவும் சுமேரியாவிற்குச் சென்றிருக்கலாம்.

சாலதேய நாட்டுச் சரித்திரம் (Story of Chaldea) முதலிய பல நூல்களை யியற்றிய றகொசின் (Ragozin) என்னும் பேரறிஞர், தாம் இயற்றிய வேதகாலத்து இந்தியா (Vedic India) என்னும் நூலிலே பின் வருமாறு கூறு கிருர்: செமித்தியர் வருகையின்முன் பழைய பாபிலோனி யத்தில் வாழ்ந்த சுமேரிய-அக்கதியருக்கும் இந்தியாவின்

வடமேற்குப் பாகங்களிலே வாழ்ந்த திராவிடமக்களுக்கு மிடையேயுள்ள தொடர்பு சிறப்பு வகையானது. இரு சாரரும் ஒரே குலத்தினர். இக் குலத்தைத் துரானிய குலம் என்னலாம். அக்கதியநாட்டுத் தெல்லோநகரத் திலே கண்டெடுக்கப்பட்டதும் கி. மு. நாலாயிரம் என்னும் ஆண்டிற்கு உரியதுமாகிய சிலேத்தலேயானது தலேப்பாகை யணிந்த திராவிட உருவத் தலேயினது- தோற்றமுடை யது. சாலதேயப் பழைய நகரமாகிய ஊர் என்னுமிடத் திலே கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஒரு மனேயினுள்ளே தென்னிந்தியத் தேக்கமரத் துண் டொன்று கண்டெடுககப்பட்டது. தென்னிந்தியாவுக்கும் சாலதேயத்திற்கும் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளின் முன்னே வாணிகத் தொடர்பிருந்ததென்பதற்கு இது சான்ருகும்.

இருக்குவேத இந்தியா (Rig-Vedic India) என் னும் நூலாசிரியராகிய அவிநாஸ சந்திரதாஸ் (Abinash Chandra Das) 'சோழதோயம்' எனனும் மொழிச்சிதைவே 'சாலதேயம்' (Chaldea) என்றும் அந்நாட்டிற் சோழ குலத்தார் குடியேறியது இற்றைக்குப் பதினுயிரம் ஆண்டு களின் முன்னுதல் வேண்டுமென்றும் பல கார ணங் காட்டி விளக்குகிருர். சாலதேயநாட்டுத் தலேநகர் ஊர் என்னும் பெயரினது. சாலதேயத்தார் வான நூலிலே மிகத் தேர்ச்சியுடையவரா யிருந்தார். சீரியஸ்விண்மீன் (Sirius)* சூரியனேடு ஒருங்கு உதிப்பது ஆயிரத்து நானூற்றெண்பது ஆண்டுக்கு ஒருமுறையாகும் என அறிந்து அக்கால வெல்லேயினே ஒரு சோதிவட்டம் (Sothie Cycle) என வழங்கினர். அவர் கொண்ட ஆண்டு முந்நூற்றறுபது நாட்களேயுடையது. 365$\frac{1}{4}$ நாள் கொண்டது ஓராண்டு எனக் கொள்ளுமிடத்துச் சோதி வட்டம் ஆயிரத்து நானூற்றறுபது ஆண்டாகும்.

---

*இவ்விண்மீனின் தமிழ்ப் பெயர் 'மிருகவியாதர்' ஆமெனத் திருக்கணித சோதிடர் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் ஈழகேசரியிற் குறிப்பிடுகிருர்.

சோதி வட்டத்திற் காலத்தைக் கணித்தறியும் முறையானது தமிழா வேறுநாட்டிற் குடியேறுதற்கு முன்னே அவர்தம்மால் அறியப்பட்டிருந்த தென்பதற்குச் சங்கமிருந்த காலவெல்லைகளே சான்று பகருகின்றன. தலைச்சங்ககாலம் மூன்று சோதிவட்டம் (3 × 1480 = 4440), இடைச் சங்ககாலம் இரண்டரைச் சோதி வட்டம்) $2\frac{1}{2}$ × 1480 = 3700), கடைச்சங்க காலம் ஒன்றேகால் சோதிவட்டம் ($1\frac{1}{4}$ × 1480 = 1850). சீரியஸ் விண்மீன் சூரியனோடு ஒருங்கு உதித்த நாளிலே கடல் கோளினாலே தலைச்சங்கம் அழிந்ததெனக் கொள்ளின் அடுத்துச் சீரியஸ்விண்மீன் சூரியனோடு ஒருங்குதித்த நாளிலே கபாடபுரத்திலிருந்த பாண்டிய மன்னர் இடைச் சங்கத்தைத் தொடங்கினார்களெனக் கொள்வது பொருத்த முடைத்து. அவ்வாறு கொள்ளுமிடத்துக் கடுங்கோனுக் கும் வெண்டேர்ச் செழியனுக்கும் இடையிட்டகாலம் 1480 ஆண்டு ஆதல் வேண்டும், இதனுடன் 5550 கூட்ட 8030 ஆகும், ஆதலினாலே தலைச்சங்கத்திறுதிக் கடல்கோள் கி. மு. 7000 ஆண்டு வரையிலே நிகழ்ந் திருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.

சதபதப்பிராம்மணம் என்னும் வடமொழி நூலிலே குறிக்கப்பட்ட மங்வந்தரச்சலப்பிரளயம் கி. மு. 7500 க்குப் பிந்தியதாமென அவிநாஸ்சந்திரதாஸ் இருக்குவேதே இந்தியா என்னும் நூலில காட்டுகின்றார். ஆதலினாலே தலைச்சங்கத் திறுதிக்கடல்கோளும் மங்வந்தரச்சலப் பிரளயமும் ஒரே நிகழ்ச்சியேயாம் என்பது தெளிவாகின் றது. தெற்கே நிலம் கடலில் அழிந்தது; விந்தியத்திற்கு வடக்கேயிருந்த ராஜபுத்தானக்கடல் வற்றியது.

மத்ஸ்யபுராணத்திலே சலப்பிரளய வரலாறு பின் வருமாறு கூறப்படுகிறதென றகோசின் தமது நூலிலே காட்டுகிறார்; 'சத்திய விரதன் என்னும் திராவிடமன்னன் மலயத்தில் (மலையாளத்தில்) ஓடு கின்ற 'கிருதமாலா' என்னும் நதிக்கரையிலே தன்

முன்ஞோர்க்கு நீர்க்கடன் செய்யும்பொழுது அவன் கைத் தலத்திலே ஒரு சிறுமீன் அகப்பட்டது. மன்னன் காவற் கடவுளாகிய மாயோனை வழிபடுவோன். அக்கடவுளே சிறுமீன் வடிவாக அவன் கையைச் சேர்ந்தார், சலப் பெருக்கிலே உலகம் அழியப்போகிறதென்றும் நீதி மாஞகிய அம்மனனன் ஒரு நாவாயினை அமைத்து அதனுள்ளிருப்பின் தான் அவனைக் காப்பதாகவும் சிறு மீன் கூறிற்று. மன்னன் மீனைக் காத்து வர அது மிகப் பெரிதாக வளர்ந்து கடலினை யடைந்தது. பின்பு சலப் பெருக்கு நேருதலும் மீன் தோன்றி மன்னனது நாவாயை இழுததுச்சென்று இமயமலையிலே நௌபந்தனம் என்னும் சிகரததை யடைந்தது. இச்சத்தியவிரதன் மறுபிறப் பிலே வைவச்சுதன் மகஞன மநுவாஞன். இது மத்ஸ்ய புராணத்துக கூற்று.

மநுவரசன் சோழகுலத்துமன்னன் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. சத்தியந் தவருத நீர்மை இக் குலத்தாருக்கு இயல்பாக அமைந்ததென்பதைச் சிபி,. மநுநீதிகண்ட சோழன் என்றின்ஞோர் வரலாற்றிஞல் அறிகின்ருேம். இக்குலத்துமன்னன் சத்தியவிரதன் என்னும் சிறப்புப்பெயரையும் மநு என்னும் இயற்பெயரை யும் உடையவஞக இருகக வேண்டும்; இவன் கடுங்கோன் எனனும் பாண்டிய மன்னன் காலத்தவஞக வேண்டும்.

கடல்கோளாகிய சலப்பிரளயக் கதை தென்ஞட் டிலிருந்து வடநாட்டிற்குச் சென்றது, அஃதன்றியும் சுமேரியநாட்டிற் குடியேறிய தமிழரோடு யூபிருற்றஸ்-ரைகிறிஸ் நதிக்கரைககுச் சென்றது. அந்நாட்டிலே முன்ஞளில் வாழ்ந்த பெரோசஸ் (Berossos) என்னும் ஆசிரியர் இச் செய்தியை விரிவாகக கூறியிருககிருர். நாம் முன்னே குறிப்பிட்ட எச். ஆா. ஹால் (H. R. Hall) என்னும் பேரறிஞர் தம் நூலிலே இதைக் குறித்துக் கூறியிருப்பதனை மொழிபெயர்த்துத் தருவாம். அதன் முன் தொல்காப்பியவுரையிலே ஆசிரியர் நச்சிஞர்க்

கினியர் கூறிய குறிப்பொன்றினை உளங்கொள்ளுதல் இன்றியமையாததாகும். நிலந்தருதிருவின் நெடியோனாகிய பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலின், அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப என்றலின் தமிழ்மன்னரது அவைக்களத்தாரின் அறிவு மிகுதி தெளிவாகிறது. கடல்கோளின் முன்னிருந்த இம்மன்னன் இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானென்பது நமககு வியப்பைத் தருகின்றது. சுமேரிய சரித்திரத்திலும் சலப்பிரளயத்திற்குமுன் இருந்த மன்னர் எண்மருள் ஒவ்வொருவரும் 18,600 முதல் 43,200 வரையுமுள்ள எல்லையினவாகிய ஆண்டுகள் வீற்றிருந்தார்கள் என்னும் செய்தி அகப்படுகின்றது, இரு வரலாற்றுக்கும் தொடர்புண்மை இதனாலும் புலப்படுகின்றது.

கிறிஸ்தவ சமயநூலாகிய விவிலியநூல் ஆதியாகமத்திலே மனிதவர்க்கத்தாரின் ஆதித் தந்தை தாயாராகிய அத்தான் (Adam), அவ்வை (Eve) என்னும் இருவரையும் ஆண்டவன் படைத்த வரலாறும், இவரது சநததியாரது வரன்முறையும், அச்சந்ததியாருள்ளே நீதிமானாக விளங்கிய நோ (நூகு, நோவா, Noah) வின் வரலாறும் சலப்பிரளய வரலாறும், நோவும் அவன் புதலவராகிய செம், ஹாம், ஜாபெத்து என்னும் மூவரும் குடும்பத்தாரும் சலப்பிரளயத்திலே மாண்டுபோகாது காக்கப்பட்ட வரலாறும் பிறவும் கூறப்பட்டன. பெரியோனாகிய நோ என்னும் பொருளினதாகிய மாநோ என்னும் பெயர் மநு என்பதை ஒத்திருத்தலை நோக்குக. சலப்பிரளய வரலாற்றினை எபிரேயர் பாபிலோனியரிடமிருந்து பெற்றார்களென்பது அறிஞர் கருத்து.

எச். ஆர். ஹால் கூறுவது வருமாறு: 'பழைய பாபிலோனியததிலே தெய்வ மன்னர் பரம்பரை யொன்று மிகமிக நீண்ட காலம் அரசியற்றிய மன்னர்களை யுடையதாயிருந்ததெனப் பாபிலோனிய புராணக் கதைகள்

கூறுகின்றன. இத்தகைய வரலாறு எகிப்து நாட்டிலும் உண்டு. இம்மன்னர் பலரது பெயர்கள் பெரோசஸ் எழுதிய சரித்திரத்தில் நமக்குக் கிடைத்த பாகங்களிற்றோன்றிய அலோரஸ் (Aloros) என்னும் மன்னன் 36,000 ஆண்டு அரசு புரிந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவன் வழித் தோன்றிய கிசுத்திரோஸ் (Xisuthros) என்பான் காலத்திலே சலப்பிரளயம் நிகழ்ந்தது. ஒரு பாதி மனிதவடிவமும் ஒருபாதி மீன் வடிவமுமாகிய உவண்ணஸ் (Oannes), பாரசீகக கடலினின்று புறப்பட்டு மனிதருக்கு எழுத்து முறையையும் நாகரிக வாழ்க்கையையும் கற்பித்தார். கிசுத்திரோஸ், கசிசத்திரன் (Khasisadra) ஆக இருக்கலாம். இவன் காலத்திலே சித்நபிஸதீன் (Sit-Naphisthin) என்பான் பேழையுட் புகுந்து சலப்பிரளயத்தினின்று காக்கப்பட்டான். சலப்பிரளயத்தைக் குறித்துப் பெரோசஸ் சொல்லும் வரலாறு எபிரேயர் வழிவந்த தல்ல. அவர் தமது முன்னோர் வழிவந்த கர்ண பரம்பரைக்கதையையே எழுதுகிறார். எபிரேயர் வரலாறு இதனின்றும் எடுக்கப்பட்டது. கிசுத்திரோஸ், கசிசத்திரன் என்பவற்றிகும் சத்தியவிரதனுக்குமுள்ள ஒலியொற்றுமையை நோக்குக.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் நியூ ரிவ்யூ (New Review) 1941 ஸெப்டம்பர்ப் பகுதியிலே வண. ஹீராஸ் சுவாமியார் இந்தியாவிலும் ஸ்பெயின் தேசத்திலும் தாம் செய்த பரந்த ஆராய்ச்சியின் முடிபாகக் கிடைத்த உண்மைகளைத் தெளிவுபெற எழுதுகின்றார். கேனஸ் (Cannes) என்னும் பெயரை உவண (Uvanna) எனத் தருகின்றார். இது காவற்கடவுளின் பெயராகிய 'உவணன்' ஆக இருக்கலாம். மற்றொரு தலைவன் பெயரினை ஓடகன் (Odakon) எனத் தருகிறா. இது, தமிழ், 'ஓதக்கோன்' என்பதற்கு ஐயமில்லை. ஹீராஸ் சுவாமியார் கூறுவது: 'எனது ஆராய்ச்சியிலே கண்ணுற்றவற்றினைக் கூறுகிறேன். பழைய திராவிட மக்கள் இந்தியாவினின்றும் புறம்போந்து குருகூகளிலே (அந்நிய நாடுகளிலே) சிறப்பாகச் சுமேரியா

நாட்டிலே குடியேறுகிறார்கள். பெரோஸ் கூறியிருப்பது போல உவணனும் ஓதக்கோனும் தலைவர்களாக இம் மக்களை அழைத்துச் செல்கின்றனர். இந்தியாவிலே முகிஞ்சதரோவிலும் பிறநகரங்களிலும் இவர்கள் செங்கல்லினாலே வீடுகள் கட்டியதுபோலச் சுமேரியாவிலும் கட்டுகிறார்கள். இச்செய்தி ஆதியாகமத்திலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. அங்கிருந்து இவர்கள் சீரியா நாட்டிற்குச் சென்று ஹித்திய (Hittite) மன்னர் பரம்பரைக்கு அடிகோலுகிறார்கள். பின்பு மத்தித்தரைக் கடலோரத்திலே குடியேறிப் 'பாணிகள்' என்றும் பின்னாளிலே 'பினீசியர்' (Phoenicians) என்றும் வழங்கப்பட்ட குலத்தினராய்ப் பழங்காலத்திலே பெருஞ்சிறப்போடு விளங்கிய வாணிகத் தொழிலை நடத்துகிறார்கள். பின்பு கிரேக்க இத்தாலிய நாடுகளிலும் அணித்தான தீவுகளிலும் குடியேறிய மீனவர் (Minoans), எத்துருஸ்கர் (Etruscans) என்னும் பெயரோடு வாழுகிறார்கள்.

இஃதிவ்வாறாகத் திராவிட குலத்தின் மற்றொரு பகுதியார் அராபிநாட்டின் தென்திசையதாகிய யேமன் (Yemen) நாட்டிலே குடியேறி அந்நாட்டுக்குப் பண்டு எனப் பெயரிட்டு வாழ்நது அங்கிருந்து நீலநதிக்கரையிலுள்ள நாட்டினை யடைந்து எகிப்தியர் என்னும் பெயரோடு சிறந்த நாகரிகத்தைத் தோற்றுவிக்கிறார்கள். பின்பு ஆப்பிரிக்காவின் வடபாகத்திலே நுமித்யர் (Numidians), பேர்பெரியர் (Bereberians) என்னும் பெயரோடு வாழ்ந்து பின்னர் ஸ்பெயின் தேச ஐபீரிய குடாநாட்டை யடைந்து வாழ்கின்றனர். உரோமர் இவர்களை இந்நாட்டிற் கண்டு ஐபீரியர் (Ibereans) என்னும் பெயரினால் வழங்குகின்றனர். பின்பு பிரித்தானியத் தீவுகளையடைந்து (திராவிடச் சிதைவாகிய) துருயிதர் (Druids) என்னும் பெயரோடு வாழ்கின்றனர். பேரறிஞராகிய ஹீராஸ் சுவாமியார் ஒவ்வொரு கூற்றுக்கும் தகக ஆதாரம் காட்டுகின்றார். அவற்றையெல்லாம் முன்குறிப்பிட்ட நியூ ரிவியூ வெளியீட்டிலே காணலாம்.

மேலே நாம் திராவிடர் என்று வழங்கிய குலத்தினைத் தமிழர் என்றே சொல்லலாம். கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளும் அவற்றை வழங்கும் மக்களும் தமிழிலும் தமிழரிலும் இருந்து தோன்றிய காரணத்தினாலே பண்டைச் சரித்திரத்திலே திராவிட மென்பது தமிழையேயாம். ஆரியா வருமுன் இந்தியா முழுவதிலும் பரவியிருந்தவர் தமிழரே. பலுச்சிஸ்தானத்தின தெற்கே தமிழின் கிளைமொழியாகிய பிராகுவி (Brahui) இன்றும் நிலைததிருக்கிறது. பாரசீகத்தின் தென்பாகம், மெசொப் பொட்டேமியா, அராபிய, சீரியா, எகிப்து, ஆப்பிரிககாவின் வடபாகம், கிரேத்த (Crete) தீவு, கிரேக்கநாடு, (யவனபுரம), இத்தாலியநாடு (உரோமாபுரம்), ஸ்பெயின் நாடு, பிரித்தானியா என்று இன்னவாகிய நாடுகளிலெல்லாம் பழந்தமிழர் குடியேறி நாகரிகத்தைப் பரப்பினர்கள். காடுகெடுத்து நாடாக்கலும் குளந்தொட்டு வளம் பெருககலும் தொன்றுதொட்டுத் தமிழருககு இயல்பாகிய செயல்கள். செங்கற் கட்டிடங்களை முதலிலே தமிழரே கட்டினார்கள்; கடலோடும் கப்பல்களை முதலிலே யமைத்தார்கள; கணிதநூல், வானநூல், இசைநூல் என்னுமிவற்றிலே விசேஷத்திறமை படைத்திருந்தார்கள். (தமிழரது கணித வன்மையினை எடுத்துக்காட்டும் 'எண்ணிலளவை' என்னும் பொருளுரை 'செந்தமிழ்'ப் பத்திரிகையிலே அண்மையில் வெளிவந்தது.)

தமிழர் வழிவந்த எகிப்தியர்களும் ஆயிரத்து நானூற்றெண்பது ஆண்டுகொண்ட சோதிவட்ட அளவினாலே காலவரையறை செய்தார்கள். இற்றைக்கு ஐந்து சோதிவட்டத்திற்கு முன்னே உலகமிருந்த நிலையை நோககுவமாயின், நாம் மேலே குறித்த இடங்களிலெல்லாம் தமிழ்க்குடிகள் வாழக் காண்போம். சீனத்திலே மஞ்சள் நிற மங்கோலிய மக்கள் வாழக் காண்போம். ஆப்பிரிககாவின நடுப்பாகத்திலும் தென்பாகத்திலும் இந்தியாவிற் சில இடங்களிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் பழைய லெமூரியாவிலிருந்து பரந்த கருமைநிற நீககிரோவர்

வாழக் காண்போம். பாலஸ்தீனத்திலும் அடுத்த நாடுக ளிலும் செமித்தியகுலமக்கள் வாழக் காண்போம். பார சீகத்திலும் மத்திய ஆசியாவிலும் மத்திய ஐரோப் பாவிலும் வடதுருவத்துக்கு அணித்தான நாடுகளிலும் வெள்ளை நிறமும் நீலக்கண்ணும் செம்பட்டைமயிருமுடைய ஆரிய மக்கள் வாழக்காண்போம்.

ஆரிய குலத்தவராகிய யவனா கிரேக்க நாட்டைக் கைப்பற்று முன் அங்கு வாழ்ந்த திராவிடகுல மீனவர் (Minoans) கிரேத்தத் தீவிலே (Crete) அமைத்த கட்டிடங்களும் சிலைகளும் மிகச் சிறந்தவை. இவை யெலலாம் அண்மையிலே நிலத்தினை யகழ்ந்து எடுககப் பட்டிருக்கின்றன. எகிப்து நாட்டிலும் மெசொப்பெட்டே மியாவிலும் முகிஞ்சதரோவிலும் அகழ்ந்து கண்ட பழம் பொருள்களின ஆராய்ச்சிகளைக் குறித்து சிறந்த வரலாற்று நூல்கள் ஆங்கில மொழியிலே வெளிவந்திருக் கின்றன. முகிஞ்சதரோவினைக் குறித்து அண்டையிலே ஒரு தமிழ்நூல் வெளிவந்திருப்பதை யறிந்து பெருமகிழ் வடைகின்றேன். இன்னும் பல வரலாற்று நூல்கள் தமிழ் மொழியிலே தோன்ற வேண்டும். தமிழ் மக்கள் அவைதம்மைச் சிந்தனையோடு படிக்கவேண்டும்.

பிரித்தானிய சங்கம் (British Associaton) என்னும் ஆராய்ச்சிக் கழகத் தலைவராகிய ஸர் ஜான் எவன்ஸ் (Sir John Evans)என்னும் பெரியார் தமது தலைமையுரையிலே பின்வருமாறு கூறுகிறார்: 'மனித ஜாதியாரின தொட்டில் தென்னிந்தியாவாக இருக்கலாம். வடதிசை மககளின் முன்னோரும் மத்தித்தரைக கடற்கரையிலுள்ள நாடுகளில் வாழ்ந்த மக்களின் முன்னோரும் முதலிலே இருந்து சென்ற இடம் தென்னிந்தியாவாக இருககலாமென்று ஆராய்ச்சித்துறைகள் காட்டுகின்றன.' இள மாணவாக ளுக்குக் கல்விபயிற்றும் போதகாசிரியர்கள் தமிழ்கடுலத் தாரின் பழைமையையும் செழுமையையும் ஆராய்ந் துணர்ந்து மாணவர்க்கு அறிவுறுத்துவார்களாக.

9.* மதுரை இயற்றமிழ் மகாநாட்டுத் தலைமைப் பேருரை

'தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே! தளாசிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே!'

மாட்சிமைதங்கிய சேதுபதி மன்னரவர்களே! முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமப் புலவர்களே! தமிழணங்கின் செல்வப் புதல்வர்களே! புதல்வியர்களே!

வையைப் பேரியாறு வளஞ்சுரந்தூட்டப் பொய்யா வானம் புதுப்பெயல் பொழியத் தென்னர்குலத்தோர் செவ்விதிற புறந்த இச்செழும்பதியானது தொன்று தொட்டுத் தமிழ்ப புலவரும் புரவலரும் ஒருங்குகூடி உறையாடித் தாமின்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுதற்கு இயைந்த இடமாதலின், கூடல் என்னும்

---

* 1942-ம ஆண்டு ஆகஸ்டு 1, 2, 3 நாட்களில் மதுரையில் கூடிய முத்தமிழ் மகாநாட்டு இயற்றமிழ்ப் பகுதிக்குத் தலைமைதாங்கியபோது நிகழ்த்திய பேருரை.

சிறப்புப் பெயர் எய்தி நின்றது. அத்தகைய கூடலம் பதியிலே இம்மங்கலநாளிலே ஒருங்கு கூடியிருக்கும் நம்மனைவருக்கும் தமிழணங்கின் பேரருள் உளதாகுக.

இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்கி வடபா லிமயத்திலே கயலும் வில்லும் புலியும் பொறித்த மூவேந் தரின் அறமும் மறமும் ஆற்றலும் நம் உள்ளத்திலே நீங்காது நின்று ஒளி பரப்புவவாகுக.

தொன்மைநலஞ் சான்ற இந்நன்னகரிலே கன்மாப் பலகை யேறியிருந்து தமிழாராய்ந்த செந்நாப் புலவர்தம் செழும்பனுவலிலே கற்போர் காணும் செம்மையும் அழகும் உண்மையும் நம் நெஞ்சகம் புகுந்து பொய்தீர்த்து இருள் கடிந்து நம்மை நன்னெறிப் படுத்துவவாகுக.

இரண்டரைக் கோடியென்னும் எண்ணினராகிய நம் தமிழ்க்குலத்தார் அனைவரும் பசியும் பிணியும் பகையும் நீங்கிப் பொருட் செல்வமும் செவிச் செல்வமும் அருட் செல்வமும் ஏற்றபெற்றி யெய்தப் பெற்று மண்ணக மாந் தாக்கு அணியெனச் சிறந்து வாழ்வாராக.

இயலிசை நாடக முப்பாற் பொருளை ஆராய்தல் கருதி இப் பேரவையிலே வந்திருக்கும் நாமெல்லாம் காய்தல் உவத்தல் அகற்றி, நுண்மா ணுழைபுலமுடைய நம் முன்னோரைப்போல் நடுவுநிலை நெடுநகர் வைகி, உண்மை வழிச்செல்லும் உறுதிப்பாடுடையே மாகுக.

வரவேற்புக் கழகத்தாரது கேள்விக் கியைந்து இப் பேரவையிலே எழுந்தருளியிருக்கும் கல்வி கேள்விகளான் மிக்க பேரறிஞர் பலர், தாம் அரிதின் ஆராய்ந்து கண்ட செம்பொருண் முடிபுகளை அவைக்களத்து எடுத்துரைக்க நாமெல்லாம் கேட்டு மகிழ்வுறப் போகின்றோம. அங்ஙனம் மகிழ்வுறுத்தும் நீர்மைய வாகிய அறிஞர் பேருரைக்குத் தோற்றுவாயாக ஒருசில கூறுதல் இன்றியமையாத தாயிற்று, அத்தகைய தோற்றுவாய்தானே சென்ற காலத்தில் நம்முன்னோரெய்திய சீரினையும், இனி எதிர்

காலத்தில் நம் குலத்துதிப்போர் எய்தப் போகின்ற சிறப் பினையும், ஆங்கவர் சிறப்பெய்தும் வண்ணம் இன்று நாம் செய்தற்குரிய தமிழ்த்தொண்டினையும் வகுத்துக்கூறு மியல்பின தாகவேண்டும். சென்ற காலத்துச் சீரினை எதிர் காலத்தாருக்கு இயைவிக்கும் நிகழ்காலத்து வினையாகிய தமிழ்த்தொண்டானது மும்மையினையும் தழுவி நின்றது; ஆதலின் அத்தொண்டினை ஓரளவிற்கு விரித்துக்கூற முற்படுவாம்.

பள்ளியிற் பயிலும் தமிழ்ச்சிறுர் முதற் பல்கலை கற்றுத் தேறிய முதுதமிழ்ப் புலவர் ஈருக அனைவரும் தமிழ்க்குலத்தாரின் உண்மை வரலாற்றினை உளங்கொண் டுணர்தற்கு வேண்டிய சிறியவும் பெரியவுமாகிய வர லாற்று நூல்கள் பல தமிழ் மொழியிலே எழுதப்படல் வேண்டும. இதுவே நாம் செய்யவேண்டிய தமிழ்த் தொண்டுகளுள்ளே முதலில் வைத்து எண்ணுதற் குரிய தென்பது எனது உள்ளக்கிடக்கை.

இற்றைக்கு ஏறத்தாழப் பதினுலாயிரம் யாண்டுகளுக்கு முன்பு நம் முன்னோ, பஃறுளியாற்றுக்கும் குமரி யாற்றுக் கும் இடையே கிடந்த பெருநிலப்பரபபிலே சீருற வாழ்நது எண்ணூலும் இசைநூலும இயல்நூலும் வான நூலும் மனையமைப்பு நூலும் கலமமைப்பு நூலும் பிறநூலும் வல்லாராய், இந்நகர்கு மதுரைப் பெயரளித்த தொன்ன கராகிய (கடல் கொண்ட) தென்மதுரையில் நிலந்தரு திருவி னெடியோனை யுள்ளிட்ட அருந்திறன மன்னர்தம் அவைக்களத்திலே சிறந்து விளங்கினுரெனபதும், இற்றைக்கு ஏறத்தாழ ஒன்பதினுயிர மாண்டுகளின் முன்னே கடல கோளினுலே குமரிநாடு அழிந்த பினனர் உவணன், ஓதக்கோன் என்னும் தலைவர்கள் வழிப் படுத்தக கலத்திற் சென்று பாரசீககுடாவின் வட பாலதாகிய சுமேருநாடடிற் குடியேறினு ரென்பதும், மேலும் அராபிநாட்டின தென்பாலதாகிய ஏமநாட்டிலும் நீலநதி வளம பெருக்கும் மிசிரி என்னும் எகிப்து நாட்டிலும்

சுமேரு நாட்டினை யடுத்த ஏல நாட்டிலும் சிந்து நதிக் கரையில் விளங்கிய மீனாட்டிலும், ஆங்கதற்கு வடபால தாய்ப் பனிபடர்ந்த மலைகளாற் சூழப்பட்ட மரங்கொத்தி நாட்டிலும், பிறநாடுகளிலும் வாழ்ந்தார்கள் என்பதும், சுமேரு நாட்டின் வடக்கே சோழர் குடியேறச் சோழதேயம் எனப் பெயரிட்டு வாழ்ந்த நாடே மொழிச்சிதைவினாலே சால்டியா எனப்பட்டதென்பதும், பண்டைக் காலத்திலே கலத்திற் சென்று பண்டமாற்றினாலே நிதிக்குவை யீட்டிய பாணிகள் தமிழ்நாட்டு வணிகரா மென்பதும் ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையே கிடக்கும் மத்தித்தரைக் கடலின் இரு கரையிலும் வாழ்ந்து பண்டை யவனரும் உரோமரும் வருவதற்கு முன்பு நாகரிகம் பரப்பிய மீனவர், எத்துருஸ்கர், நுமிதியர், பேர்பெரியர், ஐபீரியா ஆதியோர் தமிழ்க்குலத்தின ராமெனபதும், வில்லவராகிய சேரமன்னர் கலத்திற் சென்று மத்தித் தரைக் கடலிலுள்ள கிரீத (Creat) என்னும் தீவினைக் கைப்பற்றி ஆளுகை புரிந்த செய்தியே, 'வன்சொல் யவனர் வளநாடண்டு' எனச் சிலப்பதிகாரத்துள்ளும், 'நயனில் வன் சொல் யவனர்ப் பிணித்து' எனப் பதிற்றுப் பத்தினுள்ளும் கூறப்பட்ட தென்பதும் பிறவும் பண்டைக் கால வரலாறு(Ancient History)கூறும் நூல்களினுள் ளும் நம் நாட்டு மேனாட்டுப் பண்டை யிலக்கிய நூல்களி னுள்ளும் பரவிக்கிடக்கின்ற முடிபுகளாம். இம் முடிபுகளுள் ஒருசில, உலக புராணம் எனனும் தலைப்பெயர்க் கீழ்ச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும் பிற வெளியீடுகளிலும் வெளிவந்ததனைத் தமிழன்பர்கள் அறிவார்கள்.

அஃதன்றியும் ஒருசா ராசியரான தமிழ்க்குலத்தார், பசிபிக் பெருங்கடலினைக் கடந்து சென்று மத்திய அமெரிக்காவிலே குடியேறி, மெக்ஸிகோ, பீரு, யுக்காட்டன் முதலிய இடங்களிலே வாழ்ந்து மாயா நாகரிகத்தைத் தோற்றுவித்தன ரெனக் கூறுவர். இவற்றையெல்லாம் ஒருங்கு வைத்து நோக்குமிடத்து உலக சரித்திரமே தமிழ்க் குலத்தாரோடு தொடங்குகிறதென்பதும், இற்றைக்கு

ஒன்பதினாயிரம் ஆண்டுகளின் முன்னே பூவலயத்தின் நடுப்பாகம் முழுவதிலும் தமிழ்க குலத்தார் சீரும் சிறப்பு முற்று வாழ்ந்தனர் என்பதும் பெறப்படுகின்றன. கடல் கொண்ட அத்லாந்திஸ் (Lost Atlantic). தெங்க மரமும் யானையு முடையதா யிருந்ததெனக் கூறப்படுதலின் கடல் கொண்ட குமரி நாட்டின் வரலாறே மத்திய அமெரிககாவினின்று ஐரோப்பாவினை யடைந்த ஞான்று கடல் கொண்ட அத்லாந்திஸ் வரலாறாக உருததிரிந்த தெனக கொள்வதும் ஒரு தலை. இவைபோன்ற முடிபுகளை யெல்லாம் வரலாறறு நூற்றுறையிலே வல்லுநராயுள்ளோர் காய்தல் உவததல் அகற்றி நடுவுநிலைமையோ டாராய்ந்து பொருட்டொடா நிலையி னமைந்த நூல் வடிவாககித தருதல் வேண்டும்.

காலமும் கடலும் செல்லும் கவாந்தன போக எஞ்சி நிற்கும் அருந்தமிழ் நூல்களின் வரலாற்றினைச் செவ்விய முறையிலே ஆராய்ந்தறிந்து நமது மொழியிலும் பிற மொழியிலும் தமிழிலககிய வரலாறுகள் சிறியவும் பெரியவு மாக எழுதித் தமிழ்நூல்களின் மதிப்பினை உலகிற்கு அறிவுறுத்த முயலவேண்டும். ஆங்கில மொழியிலே நிகண்டு நூல் ஒன்றினை யாத்தமைத்த ரேஜெட் (Rojet) எனபாரோ ராசிரியா அத்தகையநூல் பிறமொழியொன்றி னும் இலதென முதற்பதிப்பிலே கூறினும், இரண்டாம் பதிப்பு முகவுரையிலே அமரசிஙகா என்பாரியற்றிய நிகண்டு நூலொன்று வடமொழியிலே உளதெனக் குறிப் பிட்டார். பிங்கலம், திவாகரம் முதலிய நிகண்டு நூல்கள் தமிழமொழியிலுள வெனனும் உண்மையினை அவா அறிந் திலா; தமிழராகிய நாம் அறிவித்திலே மாதலின.

பாரத நாட்டு இசையினைக குறித்து ஆங்கிலத்திலே நூலெழுதிய 'பக்ஸ் ஸ்டிராஙகு வேய்ஸ' எனனும் பேரறி ஞரும் பிறரும் வடமொழி யிசைநூல்களையே குறிப்பிட்டுச் சென்றனர்; தமிழராகிய நாம் நமது இசைககலையினைக் குறித்து அவா போன்றுருக்கு அறிவித்திலே மாதலின்.

சாரங்க தேவரியற்றிய சங்கீதரத்நாகரம் தேவாரத்திற் பொதிந்த தெய்வ இசையினைப் பெருகக் குறிப்பிடுகிற தென அறிந்திருந்தும் நம்மவருள் ஒரு சாரார் அவ் வுண்மையினை உலகிற்குணர்த்தாது மறைக்க முயல் கின்றனர்.

இனி. நம் கைக்கு எட்டாது அழிந்து போன நூல் களைக் குறித்துப் பழையவுரையாசிரியர் கூறுகின்ற வரன்முறைகளையும் மேற்கோட் சூத்திரங்களையும் பொன்னே போற் போற்றி நூலவடிவாக்கி அச்சேற்றிப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு செய்தற்குரியன: குண்டலகேசி, வளையாபதி, தகடூர்யாத்திரை, இசை நுணுக்கம், சயந்தம், குணநூல், செயிற்றியம், பரத சேனாபதியம், பஞ்சமரபு, இந்திரகாளியம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், ஆசிரியமாலை, மாபுராணம் என்று இத் தொடக்கத்தன. நாடகத் தமிழ்நூலாகிய பரதம், அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களும் இறந்தன என்று அடியார்க்குநல்லார் கூறுதலின், தமிழ்மொழியிலே பரதம் எனப் பெயரிய நூலொன்று இருந்து இறந்த உண்மை புலப்படுகின்றது. இதற்கும வடமொழிப் பரதத்துக்கும் உள்ள தொடர்பு அறிஞர் ஆராய்ந்தறி தற்குரியது. வரன்முறை யாராய்ச்சி சிறிதும் வாய்க்கப் பெறாத அரபத்தநாவலர் எனனும் பிற்காலத்து நூலாசி ரியர் தமது தமிழ் முன்னோர் வழித் தமக்குக் கிடைத்த அரும் பொருண் முடிபுகளைப் பொதிந்து தாமியற்றிய பரதம் என்னும் நூலுக்கு வடமொழி முதனூல் கற் பிக்கும் விழைவினாலே பதின்மூன்றாம் நூற்றாண்டி லிருந்த சாரங்கதேவரை அகத்தியர்க்கு முன் இருந்தவ ராக்கிச் சுத்த பௌராணிக மதத்தில நிற்பாராய் வட மொழியிலே சாரங்கதேவ முனிவர் பரதநூலை ஓரிலக்ஷம் கிரந்தங்களாற் கூறினர் எனவும், அவர் நூற்கு வழிநூல்செய்த அகத்தியனார் ஆறுபிரஞ் சூத்திரத் தினால் அறைந்தனரெனவும், சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவின் மாந்தர்பொருட்டாகத் தாம் சுருக்க நூல்

செய்ததாகவும் கூறிச் செல்கின்றார், அவர் கூற்று, எனது அருமை நண்பரொருவர் பௌராணிக மனப் பான்மையினை எள்ளி நகையாடும் கருத்தினொடு வெளியிட்ட 'பள்ளியகரப் பழங்கதை'யை நினைவுகூருக் கொண்டு வருகிறது.

பரதம் என்னும் பெயர்க்காரணத்தை யாராய்தற்குச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் கூறிய முடிபுகள் நமக்கு உதவுகின்றன. ஒன்பான்சுவையும் எண்வகை மெய்ப்பாடும் என்னும் இவற்றோடு இயைபுடைய 'இரதம்' என்னும் மொழியினை அரும்பத வுரையாசிரியர் பலகால் வழங்குகின்றார். வடமொழியலங்கார நூலார் கண்ட 'ரஸம்', 'பாவம்' என்னும் மொழிகளின் பொருளினை இம் மொழி தந்துநின்றது. 'பண்', 'இரதம்', 'தாளம்' என்னும் மூன்றும் அடங்கிய பிண்டம் 'பரதம்' எனலாகும். முத்தமிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையாரது தேவாரத் திருப்பதிகத்திலே,

'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையு
முண்ணின்ற தோர்சுவையும் முறுதாளத் தொலிபலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர்மூன்றும்
விண்ணும் முழுதானா விடம்வீழிம் மிழலையே'

என இறைவனது இசையுருவினையும் எண்பேருருவினையும் கூறிய அருமைத்திருப்பாடலிலே, 'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்' எனப் பண்ணீர்மையும், 'உண்ணின்ற தோர்சுவையும்' என இரதமும், 'உறுதாளத் தொலிபலவும்' எனத் தாளக்கூறுபாடுகளும் மேற்காட்டிய முறையிலே அமைந்துநிற்றல் காண்க. 'பரதமுனிவர் செய்தலிற் பரதமாயிற்று. அப்பெயரினர், தமிழுக் குரியரலலர்' எனின், 'அரசகுமரரும் பரதகுமரரும் என அரசரோடு உடன்வைத்தோதிய பரதர்குலம் தமிழுக் குரியது; அக்குலத்தினரொருவர் தமிழ்ப்பரதத்தைச் செய்தாரெனக் கொள்ளுதலில் நேர்ந்த இழுக்கென்னை?' என்போம்.

பாவம் இராகம், தாளம் என்னும் இவற்றைக் கூறும் நூல் 'பரதம்' எனப் பெயரெய்தியது எனப் பிற்காலத்தார் கூறினா. வடமொழி நான்காம் பகரத்தை முதனிலையாகக் கொண்ட 'பாவம்' என்னும் சொல், யாமறிந்தவரையிலே பழந்தமிழ் வழக்கில் வந்திலது. அங்ஙனமாதலின், அடியார்க்குநல்லார் கூறும் தமிழ்ப்பரதத்தின் முதனிலையெழுத்து இருமொழிககும் பொதுவாகிய முதற்பகரமேயாகுமென்பதும், அது பண்ணைக் குறித்ததென்பதும் அறிதற்குரிய. அவ்வண்ணமே இடைநின்ற 'ர' கரம் பழந்தமிழ்வழக்கிலுள்ள இரதத்தினைக் குறித்ததெனவும், அவ்வழக்கிற் காணப்படாத 'இராக'த்தினைக் குறித்திலதெனவும் அறிதல் வேண்டும். 'பண்ணும் இரதமும்' என்னும் முறையினை மறந்த பிற்காலத்தார் இரதமாகிய பாவத்தினை முன்னும் பண்ணீர்மையாகிய இராகத்தினைப் பின்னுமாக மாறிவைத்து இடர்ப்படுவாராயினர்.

வடமொழிப் பரதமும் சங்கீதரத்திநாகரமும் சிறந்த முறையிலே தமிழில் மொழிபெயர்க்கப்படுவவாயின், அம்மொழிபெயர்ப்புநூலகள் தமிழிசையின் மறுமலாச்சிக்கு பெரிதும் உதவுவ என்பது எனது கருத்து. பல்கலைக் கொடைவள்ளலாகிய செட்டிநாட்டரசரவர்கள் தங்கள் பல்கலைக்கழகத்தின் மூலமாகவோ பிறவாயிலாகவோ தமிழ்வளர்ச்சிக்கு வேண்டிய இப்பணியினையும் செய்து நிறைவேற்றுவார்களெனத் தமிழுலகம் எதிர்பார்க்கின்றது.

இயற்றமிழ்த்துறைக்குத் தலைமைதாங்கும் யான் அத்துறையோடமையாது இசைத்தமிழினைக் குறித்தும் பேசப் புகுந்தது பொருத்தமாமோ என இப்பேரவையோர் ஐயுறலாம். அவ்வையுறவினை நீக்குதற்பொருட்டு இசைக்கலைக்கு உறையுள் எனப் போற்றற்குரிய தஞ்சைமாநகரிலே பரம்பரை யிசைச் செல்வர் குலத்துதித்தவர்களும் சென்னைப் பல்கலைககழகத்து இசைப்பகுதியாசிரியராகக் கடமை புரிபவர்களுமாகிய திரு. K. பொன்னையாபிள்ளை

யவர்கள் அண்மையில் வெளிவந்த 'குமரன்' இசை மலரிலே கூறியதோர் சீரியவாசகத்தினை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அது வருமாறு:

'இனி, இயற்புலவர்கள் இசைப்புலவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். இயற்புலவர்கள் இசையுண ராமலும் இசைப்புலவர்கள் இயலையுணராமலு மிருந்தது தான் தமிழிசை மறைவிற்கு முதற்காரணம். இயலின்றி இசையிலலை; இசையின்றி இயலில்லை. வாய்க்காலும் அதன் வழியே ஓடுகின்ற நீரும்போல் இயலும இயல்வழி யோடும் இசையும் இருக்கின்றன. தண்ணீ ரில்லாத போது வாய்ககாலிருந்தும் பயனில்லை. வாய்க்கால் இல்லாத தண்ணீர் சரியாகப் பயன்படாமல் பரந்தோடிக் கெட்டுவிடும். இரண்டும் இருந்து, தண்ணீர் பாயுமானுல் வயல் நன்ருக விளையுமாறுபோல, இயலும் இசையும் கலந்து மிளிருமாறுல, கேட்போருள்ளத்தை மகிழ்விககும். ஆகவே இயற்புலவர்களும் இசைப்புலவர்களும் ஒன்று பட்டால்தான் தமிழிசை யினிமையைக் காணமுடியும்.' ஆதலினுலே இயற்புலவர்களை விளித்து, 'ஓ இயற் புலவர்களே! இசைவளர்ப்போம் வமமின்!' எனவும் இசைப்புலவர்களை நோக்கி, 'ஓ இசைபபுலவர்களே! இயல் வளாப்போம் வம்மின்!' எனவும் நாம் கூறுவோமாக. கதைதழுவிய கூத்தாகிய நாடகமானது இயல் இசை யிரண்டினையும் தன்னுள் அடககியதாதலின், நாடகத் துறை வல்லோா முத்தமிழ் வளர்ச்சிக்கு விரைந்து முன் னிற்பாரென்பது சொல்லாமலே அமைகினறது.

இயற்புலவர் கற்றற்குரிய நூல்களிலே இசைநாடக முடிபுகளும் விரவிவருதலை ஒருசிறிது காட்டப்புகுவாம்: அருந்தமிழ்ப்புலவர் வகுத்துரைத்த அகத்திணைத் துறை பலவும் நிரலுற வமைந்த தஞ்சைவாணன்கோவைபோல் வன, தலைவன். தலைவி, செவிலி, நற்ருய், பாங்கன், பாஙகி, அறிவர், கண்டோர், காதற்பரத்தையர் காமக் கிழத்தியா என்று இன்னோர் நாடகபாத்திரங்களாகத்

தோற்றி நடிக்கும் காதல்நாடகங்களேயாம். காளிதாசப் பெருங்கவி யாத்த சாகுந்தல நாடகத்தோடு இவை ஒத்த பொருண்மைய. ஆனிரை கவர்தலும் போர்விழைந் தேகலும் அரணங்கோடலும் மலைதலும் வென்றி மாலை சூடலும் என்று இத்தொடக்கத்தகக புறத்துறைகளை நிரலுறக் கூறும் வெண்பாமாலைபோல்வன அறனும் மறனும் தழுவிய வீர நாடகங்களேயாம். வடநூற்புலவர் வகுத்த நால்வகை விருத்திகளுள்ளே கைசிகி, பாரதி விருத்திகள் புறநாடகங்களுள்ளும் வருவன

தொல்லாசிரியர் விரிவுறக் கூறிய மெய்ப்பாட்டியல் இயற்றமிழுக்கு அணியாந் தகைமையது. இசைநாடகங் களுக்கு இன்றியமையாத உறுப்பாந் தகைமையது. செய்யுளியலுட் கூறிய வண்ணவிகற்பங்களும் எழுத்தினுட் கூறிய மாத்திரை, அளபெடை என்றின்னவும் இசைப் பகுதிக்கும் உரிய. வீரசோழியநூலும் உரையும் சந்தி, சுவை யுள்ளிட்ட நாடகவியல விலக்குறுப்புக்களையும் செந்துறை, வெண்டுறை மார்க்கங்களையும் சிந்து, திரிபதை, சவலை, சமபாதவிருத்தம், தாண்டகம் என்னும் இசைப்பாவகைகளையும் வண்ணக்கூறுபாடுகளையும் தெள்ளிதின உரைப்பன. எழுத்து, சொல, பொருள், யாப்பு, அணி என்னும் இயற்பகுதியைந்தும் இசைநாடகத் துககு அடிபபடையான உண்மைகளும் தொலலாசிரியர் வகுத்த எழுத்து. சொல், பொருள் என்னும் மூன்றுறுப் படங்கிய பிண்டத்தினுள்ளே ஒருவாறு அடங்கிநிற்ப வாதலினன்றே இயலிசைநாடகத் தொடர்நிலைச் செய்யு ளாகிய சிலப்பதிகாரத்துக்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லார்.

'எழுத்தின் றிறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின
றெழுதத் துணிவதே யான்'

எனக் கூறியமைந்தார்.

அவர் அவ்வாறு கூறினுரேனும், சிலப்பதிகார நூலினை முழுதும் படித்து உவகையுறும் விழைவுடையோர் இசை நாடக நூற்றுறைகளை அறிந்துகொள்வது இன்றியமையாத தென்பதை யாவரும் உணர்வர். சேரமுனிவன் செய்தளித்த சிலப்பதிகாரத்தை உளங்கொள்ளும் ஆர்வமானது பிடர்பிடித்துந்தப் பதினெட்டாண்டுகளின் முன்னே நாடகநூல் முடிபுகளை ஓரளவிற்குக் கூறும் மதங்கசூளாமணியினைக் குருவருளும் தமிழ்க்குல முதல்வர்தம் ஆசிமொழியும் உறுதுணையாகக் கொண்டு ஒருவாறு எழுதி முடித்தேன். மதுரைச் தமிழ்ச் சங்கத்தார் அதனை உவந்தேற்று வெளியிட்டனர். கழிந்த பத்தாண்டுளாகப் பழந்தமிழிசை மரபினை யான் ஆராய்ந்துகொண்டு வருதலை இப்பேரவையானது நன்கறியும். இமயவல்லியாகிய அங்கையற்கண்ணம்மையின் பேரருளினுலே இமயத்தில உறைந்த நாட்களிலே முன்பு தெளிவுபடாத உண்மைகள் பல நன்கு தெளிவாயின. அதனுல் பத்தாண்டுகளாகச் செய்துவரும் ஆராய்ச்சி முற்றுப்பெறும் நிலையிலிருக்கிறது. தமிழ்ப் பெருமக்களின் உளங்கனிந்த அன்பாகிய அருந்துணையும் எனக்குப் பெருகக கிடைததுளது என்பதை யான் உணருகிறேன. ஆதலினுலே பழந்தமிழிசை மரபு விரைவிலே நூலுருவமாக வெளிவரலாம்.

கண்டத்தினுலோ கருவியினுலோ இசைமரபு தவருது பாடுகின்ற ஆற்றலை இயற்புலவரெல்லாரும் பெறுதல் அரிதெனினும், இசைப்புலவன் அமைத்துத் தந்த ஆளத்திககுத் தக, இசைபபாடல்களைச் சுவையமைய ஆக்குந் திறமையினை இயற்புலமை நிரம்பும் விருப்புடையோ ரனைவரும் முயனறு பெறுதல் வேண்டும. அஃதன்றியும் தமிழணங்கிற்கு அணிகலனுகச் சேரமுனிவன் செய்தளிதத சிலப்பதிகாரச் செழும்பனுவலினை அறங்கேற்றுகாதை, ஆய்ச்சியர் குரவை என்றித் தொடககத்த புறநீஙகலாகப் படித்தோமென இயற் புலவர் சொல்வது அவருக்குப் பெருமையாகாது. முத்தமிழ்க்

காப்பியத்தினை முற்றும் படித் தின்புறுதற்குக் கருவியாக இசையியல் நாடக வியல்களை ஆராய்ந்து தெளிய வேண்டும்.

இனி, இடைக்காலததிலே சமண பௌத்த ஆதிககம் கழிந்த பின்னர்ச் சைவ வைணவ மதங்கள் மறுமலாச்சியடைதற்குக் காரணராயிருந்த நாயன்மாாகளும் ஆழ்வாாகளும் இன்னிசைப் பாடல்களினுலே தொண்டருள்ளத்திலே அன்புநீர் பாய்ச்சி அருள் வெள்ளம் பரவச்செய்தார்கள். 'பண்ணீர்மை மொழிப் பரவையார் கொழுந' ராகிய சுந்தரமூர்த்தி நாயனுர், தாம் பாடிய திருககோலககாத் திருப்பதிகததிலே,

'நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பும்
ஞானசம் பந்தனுக் குலகவர் முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை'

என்னுமிடத்து முத்தமிழ்விரகராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது தமிழ்த்தொண்டினைக குறிப்பிடுகின்றுர். அத்தொண்டு எந்நீர்மையது? இன்னிசையே கருவியாக நாடெங்கும் இயற்றமிழினைப் பரப்பிய நீர்மையது. சுருங்கிய காலவெல்லையினுள்ளே ஆளுடையபிள்ளையார் தமிழ்நாடு விழித்தெழுமாறு செய்த அற்புதச் செயலுககு உறுதுணையாக நின்றன, ஆண்டவனது பேரருளும இசையோடியைந்த இயலும் எனக கூறுவது மிகையாகாது. 'மருவியவேழிசைபொழிய மனம்பொழியும் பேரன்பாற் பெருகிய கண் மழைபொழியும்' புகலிப் பெருந்தகையாரும், மற்றைய குரவாகளும் அருளிச்செய்த இன்னிசைச் செழும்பாடல்கள் தமிழ் மக்களுடைய உள்ளததிற் புகுந்து ஊக்கிய காரணத்தினுலேதான், தமிழர் மனவலியும் உடல்வலியும் பெற்றுச் சோழமன்னரது படைத்தலைமையிலே கலத்தினும் காலினும் சென்று வேறறுநாடுகளை வென்று எதிர்த்திசையிலும் தமிழ் முழஙகச் செய்தார்கள்.

நம் முனனோர் இயல், இசை, நாடக முத்தமிழ்த்துறைகளை மாத்திரமல்ல; கலைத்துறைகள் வேறு பலவற்றையும்

பேர்றறிஞாகளென பதைப் பழைய நூல்களால் அறிகின் ஞேம் சிறபத்துறையிலும் ஓவியத்துறையிலும் நம் முன் னேர் நிரம்பிய புலமை படைத்திருந்தா ரென்பதற்குத் தென்னிந்தியாவிலுள்ள அழகிய கோயில்களே சான்று பகருகினறன. மருத்துவநூலிலே அவா படைத்துள்ள ஆற்றலினைச் சித்தவைத்தியமுறை கண்கூடாகக காட்டு கிறது. மரக்கல மமைககும் நூலும் வானநூலும் பிறவும் முழுதும் அழிந்துபோ-விலலை. ஆதலினுலே அவை தம்மை யெலலாம் பண்டைப் பெருநிலைக்குக் கொண்டுவருதல் கூடும்.

காலநீரோட்டம் விரைந்து ஓடுகின்றது. தமிழர் பழங் காலத்துச சிறப்பினை மாத்திரம பறையறைந்துகொண் டிருப்பாரெனின நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் முழுதும் இழநத நீாமையராதலும் கூடும். சென்ற நூற்றுண் டிலே ஐரோபபாவிலும் அமெரிககாவிலும் விஞ்ஞான நூல் மிகவும் விருத்தியடைந்து விளங்குகின்றது. அறிவுச் செல்வத்தைத தமிழ்மொழி பெறுவதற்காவன செய்தல் சிறந்த தமிழ்ததொண்டாகும். லண்டன்மாநகரிலுள்ள வேத் தவை (Royal Society) என்னும் அறிவுநூற் புலவர்குழு வானது, நமது தமிழநாட்டிலே பிறந்து தமிழ்நாட்டுக கலைக கழகங்களிலே கலவிபயின்று கணிதநூலினும் பெரும் புலமை படைத்த திரு. ராமாநுசம், திரு. இராமன், திரு. கிருஷ்ணன் எனற இன்னேருடைய புலமையைப் பாராட்டி அவையகததாராக்கிய செய்தி கேட்டு நாமெல்லாம் பெரு மகிழ்வடைந்தோம். கணித விஞ்ஞான அறிவு நிரம்பிய பூவுலகததுப் பேரறிஞர் குழுவினிலே தலையணியிலிருக்கு மாற்றல் தமிழனுக்கு உண்டு என்பதை அறிந்துகொண் டோம். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரின் சிறந்த முயற்சியினுலே தமிழ்மொழியிலே பூதநூல் (Physics), வேதிநூல் (Chemistry) புதிய தருக்கநூல் (Logic) என்று இவை வெளிவந்துவிட்டன. ஆட்சியும் குணமும் காரணமாகக் கலைச்சொறகள் நாளடைவிலே செம்மை யுறுந்தன்மையின. அங்ஙனமாதலின் வடமொழி, தென்

மொழி, மேற்றிசைமொழி யென்னும் முந்நீரமொழிகளும் இற்றைநாளிலே அறிவுப்பெருங்கடலிலே கலத்தலை யாமெல்லாம் விருப்போடு ஏற்றுககொள்வோமாக. தமிழ் நாடு தனக்குரிய ஆக்கத்தினைப் பெருகிற நன்ளுளிலே அறிவுககடலிலிருந்து எழப்போகின்ற தமிழ் முகிலானது புன்மையாகிய உவர்த்தன்மையினை முழுதும் நீக்கித் தூய தமிழ்நீரினை நாடெங்கும் பொழியக் காண்போம். அந்நாள் மிகவும் அணுகி வருகிறதென்பதற்கு இம் முத்தமிழ் மகா நாடே சானறுபகருகினறது. மூடநம்பிக்கையோடு கூடிய பௌராணிக மனப்பானமையென்னும் இருள் அகல்கின்றது. அறிவுககதிரோனுடைய இளவெயிலானது நம் உள்ளத துககு உவகையையும உடலத்துக்குப் புதிய வலிமையை யும் தருகின்றது. புத்தம்புதிய நூல்கள் பலவற்றைப் புனைந்து தமிழன்னையின திருவடிகளிலே காணிககையாக வைப்போமாக. சேரமுனிவன செய்தளித்த சிலம்பினை யணிந்த அச்சீறடிகள் நம் நாவிலே களிநடம் புரிபவாகுக. உறக்கம் நீங்கி விழித்தெழுந்த தமிழராகிய நாம் ஓய்வினறி யுழைதது உலகனைத்திலும் நம் மொழிசசெலவத்தைப் பரப்புதறகு முயல்வோமாக.

தமிழ்நூற் பரப்பினை உளங்கொண்டு நோக்குமிடத் துக் கடைசசங்கத் திறுதிக்காலமுதல் இதுவரையும் தமிழ் மொழியிலே வெளிவந்த நூல்களுட் பெரும்பாலன பலவா கிய சமயங்களைத் தழுவிய நூல்களாமெனக் காண்கின்ளும். சமண பௌத்த முனிவாகளும் சைவ வைணவப் பெரியார் களும் செய்ததுபோலவே அண்மையிலே இந் நாட்டின ரொடு கலந்த இஸ்லாமிய கிறிஸ்தவ சகோதரர்களும் தத்தம் சமயவுண்மைகள் பொதிந்த நூல்களைத் தமிழ் மொழியிலே இயற்றி வெளியிட்டனர். அங்ஙனமாதலின் தமிழ்வளர்க்கும் மகாநாடுகளும் கழகங்களும் உண்மை ஞானிகளைப்போலவே சாதி மத வேறுபாடின்றி மன்ப தையோ ரனைவரையும் ஒப்பநோக்கு மியல்பினவாதல் வேண்டுமென்பது வெளிப்படை. சமயக்கணக்கர்தந்திறங் கேட்ட மணிமேகலை பல்வேறு சமயவாதிகளும் உரைத்த

பொருளினை உளங்கொளக் கேட்டதுபோல், உண்மைத் தமிழன்பராயினுர் தமிழிலுள்ள தலையாய சமயப்பெருநூல் களை அவ்வந்நூலினு லுணர்த்தப்படும் சமயங்களுக் குரிய ராகிய அறிஞாபாற் கேட்டமைவது சாலச் சிறப்புடைய தாகும். சாதி மத வேறுபாடின்றியும் அரசியற்கட்சிப் பிரி வினையின்றியும் செய்தற் குரிய தொண்டு தமிழ்த்தொண்டு.

தமிழ்மொழியை மரபு தவருது ஆராய்ந்து கற்ருேரும் மற்ருேரும் அவ்வாறு கற்றுத் தேறியவரை வழிபடுவோரு மாகிய இரு சாராருமே உண்மைத் தமிழ்த்தொண்டிற்கு உரியோராவா. 'கற்றலிற் கற்ருரை வழிபடுதல் சிறந்தன்று' என்னும் அறிஞருரையும் இவ்வுண்மையினையே வலியுறுத்து கின்றது. முறையாகக் கற்றலுஞ் செய்யாது கற்றுவல்லாரை யடைந்து வழிபாடியற்றிப் பெறுதறகுரிய கேள்விச் செல்வ மும் எய்தப்பெருது தமிழ்த்தொண்டு செய்ய முற்படுதல் பயனில் செயலாகும். முன்னோர்மொழி பொருளையும் மரபு பட்ட இலககண முடிபுகளையும் ஆராய்ந் தறிந்துகொள்ளாது நெறியறியா மாக்களை மயககி, அவாதம்மை நெறியல்லா நெறியிற் புகுத்தி ஆரவாரிப்போா செயலானது குருடனைக் குருடன் வழி நடத்துவதுபோ லாகும்.

அவைககளத்துச் செல்லுதற்குரிய வரம்பினமைந்த ஆங்கில மொழியினை 'வேந்தன்மொழி' (Kings' English) என அம்மொழிப்புலவர் விதந்து கூறுவர். அபபரிசே யாமும் அவைக்களத்திற செல்லுதற்குரிய வரம்பினமைந்த தமிழி னைப் 'பாண்டியன தமிழ்' என்போம். 'எது தமிழ்? என வினவுவாருககுப் 'பாண்டியன்றமிறே தமிழ்' என்பது விடையாகும். அதுவே நிலைபேறுடையது. அறிஞர் போற் றற்குரியது. பொருள் வருவாயொன்றினையே கருதி மனம் போனவாறு மரபுதவறி யெழுதும் மொழிவழககானது மழைககாலத்திலே தோன்றி அககாலங் கழிய மறைந்து போகின்ற சிறு பூடுகளைப்போல் நிலைபேறில்லாதது. நிலை பேறுடைய உண்மை (Truth), அழகு (Beauty), செம்மை (Goodness) என்னும் இவைதம்மையே அறிஞரது உள்ளம்

என்றும் அவாவிநிற்கும். முத்தமிழுள் இயற்றமிழானது உண்மையினையும், இசைத்தமிழானது அழகினையும், நாடகத்தமிழானது செம்மையினையும் சிறபபுற வெளிப்படுத்திக் காட்டுவன. பேருண்மையும் பேரழகும் வரம்புகடந்த செம்மையும் இறைவனுககுரிய குணங்களாகச் சமயநூல்களாற் கூறப்பட்டன. இவைதம்மை வெளியிட்டுரைக்கும் ஆற்றலுடைமையினாலேதான் மொழிகள் தெய்வத்தன்மையுடையவாகக் கருதப்பட்டன. யாம் முதலிலே கூறிய தெய்வ வணக்கச்செய்யுளினுள்ளே, குமரகுருபரமுனிவரர், தெய்வத்தினைப் 'பழம்பாடற்றொடையின் பயனே எனவும். 'நறை பழுத்த துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே!' எனவும், 'தொழும்பருளக்கோயிற் கேற்றும்விளக்கே!' எனவும் போற்றி வழிபடுகின்றார். இத்தகைய வழிபாடு சமயங் கடந்த சமரஸநிலையினைத் தருவது.

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்'

என்னும் பொய்யாமொழியின்படி ஆராய்ந்து அமைவரக் கற்ற கல்வியின் பயன் வாலறிவனாகிய இறைவன்பால் உள்ளத்தைச் செலுத்தலே யாம்.

தமிழ்மொழிக்கு நலனளிக்கும் பெருங்காப்பியங்களும் அந்நீர்மையவாகிய மதுரைக்காஞ்சிபோன்ற சஙகச்செய்யுட்களும், காப்பியத்தலைவனது அருள், வலி, ஆண்மை, கல்வி, அழகு, அறிவு, இளமை, ஊக்கம், ஈகை, போகம், புகழ், நண்பு, சுற்றம் என்னும் இவைதம்மை விரித்துக்கூறு முகத்தான் அத்தகைய செம்மை நலஙகளை நாமும் நமது வாழ்க்கையிலே இயன்றவரை வெளிப்படுத்துமாறு நம்மை ஊக்குகின்றன. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருடைய வாக்கின் வலிமையினால அளத்தற்கரிய பெருமை வாய்ந்த காப்பியத்தலைவனது குணமாகிய கடலிலே யாமும் படிந்தாடி நலமடைகின்றோம். இளங்கோவேந்தன உவந்தளித்த தொடர்நிலைச்செய்யுள் துணையாக, 'உரைசால் பத்தினியை உயர்ந்தோ ரேத்தும்' உண்மையினைக் காண்கின்றோம்.

அஃதன்றியும் பழந்தமிழ்நாட்டினை யாண்ட சேர சோழ பாண்டியரென்னும் முடியுடை வேந்தர் மூவரது அறனும் மறனும் ஆற்றலும் பிறவும் நம் உள்ளத்துக்கு ஒளியைத் தருகின்றன.

சமயக்கணக்கர் தந்திறஞ் சாராது நடுநிலை மேவி எப்பாலார்க்கும் பொதுவாகிய நெறியினைக் காட்டிய வள்ளுவர் வாய்மொழியானது யாம் எல்லாநலனையும் அடைதற்குரிய வழியினைக் காட்டுகின்றது. இவை இவ்வாறுதலினன்றே அண்மையிலிருந்த பெருந்தமிழ்ப் புலவராகிய சுப்பிரமணியபாரதியார்,

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போற்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை
யுண்மைவெறும் புகழ்ச்சி யில்லை'

என நமக்கு உறுதிமொழி கூறுகிறார். இம்மகாநாடு செவ்விதின் நடக்கும்பொருட்டு ஆண்டவனுடைய திருவருளினை வேண்டித் தோற்றுவாயாக யான் சொலலுதற்கு எடுத்துக் கொண்ட இவ்வுரையினை நிறைவுசெய்கிறேன்.

10. திருவமர்மார்பன் திருக்கோயிற் காட்சி

தொன்மைவளஞ்சான்ற மகதநாடு, புத்ததேவர் காலத்துக்கு முன்னுகவே நாகரிகம் படைத்த நாடாக விளங்கியது. புத்தர் காலத்திலும் அதற்குப் பின்னும் அமைந்த அழகிய கட்டிடங்கள் பல அழிவுற்ற நிலையிலே இந்நாட்டினில இன்றும் காணப்படுகின்றன. இந்நாட்டு மன்னன் கொடுத்த ஓலக்கமண்டபம் பழைய புகார்நகரத் தினை அழகுசெய்ததெனச் சிலப்பதிகார நூல்வாயிலாக அறிகின்ருேம்.

'இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிர நன்னுட்டுக்
கோஙிறை கொடுத்த கொற்றப்பந்தரும்
மகதநன் ஞட்டு வாளவாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் ருேரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணு மரபின
துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
மயன்விதித்துக் கொடுத்த மரபின விவைதாம்
ஒருங்குடன் புணர்ந்தாங் குயர்ந்தோ ரேத்தும்
அரும்பெறன மரபின் மண்டபம்

என இந்திரவிழவூரெடுத்த காதை கூறும். குறித்த மூன்று நாட்டு மன்னராலும் அனுப்பப்பட்ட நுண்வினைகம்மியர் வச்சிரநாட்டு முத்துப்பந்தர் போல்வதோர் முத்துப்பந்தரை யும் மகதநாட்டு ஓலக்கமண்டபம் போல்வதோர் ஓலக்க மண்டபத்தையும் அவந்திநாட்டுத் தோரணவாயில் போல்வதோர் தோரணவாயிலையும் ஒருங்கமைத்து அரும்

பெறன் மண்டபமாக்கினுரெனக் கொள்வதில் இழுக்கில்லை,

மகதநாட்டுப் பழைய சிற்பநலத்தினை ஆராய்ந்து நூலியற்றிய வங்கநாட்டறிஞராகிய சிரீஷ் சந்திரசட்டர்ஜி என்னும் சிற்பநூற்புலவர், தாம் மனககண்ணினுற் கண்டு துய்தத அழகினைப் பிறா புறககண்ணினுற் கண்டு துய்த்தல்வேண்டுமென்னும் எண்ணமானது உள்ளமீதூரத் தென்னுட்டிலும் குணகடற் கப்பாலுள்ள தீவுகளிலும் அமைந்த கோயிலகளையும் பார்வையிட்டு மகதநாட்டுச் சிற்பநலம் வாய்ந்த அழகிய கோயிலொன்றினைப் பழைய இந்திரப் பிரஸ்தமாய் இந்நாளிலும் பாரதநாட்டின் தலைநகராய் விளங்கும் புதிய தில்லியிலே அமைத்தற்கு விரும்பினுர்.

பெருங்குடி வாணிகராகிய பிர்லா என்னும் புகழாளர் சிற்ப நூற்புலவர் கருத்தோ டொன்றிய கருத்தினராய்க் கோயிலமைத்தற்கு வேண்டிய பெரும்பொருளை வழங்கினுர். பழைய மகதககம்மியரின வழிவநதோரும், வங்கநாட்டினின்றும் பிறநாட்டினின்றும் வநத கம்மியரும் ஒருங்குகூடித் தூய வெள்ளிய சலவைக கல்லினுலே புலவா் கருத்திற்கியைய அழகிய கோயிலைக் கட்டி முடித்தாாகள். லக்ஷ்மீ நாராயணமந்திர் என வடநாட்டாா வழங்கும் இத்திருக்கோயிலின் நடுவிலமைந்தது திருமகளாரும் திருவமா்மாா பனும் வைகும் ஆலயம். அதறகு வலப்புறத்தது உலக மாதா ஜகத்தாத்திரி என்னும் மூர்த்தமாக வைகும் ஆலயம்; இடப்புறத்தது சிவாலயம்: மூன்று ஆலயங்களுககும் இடையி லமைந்தன இரண்டு சதுககங்கள்; மேனமாடத்திலும் இவ்வாறே.

முழுககாட்டி அமுதூட்டும் வழிபாட்டுமுறையின்றி மலர் தூவி வழிபடுதற கியைந்த இநநியமத்திலே எப்பாலாருஞ் சென்று வழிபடலாம். இதனை உலகுபுகழ்ந்தேததும் காந்தியடிகள் திறந்து வைத்தார்கள.

மூன்ருண்டுகளின் முன் புதியடில்லிக்குப் போயிருந்த பொழுது இத்திருககோயிலேச் சென்று தரிசித்தேன். கோயிலினமைப்பும் ஓவியங்களின் வனபபும் பழைய புகார் நகரத்தினே நினேவுறுத்தின வாதலின் அவைதம்மைத் தமிழ்ப்பாடலி லமைதது்க் கூறப்புகுந்தேன்.அறிஞர் ஏற்று அருள்புரிவாராக.

தண்ணிலவின் கதிர்க்கற்றை தனேத்திரட்டி
யுருவாக்கி
உண்ணிலவும் அமிழ்தத்தை உகுத்ததென
மணிவண்ணன்
கண்ணிலவு துயிலபுரியும் கருதரிய
திருமனேயாம்
பண்ணிலவு பாற்கடலே பாரின்மிசைப்
படர்ந்ததென,

வெண்மையும் பொலிவும் விழைதகு வனப்பும்
ஒணமையும் மரீஇ, உறவோர் மனமெனக்
களங்க மற்ருேங்கி, விளங்குமிந நியமம்
பொன்னி ஞழி பொருந்திய குடுமி
வெள்ளிக குன்றென வெண்ணிறச் சலவைக்
கல்விற் சமைந்த கவினுடைத் தம்ம!
சீரியல் நாரணன திருவொடும் பொலிந்த
பேரியற் கோவிலிஃது ஈரியன் மருங்கும்
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலும்
கலேமதி புனேநத கணணுதல் கோயிலும்
மூவிலேச் சூலம் மேவிய குடுமிக
குன்றிரண் டிருபால் நின்றதோற் றத்த

திருவாயி லிருமருங்கும் செழுங்கரத்திற் றண்டேந்தி
ஒருவாத படிமங்கள் ஓரிரண்டு நின்ற இவை;

ஓரிரண்டும் எழின்முகத்தில் உவகையொடு நகையரும்பி
வாருமிவண் வாருமென வலிந்தழைக்கும் நீர்மையவே.

மெருகிட்ட சலவைக்கல் வீதியினே வலம்வந்தே,
உருகிட்ட மெழுகென்ன உளந்ததும்ப உட்புகுந்தேன்;

உளந்ததும்பப் புகுந்தாங்கே உலகுபுரந் திடுமொருவன்
வளந்ததும்புந் திருவோடு மன்னியதோற் றஙகண்டேன்

ஆரணங் கணிநதது அரத்தப் பூந்துகில்;
நாரணன் உடீஇயது பீதக ஆடை

இருவர் மார்பினும் இலங்கிய தாமம்
பன்னிற நன்மலர் பயின்று விளங்குவ.
இருவர் சிரத்திலும் அருமணி மகுடம்;
செம்மலர்ப் பதத்திற் சிலம்பும் சுழலும்;
அம்மலர் நோக்கி அகங்குளிர்ந் தப்பால்,

வேங்கைவரிப் புறத்தியைந்து
விறல்வாளும் படைக்கலமும்
தாங்கியநல் லெழிலுருவைத்
தாயுருவமெனக் கண்டேன்;
தாயுருவாய் உலகளிக்குந்
தயவுணர்ந்து மனமாசு
தேயஅவள் சீறடியைச்
சிந்தையினில் இருத்தியப்பால்,

கல்லாலின் புடையமர்ந்து
கருத்தொன்றி யோகுசெய
வல்லான்நல் லருளாளன்
மதிமிலைந்த முடிச்சென்னி,

மதிமிலைந்த முடியானை
மனநெகிழ்நது வழுத்தியபின்
விதிபுனைந்த மணிவாயில்
விளங்கியவீ ருருக்கண்டேன்,

ஆரழல் மாமகம் அழிதர அடர்த்த
வீரனும் விண்ணவர் வெந்துய ரகலச்
சூருரங் கிழித்த சுடரிலை நெடுவேல்
ஏரகத் தவனும் இருபால் இலங்கினர்;
கண்ணுதல் வாயிற் காவலர் இவர்க்கண்டு,
உலகு தாங்கிய ஒருத்தி கோயிலில்
நடம்பயில் வைரவர் யோகினி எனுமிவர்
இடம்பெயர்ந் துறையும் இயல்புங் கண்டேன்;
நாரணன் கோயில் ஏர்புனை வாயிலில்
நாரத முனியும் பாரதிப் பெயர்கொள்
சொல்லின் மடந்தையும் நல்லியல் வீணை
ஏந்திய கரத்தினர் இலங்கக் கண்டேன்.

அப்பால்,

இருபெருஞ் சதுக்கம் இயைந்தன; அவற்றுள்,
வேத வியாதனும் இடப தேவனும்
சாங்கியக் கபிலனும் தன்வந் திரியும்
மன்னிய சதுக்கம் வலப்பா லதுவே.

வையந்தா னுய்யும்வகை
மாமறையை வகுத்துரைத்த
ஐயன்றன் திருக்கரத்தில்
அருஞ்சுவடி பொலிநததுவே;

அருஞ்சுவடிப் பொருள்தேரின்
ஆரணநூன் முடிந்தவிடம்
பொருந்துபொருள் ஒன்றென்னப்
புலங்கொள்ள உரைப்பதுவே;

சீரிடப தேவனெனுஞ்
சினனுரைத்த வாசகந்தான்
ஓரினைந்து பெருநோன்பின்
உண்மையினை உரைப்பதுவே;

உண்மைநிலை கொலைகளவி
னொழிந்தநிலை கொடுங்காமம்
எண்ணுபொரு ணசைநீக்கல்
இவைசீலம் இமயமெனல்

அறுநான்கு தத்துவமும்
ஆய்ந்துரைக்குங் கபிலமுனி;
மறுநீங்க உடலோம்பு
மறபினிற்றன் வந்திரியே,

மரபினில்ஐ யைந்தாண்டின்
மணமகன்றுன் எண்ணிரண்டு
விரவியவள் பாலின்பம்
விழையுமெனும் உரைகூறும்

இடப்பாற் சதுக்கத்து மழுப்படை ராமனும்
சீதை கேள்வனும் யாதவ ரிறையும்
அருளறம் பகர்ந்த பெருவிறற் புத்தனும்
தத்தம் உயர்மொழி தந்துநின் றனரே.

ஆங்கு,

நெடுநிலை மாடத் தரமிய மேறிச்
சுவரி லெழுதிய சித்திரம் நோக்க
மாமனு வேந்தனும் ரகுவும் போசனும்
தாமவிக் கிரமனுந் தங்கின ரொருபால்;
கங்கையும் யமுனையும் கலந்தன ஒருபால்;
மாபா ரதத்தும் இராமன் கதையுளும்
மேவிய தொன்மை விரிந்தன ஒருபால்;

திருத்தகு ராம கிருட்டிண தேவனும்
சங்கரா சிரியனும் சார்ந்தன ரொருபால்;
சந்திர குப்தனும் அசோக மன்னனும்
சுந்தர உருவிற் ருேன்றின ரொருபால்;
இங்கிப் பரிசின் இயைந்த ஓவிய
நலங்கண் டுவக்கும் நகர மாந்தர்
மாட்சியும் ஒருபெருங் காட்சி யாகும்.

முளையெயிற்றுச் செய்யவாய் முதிராத பசுங்குதலை
இளமகார் தமையேந்தும் இளநல்லார் குழுவொருபால்
தண்டூன்றி நடுக்குறூஉம் தளர்நடையும் நரைமுடியும்
கொண்டேன்ற முதுமகளிற் குழுவொருபாற் குலவுமே.

அலர்கதிர் ஆழியும் அந்தண் மதியமும்
நிகர்திருச் சங்கமும் நீள்கரத் தேந்தி
மலர்மக ளொருபால் மருவ மன்னிய
தாமரைக் கண்ணன் சேவடி
மேவிய தில்லி வியனகர் பெரிதே.

11. தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற் பரவிய வரன்முறை

'பிரபுத்தபாரத' 1941 நவம்பர்மாத வெளியீட்டில் 'ஆசிரியர் கருத்துரை'யாக யான் எழுதிய (Religious Revival in Medieval India' என்னும) பொருளுரையினைத் தமிழன்பாகள் பொருட்டு ஈண்டு மொழிபெயர்த்துத் தருகிறேன்.

வேதஇருடிகள் அறிவு நெறி நின்று மேலான உண்மைப்பொருளைக காண முயன்றார்கள். உபநிடதகாலத்து அறிஞரும் வாதராயணரெனனும் பெரியாரும் போற்றி வளாத்த வைதிகஞானநெறியானது சங்கரரது அத்வைத ஞானமாக நிறைவுபெற்றது. ஆதலினாலே, சங்கரா பழைய இந்தியாவில் வைதிகத் தொன்னெறி நிறுவிய பெரியோர் வரிசையிலே இறுதியில் நிற்றற்குரியர். இராமாநுஜர் (கி. பி 1027-1137) ஒரு புதிய யுகத்தினைத் தொடங்குகிறார். தமிழரது அறிவுச்செல்வம் இராமாநுஜருசகு முதுசொத்தாகக கிடைத்த வரனமுறையினைத் தமிழ் நாட்டிற்குப் புறத்தேயுள்ளோர் அதிகம் அறியார. சடகோபர் எனப் பெயரிய நம்மாழ்வார் ஞானக்கடலினுள்ளே முழுகித் தமிழ்மொழிக்கு அணியாகத் திரட்டிவைத்த அருமணிககளஞ்சியம் இராமநுஜருச்கு உரிமைபபொருளாயிற்று. திருநெறித்தொண்டா பலரைத தோற்றுவித்த செழுமைமிக்க தமிழ்க்குடியானது பாவலர்கருப் பாவலராகவும், நுண்ணறிவினருள நுண்ணறிவின ராகவும், தொண்டர் பரவும் தொண்டராகவும் விளங்கிய சடகோபரை உலகிற்கு அளித்தது. அவரது திருவாய்மொழி தமிழ்க்கவிச்செல்வத

திற்குத் தலையணியாயிற்று. 'வாய்மை' யென்பது 'உண்மை' ஆதலின், 'வாய்மை + மொழி' என நின்ற 'வாய்மொழி' 'உண்மையுரை' என்னும் பொருளினது. அவ்வுண்மையும் தருக்கமுறையினுற் பெறப்படும் சிற்றுண்மை யாகாது, ஞானயோகநெறியினுல் எய்துதற்குரிய பேருண்மையாகும். பரிபாடல் முதலிய சங்கத்தமிழ்நூல்களிலே 'வாய்மொழி' வேதநூலுககுப் பெயராக வழங்கப்பட்டது. 'திரு' என்பது 'செம்மை', 'நன்மை'களைக் குறிக்கும் அடைமொழியாகும். செம்மைநலம் வாய்ந்த தமிழ்ச் சொற்களினுலே மேலான உண்மையறிவினை யுணாத்தும் திருவாய்மொழியானது தென்னுட்டு வைணவப்பெரியாரால் வேதநூலுக்கு ஒப்பாக மதிக்கபபட்டது. கோயில்களிலும் கழகஙகளிலும் அதனை நெறிமுறையிலே ஓதவேண்டுமென இராமாநுஜர் ஏற்பாடு செய்துள்ளார். பதின்மூன்ரும் பதினுன்காம் நூற்ருண்டிலே வாழ்நத வேதாநத தேசிகர் திருவாய்மொழியினைத் திர மிடோபநிடதம் எனப் பெயரிட்டுப் போற்றுவாராயினுர். திருவிருத்தம, திருவாசிரியம், பெரியதிருவந்தாதி என்னும் நூல்களும நம்மாழ்வாரால் ஆக்கப்பெற்றன.

ஆழ்வாருள் ஒருவராகிய மதுரகவி என்னும் பெரியார் வடநாட்டிலே யாததிரைசெய்வாராய்க் கங்கைக்கரையிலே நிற்கும் எல்லையிலே, தெற்குத்திசையிலே ஒரு பேரொளி விளககத்தினைக கண்டு இறும்பூதெய்தித் தெற்குநோக்கிச் செல்வாராயினுர். முன்னுளிலே பலஸ்தீனு நாட்டுப் பெத் லகேம் நகரிலே ஒரு தெய்வக்குழந்தை பிறந்தபோது கீழ்த் திசையிலே ஒரு விண்மீன் தோற்றக்கண்டு அதனைப் பின தொடர்ந்துசென்ற ஞானவானகளைப்போலத் தென் திசை யிலே தோன்றிய பேரொளி விளக்கத்தினை நாடிச் சென்ற மதுரகவி ஆழ்வார் திருநகரியெனப் பின்னுளிலே பெயர் பெற்ற திருக்குருகூரை அடைந்தார். ஆங்குப் பரந்த கொம்புகளையுடைய திருப்புளியின் கீழே யோகநிலையில் வீற்றிருந்த பதினுருட்டைப் பிராயத்து இளைஞ ரொரு வரைக கண்டாா. யோகங் கலைந்து விழித்த இளைஞர் முதியோராகிய மதுரகவியாரது விஞக்களுக்கு விடையிறுத்

தார். மதுரகவியார் மனமகிழ்வெய்தி ஆண்டிலிளைய அப் பெரியாருக்கு மாணவ ராயினர். சடகோபர் வேளாண் குலத்தவர். வேளாண்குலம் வங்கநாட்டுக் காயஸ்தகுலத் தினை ஒத்த தரத்தது.

சடகோபரது தந்தையார் திருக்குருகூருக்குத் தலைமை தாங்கிய காரிமாறா; தாயார் உடையநஙகையார். இவர் தமது தவப்பயனாக உதித்த சடகோபர் பிறந்தநாள் சாக்கிய குலத தோனறலாய்ப் புத்ததேவரென விளஙகிய சித்தாாத்த குமாரர் உலகிலே தோனறிய நாளாகிய வைகாசித் திங்கள் நிறைமதி நாளாகும். சடகோபர் உதித்த ஆண்டு இது வென்பது இன்னும் வரையறையாக அறியப்பட்டிலதெனி னும் அதனை ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள தெனக் கொள்ளலாம். நம்மாழ்வார் திருவாய்மலாந்த அருட் பாடல்களை மதுரகவியார் ஏட்டிற் பொறிததுவைத்தார். அவைதம்மை உலகிற் பரப்பிய பெருமை நாதமுனிகளுக்கு உரியது. நாதமுனிகள் (கி. பி. 824-924) வேதம், மிருதி முதலிய கலைகளில் வல்ல யோகி. தற்செயலாகத் திரு வாய்மொழிப்பாடல்கள் சில இவர் செவியில் வீழ்ந்தன. அன்பு கசிந்த இவ்வின்னிசைப்பாடல்களினலே ஆண்டவ னைத் தொழுதல் யோகத்திலும் சிறந்த செயலென நாத முனிகளது உள்ளத்திற்குப் பட்டது. அன்புநெறி இஸ் லாமிய கிறிஸதவ மதங்களின் வழியாகப் பாரதநாட்டிற்கு வந்ததென எண்ணுங் கலைவல்லார் திருவாய்மொழி, தேவார, திருவாசகச் செழும் பாடல்களைச் செவிமடுப்பார் களாயின் அன்புநெறி தமிழ்நாட்டிலே தோனறியதென அறிந்துகொள்வர்.

இஸ்லாமிய சமயகுரவராகிய முகம்மது நபி அராபி நாட்டிலே தோன்றிய காலத்திலே, தமிழ்நாட்டில வாழ்ந்த திருநாவுக்கரசர் (கி. பி. 574-655,), சீகாழிப்பதியிலே தோன்றிய இளைஞராகிய திருஞானசம்பந்தர் (கி.பி. 639-655), கொல்லம் ஆண்டினைத தொடங்கிய கேரளமன்ன ராகிய சேரமான்பெருமாளுக்கு ஆசிரியரும் நண்பருமாகிய

சுந்தரமூர்த்திகள் (கி. பி. 807-825), மந்திரித் தொழிலை நீத்துத் துறவுபூண்ட மாணிககவாசகர் (இவர்காலம் பத்தாம் நூற்றுண்டாயிருக்கலாம்) என்னும் நால்வரும் அன்பு கலந்த ஞானப்பாடல்களை உலகிற்கு நல்கினார்கள். இவர்களது செவ்விய வாழ்க்கையினாலும் செழும் பாடல்களினாலும் ஏற்பட்ட எழுச்சியின் பயனாகச் சோழமன்னர்கள பதினோராம் பன்னிரண்டாம் நூற்றுண்டுகளிலே பல தேசங்களைத் தங்கள் கைப்படுத்தி ஆழிவேந்தர்களாக விளங்கினார்கள். தமிழ்நாட்டு அழகுச் செல்வத்திற்கு அறிகுறியாகிய திருக்கோயில்கள் நாடெங்கும் திகழ்ந்தன. கி.பி. மூன்றும் நூற்றுண்டுமுதல் ஆறும் நூற்றுண்டு வரையுள்ள காலததிலே தமிழ்நாட்டு வரன் முறையிலே ஒரு வெற்றிடம் காணப்படுகிறது. மூன்றும் நூறருண்டின் இடைக்காலத்திலே பல்லவ மன்னர்கள் காஞ்சியிலே அரசு புரிந்தார்கள். வடநாட்டிலே குப்த குலத்து ஆழிவேந்தர் அரசுபுரிந்தனர். சேர சோழ பாண்டிய குலங்கள் அரவு தீண்டிய பரிதிமதியத்தைப் போல் ஒளியிழந்திருந்தன. இப்பழங்குடிகள் புத்துயிா பெற்று எழுந்தது ஏழாம் நூற்றுண்டின நடுவில் என்னலாம. கி. பி, 647-ஆம் ஆண்டிலே பல்லவ மன்னனாகிய நரசிங்கவர்மன வாதாபிப் போர்ககளத்திலே இரண்டாம் புலிகேசி யென்னும் சளுககிய மன்னனை வென்று வாகை மாலை சூடினான். இச் சளுககிய மன்னனாகிய புலிகேசி வடநாட்டுக கன்னியா குப்ஜத்து முடிமன்னனாகிய ஹாஷ மன்னனைப புறமுதுகிடச் செய்த வீரன. ஹர்ஷனது அவைக்களத்தினைப் புகழ்ந்து சீனதேச யாத்திரிகராகிய ஹ்யுன்சாங் எழுதியிருக்கிறா.ஹாஷனை வென்ற வீரனாகிய புலிகேசியைப போர்ககளத்திலே வென்ற பெருமை பல்லவப் படைகளின் சேனைத்தலைவராகிய சிறுத்தொண்டருக்குரியது. சிறுத்தொண்டர் சீகாழிப்பிள்ளையாருககு நண்பர். பிள்ளையாரது அருண்மொழி யமுதினை யுண்டு உடல்வலியும் மனவலியும் பெற்றவர். ஒளியிழநத பௌத்த சமண மதங்கள் மககளது மனத்தினைக் கலக்கிச் செயலின்மையிற்

புகுத்தியகாலத்திலே நாயன்மாரும் ஆழ்வார்களும் தோன்றித தமிழ்மக்களுககு எல்லா உடைமைகளிலும் மிக்க "உள்ளமுடைமை' என்னும் ஊககத்தினை நல்கி நாடு நலமடையும் வழிகளிலே செலுத்தினுர்கள். சம்பந்தரும் சுந்தரரும் ஆண்டில் இளையராயினும் செயற்கருரு செயல்களைச் செய்து முடித்த பெரியாராவா. மனனர்களோடு நட்புரிமையுடையாராய் இவ்விருவரும் செய்த 'அரசியற் கிளாச்சி'யும் அதனுல் எய்திய பயனும் பதினனகாம் நூற்ருண்டு வரையும் நாட்டிற்கு ஆககமளித்தன. ஆண்டவனது திருவடிககன்பா அவனது அருள்வலியினுலே உடல் வலியும் மனவலியும் எய்திச் செயறகருஞ் செயல்களைச் செய்வார்களென்னும் உண்மையானது ஆழ்வார், நாயன்மாரது வரவினுலே தமிழ்நாடு எய்திய சிறப்பினை நோக்குமிடத்துத் தெளிவாகப் புலபபடுகிறது. ஆழ்வார் நாயன்மாருக்குப் பின் சைவ வைணவ ஆசாரியாகள் தோன்றி அருண்மொழிகளைக கோவைப்படுத்தியும் குருநிலையங்களை ஏற்படுத்தியும் தொணடாற்றினர். அங்ஙனமாயினும் முன்ஞேராகிய பெரியோர் உலகிற்கு அளித்த தெய்விக விடுதலையினைப் பின்ஞேர் அறிந்தும் அறியாமலும் எல்லைப் படுத்தினர். அதனை ஓர் எடுத்துககாட்டினுலே சிறிது விளககுவோம்;

தம்மை, ஆண்டவனுக்கு மககளாகவும் உற்ற நண்பராகவும் தொண்டராகவும் உடன் உழைப்பவராகவும் கருதிய மூதறிஞர் வகுப்பு வேற்றுமை காட்டாது, 'எலலோரும் ஓாகுலம்' என்னும் உண்மையினைக் கடைப்பிடித்து வாழ்ந்துவந்தனர். அவரது சீரிய ஒழுககமும் தெய்விகச் செயலும் நம் உள்ளத்தை உருக்கும் நீாமைய, திருஞானசம்பந்தப்பிள்ளையார் கவுணியகுலத்தில் உதித்து வேத வேள்விகளைப் போற்றியவரெனினும் பாணராகிய திருநீலகண்டரையும் அவருடைய மனைவியாராகிய விறலியாரையும் தமது நட்புக்கு உரியாராககித் திருககோயில்களுக்கு உடனழைத்துச் சென்றனர். பிள்ளையார் பாடிய இசைத் தமிழ்த் தேவாரப்பதிகங்களைப் பாணரும் பாடினியாரும்

இசையிலமைத்து அன்பருள்ளத்தை இன்புறுத்தினர். திருநீலநக்கநாயனுரது திருமனைக்குச் சென்ற ஞான்று, பிள்ளையார் அந்தணராகிய நீலநக்கரைநோக்கிப் பாணர்கரும் பாடினியார்க்கும் உள்மனையிலே இருக்கையமைத்துத் தரும்படி திருவாய்மலர்ந்தருளினர். நீலநக்கர் பெறற்கரும் விருந்தினராகிய பாணர் தலைவரது குலநலமாராயாது, பிள்ளையாரது திருவுள்ளக் கருத்திலும், ஒருபடி உயரவொழுகுவாராய வேள்வித் தீயிருந்த மிகத்தூய மனைக்கட்டினகத்துப் பாணர்கரும் பாடினியார்க்கும் இருக்கையளித்தார். தீக கடவுள் தொண்டர் செயலினைப் பாராட்டியதற்கறிகுறியாகத் தீ வலஞ்சுழித்து எழுந்தது. ஆண்டில் இளையராய் அறிவில் முதியரான பிள்ளையாா ஆண்டிலும் அறிவிலும் முதியரான திருநாவுக்கரசரை, 'அப்பரே!' எனஅழைத்தார். அன்பு கசிந்த இவ்வுரிமைச்சொல் தவமுதியாரது திருநாமங்களுள் ஒன்ருக இன்றுவரையும் நிலைபெற்றது. நம்மாழ்வாரைப்போல அப்பரும் வேளாண்குலத்தில் உதித்தவர். ஆண்டவன் திருவடிநீழலை அடையும்பொழுது அப்பருக்கு வயது எண்பத்தொன்று. சம்பந்தப் பிள்ளையார் நிலவுலகில் வாழ்ந்தது ஈரெட்டாண்டு எல்லையாகும். எழுபதாண்டின் மிக்க முதியவரும் ஏழாண்டுப் பாலகரும் முதன் முதலிலே ஒருவரையொருவர் கண்ட காட்சி படிப்போர் சிந்தையை யுருக்கும் நீர்மையது. அந்தணர் குலத்தவராகிய அப்பூதியடிகள் வேளாண்குலத்தவராகிய அப்பரை வழிபடுகடவுளாகச் சிந்தையுள்வைத்துப் பெறற்கரும் பேற்றினை யடைந்தார். அந்தணராகிய மதுரகவியார் வேதந் தமிழ்செய்த மாறனுகிய நம்மாழ்வாரையன்றி வேறு தெய்வத்தை அறியேனென அழகிய செழும் பாடல் பததினுல் நமக்கு அறிவுறுத்துகின்ருர். பாணர் குலத்திலுதித்த திருபபாணுழ்வார் அந்தண முனிவர் தோளிலிவர்ந்து திருமுன்னிலைககு வரவேண்டுமென்பது திருவரங்கத்தம்மானது திருவுள்ளக்கருத்தாயிற்று. சுந்தரமூர்த்திநாயனுருடைய நண்பராகிய சேரமான் பெருமாள் திருநீற்றுப்பொலிவினைக் கண்டு வண்ணுன்முன்னிலையிலே தலைவணங்கினுர்.

இத்தகைய உளப்பாங்கு பெரியோருக்கு அண்மையான காலத்திலிருந்த ஆசாரியரிடத்தும் அமைந்திருந்தது. பதின்மூன்றும் நூற்றுண்டிலே சகலாகம பண்டிதராக விளங்கிய அருணந்திசிவாசாரியர் வேளாண்குலத்துமெய் கண்டதேவரைத் தமக்குக் குருவாகக கொண்டார். அம்மர பில் நான்காங்குரவராகிய உமாபதிசிவாசாரியர் தம் உற வினரால் ஒதுக்குண்டு தில்லை நகர்ப்புறத்திலே கொற்ற வன்குடியில் வதிந்தார். இவர் பெற்றுன் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து உண்மை ஞானத்தை உணர்த் திஞர். இராமாநுஜரது சீரிய உளப்பாங்கினை உலகம் நன்கு அறியும். தாம் நரகம் புகினும், உலகம் உய்தல் வேண்டும் என்னும் கருத்திேேடு கோபுரத்தின்மீது நின்று மறைமொழியை அனைவாகும் உணர்த்திஞர். இவரது அருட்கடைக்கண்ணேக்கிஞலே தீண்டாதாரும் பிறரும் உயர்வெய்தினர். இவரது போதனைகள் வடநாட்டிற் பர வியபோது அங்குள்ள பெரியாரும் சாதிக்கட்டுப்பாட்டினைத் தகர்த்தெறிந்து சமயவுண்மைகளை அனைவர்க்கும் உரிமை யாக்கினர்.

நாயன்மாரது செல்வாக்குத் தென்ஞட்டோடு நின்று விட்டது. வடக்கே காசுமீரம், நேபாளம், திபேத்து நாடு களிலே சைவம் முன்பே நிலைத்திருந்தது. மெய்கண்டதேவ ருககு உண்மையுணர்த்திய பரஞ்சோதிமுனிவர் திபேத்து நாட்டிலுள்ள திருக்கைலாய மலையினின்றும் தென்ஞட்டுக் குச் சென்றதாகக் கூறுவர். வடநாட்டிலெழுந்த பாசுபத, காபாலிக, மாவிரத சைவநெறிகள் நாயன்மார்காலத்திலே தமிழ்நாட்டில் நிலைபெற்றிருந்தன. அககாலத்திற்கு முற் பட்ட காலத்திலே தமிழ்நாட்டில வாழ்ந்தவராகக் கருதப் படும் திருமூலநாதர், நாதயோகிகள் கூட்டத்து முதற்குரவ ராக இருககலாம். இவரும் வடநாட்டிலிருந்து தெற்கே சென்றவர். சைவாகமங்கள் இருபத்தெட்டு என்னுந் தொகையினவாக வடமொழியில் உள்ளன. ஆலய அமைப்பு வழிபாட்டு முறையெனனும் இவற்றை விரித்துக் கூறும் ஆகமங்களுட் சில கௌடதேசத்துப் பிராமணரைக்

குறிப்பிடுகின்றன. சோழமன்னர்கள் அளித்த சாசனங்கள் சிலவற்றிலும் கௌடப்பிராமணர் குறிப்பிடப்பட்டனர். இவ்வாறு நோக்கும்போது தென்னாட்டுச் சைவம் வடநாட்டினை நாடிநின்றதென்னும் உண்மை வெளியாகின்றது. நாயன்மாரது அருண்மொழிகள் ஒருபுறமாக வடநாட்டு வைதிக தாந்திரிகக் கொள்கைகள் மற்றொரு புறமாக நின்று தென்னாட்டுச்சைவத்தை வளர்த்தன. தென்னாட்டு வைணவமோவென்றால் ஆழ்வார்களாகிய ஊற்றினின்று உதித்து அன்புவெள்ளம் பெருக்கி வடக்குநோக்கி அலையெறிந்து பாய்ந்து பாரதநாடு முழுவதும் பரவியது. முன்னாளிலே பகீரதர் என்னும் பெரியார் கங்கையாகிய வானதியினைப் பூவுலகிற்குக் கொணர்ந்தாரெனப் புராணங் கூறும். இராமாநுஜமுனியாகிய பகீரதர் தென்னாட்டுத் தெய்வக் காவிரிவெள்ளத்தினை வடநாட்டுக் கங்கையிலே கலக்குமாறு செய்தார். இத்தகைய கலப்புக் கங்கைநதியூற்றெடுக்கும் திருமலைக்கும், சென்று சேரும் கடலுக்கும் இடையே கிடந்த பலவிடங்களிலும் நிகழ்ந்தது. கலப்பினால் ஏற்பட்ட அன்புவெள்ளம் பாரதநாட்டின் மேற்குத் திசையிலும் பரவியது. மும்மையும் செம்மை வாய்ந்த இப் பாரதநாட்டிலே அரியின்திருநாமம் ஆயிரமும் யாங்கணும் முழங்குவவாயின.

அன்பும் அருளும் ஆர்வமும் பொருந்திய சமயநெறியானது மத்தியகால இந்தியாவிலே எவ்விடத்தும் பரவியது, அக்கால நிலைக்கு ஏற்புடையதாக இருந்தது. மேலே நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளுக்குச் சார்பாகிய அறிகுறிகள் முன்னமே காணப்பட்டன. சாதிபேதமின்றிச் சமய வொற்றுமையினாலே மக்கள் உடன்பிறந்தார்போன்று வாழ்தலையும், ஆண்டவனுக்குத் தாம் அடிமைகள் எனக் கொள்ளுதலையும் அறத்தாறாகக் கொண்ட சமயநெறியொன்று அராபிநாட்டிலே அக்காலத்திலே தோற்றியது. அச்சமயமானது பாரதநாட்டினுள்ளே புகுதற்குரிய காலம் அணுகி வந்தது. மேலே குறித்த அறநெறிகள் அராபி நாட்டிலே வளர்ச்சியெய்திய காலத்திலேயே, தமிழ்நாட்டு

ஞானவான்களும் அக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தினைத் தமது நாட்டிலே நிறுவினார்கள். மக்களுடைய தனித்த வாழ்க்கையினையும், கூட்டமாகக் கூடி வாழும் வாழ்க்கையினையும் நியதிசெய்கின்ற தெய்வசக்தியின் ஆற்றல் எத்துணை அற்புதமானது! இந்நிகழ்ச்சிகள் நடந்த காலத்திற்குப் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு இப்பரிசுத்த பூமியிலே கௌதம புத்தர் தோன்றி, அறநெறியினைப் போதித்து, மக்களை நல்வழிப்படுத்திய காலத்திலே, சீனதேசத்திலே கொண்பூசியஸ, லாஓட்சே என்பவர்களும் யவனதேசத்திலே பைதாகோரஸ் என்பவரும் தோன்றிக் கௌதம புத்தர் போதித்த உண்மைகளைப் போன்ற அறநெறி முடிவுகளையே போதித்தார்கள். ஆழ்வார், நாயன்மாரது வாழ்க்கையினாலும் போதனையினாலும், உயர்குலத்தோரும் இழிகுலத்தோரும் உடன்பிறந்தார்போன்று ஒன்றுகூடி வாழுகின்ற நிலைமை யேற்பட்டபடியினாலே, அக்காலத்திலே பாரதநாட்டினை ஆக்கிரமித்த முகலாயரின் தாக்குதலினாலே நாடு நிலைகுலையவில்லை. அஃதன்றியும், ஆளுகை புரிந்த முகலாயரின் சமயக்கொள்கைகள் ஒருவாறு சமரசப்படுத்தப்பட்டன. ஆண்டவனிடத்துப் பக்தியும் மக்கள்பால அனபும் இசை, சிற்பம், கவிதை முதலிய அழகுக் கலைகளும் இந்துக்களுக்கும் முகலாயர்களுக்கும் பொதுவுடைமையாக இருந்தன. முகலாயர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களது முன்னோர்கள் நித்தியமான நீலவானத்தை வழிபட்ட ஷாமா மதத்தைச் சேர்ந்தவர்கள். தாஓ மதம், புத்தமதங்களைப் போல் ஷாமா மதமும் அழகுக் கலையைப் பேணிய மதமாகும். முகலாயர் இரானிய அழகுக் கலையிலே நன்கு படிந்தவர்கள். சில முகலாய சக்கரவர்த்திகள் இந்து சமயத் தாய்மாரின் மக்களாய், இந்து சமயத்தையும் இஸ்லாமிய மதத்தையும் சமரசப்படுத்த முயன்றார்களென்பதை இதிகாச நூல்வாயிலாக அறிகின்றோம். இஸ்லாமியராகிய அக்பர்சக்கரவர்த்தி இந்துசமய மனையிலே

வளர்ந்தவர். இவர் இரு சமயங்களையும் சமரசப்படுத்திய மதமொன்றினை ஆக்குதற்கு முயன்றார். இடைக்கால இந்தியாவின் மனநோக்கினையும் அரசியற் கொள்கையினையும் வழிப்படுத்திய பெரியோர் எல்லா மதத்தினரும் வழிபடுகின்ற தெய்வம் ஒன்றேயென அறிந்தாராதலினாலே, ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் முன்னோர் கைக்கொண்ட சமயக்கொள்கைகளையும் ஆசார அநுஷ்டானங்களையும் கைக்கொண்டொழுகுவதே முறையென அறிந்தனர். தத்துவவாதமானது வேற்றுமை காணும் இடங்களிற்கூட இதயத்தெழுந்த அன்பானது ஒற்றுமை காண்கிறது. அங்ஙனமாதலின, அப்பெரியார் அன்பைப் பெருகக முயன்றனர். அன்புநெறி பரவிய வரன்முறையினைக கூறுமுன், இடைக்கால இந்தியாவின் மனநிலையினை நன்னெறிப் படுததிய தென்னாட்டுப் பெரியாரொருவரின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகத் தருவாம்:

ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபெரும்பூதூரினைப் பிறப்பிடமாகக கொண்டார். அவா நிலவுலகில் அவதரித்த ஆண்டு கி. பி.1017 என ஒரு சாரார் கொள்வர். மற்றொரு சாரார் கி. பி. 1037 எனபா. திரு. ஸர். இராதாகிருஷ்ணன் கி. பி. 1027 எனக கொண்டார். ஸ்ரீராமாநுஜரின வாழ்க்கையிறுதியாண்டு கி, பி. 1137 என்பது அனைவர்க்கும் ஒத்த முடிபு. அங்ஙனமாதலின் இப்பெரியார் நூலோர் வகுத்த எல்லையின் இகந்து, ஒரு நூற்றாண்டினமேல் உயிர் வாழ்ந்திருந்தாா. தென்னாட்டிலே ஸ்ரீமந் நாதமுனிகளும் யாமுனாசாரியரும், வடநாட்டிலே இராமாநந்தரும். கபீர் தாஸரும இவ்வாறே நூற்றாண்டு என்னும் எல்லையை இகந்து வாழ்ந்தனர். ஆண்டவனிடத்தில் நிறைந்த நம்பிக்கையுடையோர் எத்தொழில செயயினும் மனத்தினை அலையவிடாது சாந்தநிலையில நிறுத்தும தகையராதலின், நீண்டகாலம் உயிர்வாழ்ந்திருந்தனர் என்று எண்ண வேண்டி யிருக்கிறது. திருவரங்க வைஷ்ணவர்களுள்ளும், தென்னிந்தியாவில் வாழும முஸ்லிம்களுள்ளும் ஒரு நூற்றாண்டினை அணுகியவரை இன்றுங காணலாம்.

ஸ்ரீராமாநுஜர் காஞ்சிமாநகரிலே யாதவப்பிரகாச ரிடத்து வேதாந்தம் கற்றனர். காஞ்சி பல நூற்றுண்டு களுக்குச் சிறந்த கல்வி நிலையமாக விளங்கியது. ஸ்ரீமந் நாதமுனிகளின் வழித்தோனறலாகிய யாமுனாசாரியார், ஆளவந்தார் என்னும் திருநாமமுடையராய் இருந்தார். இவர் இராமாநுஜரின் கல்வியறிவைக குறித்துக கேள்வி யுற்று அவரைத் தமககுப் பின் தமது பீடததில இருத்தும் பொருட்டுத் தம்மிடம் வரும்படி அழைத்தார். இராமா நுஜர் வந்து சேர்வதன் முன்னம், யாமுனாசாரியார் பூதவுடலை நீத்தாராதலினுலே. அவர் வைத்துச சென்ற மூன்று பெரிய வேலைகளை நிறைவேற்றும் கடமை இராமாநுஜருக்கு உரியதாயிற்று. விஷ்ணு புராணத்தை ஆககியோராகிய பராசர முனிவர் பெயரினை நிலைக்கச் செய்தல், சடகோபரது மகிமையினை உலகிற்கு உணர்த்துதல், ப்ரும்மசூத்திரததுககு விசிஷ்டாத்வைத உரை வகுத்தல் என்பனவே யாமுனாசாரியார் வைத்துச் சென்ற மூன்று வேலைகளாம். ஸ்ரீராமாநுஜர் சந்நியாச ஆசிரமததைக கைக்கொண்டு ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்களையும் யாமுனாசாரியாருடைய நூல்களையும் கற்றுணர்ந்தார். ப்ரும்மசூத்திரத்திற்கு அமைந்த போதாயனபாஷ்யத்தைப் பெற்றுவரும் பொருட்டு இராமாநுஜ முனிவர் காசுமீர தேசத்திற்குச் சென்று வந்ததாகவும் சொல்லுவர் கி. பி. 1100-ஆம் ஆண்டில் இவர் ஸ்ரீபாஷ்யத்தை எழுதி முடித்து, அதன் உண்மைகளைப் பல இடங்களிலும் பிரசங்கித்தாரென்றும், வடநாட்டிலே பல முக்கிய ஸ்தலங்களுககு யாத்திரை சென்று காசியிலும் பூரி ஜகந்நாத்திலும் பௌத்தரை வாதில வென்று அவ்விடங்களிலே வைஷ்ணவ சம்பிர தாயத் திருமடங்களை ஏற்படுத்தினுர் என்றும் அறிகின் ரேம். மேலும், இவர் தம் சிஷ்யராகிய கூரேசரின் புதல்வ ராகிய பட்டரைக்கொண்டு விஷ்ணு சகஸ்ரநாமத்திற்கு உரை எழுதுவித்து அதன் மூலமாகப் பராசர முனிவரது பெயர் நிலைபெறுமாறு செய்தாரென்றும், மற்றெரு சிஷ்ய

ராகிய குருகேசரைக் கொண்டு திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதுவித்து நம்மாழ்வாருடைய மகிமையினை உலகிற்கு விளக்கினாரெனறும் அறிஞர் கூறுவர். சைவ மதத்திலே கடும்பற்றுள்ள சோழமன்னர்கள் துன்புறுத்தியதனாலே இவர் மைசூர் இராஜ்யத்தை அடைந்து அங்கிருந்த விஷ்ணுவர்த்தனன் என்னும் ஹொய்சளமன்னனை ஜைன மதத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவசமயத்தைச் சேருமாறு செய்தாரென்றும் அறிகின்றோம். இவர் மேல்கோட்டை என்னுமிடத்திற் பன்னீராண்டு வாழ்நதுவந்த காலத்திலே தில்லிமாநகரிலிருந்து வரவழைத்த ஸ்ரீகிருஷ்ணவுருவத்தினை மேல்கோட்டையிலே ஸ்தாபித்தார். இவ்வுருவம் ஸ்ரீகிருஷ்ணனிடத்துப் பேரன்பு பூண்டிருந்த இஸ்லாமிய இளவரசி ஒருத்தி போற்றி வழிபட்டுவந்த உருவம் என்பர். ஆதலினாலே, அவ் இஸ்லாமிய இளநங்கை கண்ணபிரானுககுக் காதலியாகக் கருதபபட்டாள். இவ்வுருவம் ஸ்தாபிக்கப்பட்ட திருக்கோயிலிலே தீண்டாக் குலத்தினைச் சேர்ந்த தொண்டரும், ஓரோர் விசேட காலத்திற் சென்று வழிபடுதற்குரியர். ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சமயாநுஷ்டான நெறிமுறைகளை ஒழுங்கின்வண்ணம் செய்து வைக்கும் பொருட்டு ஸ்ரீராமாநுஜர் சிம்மாசனாதிபதிகளை ஏற்படுத்தினார். இராமாநுஜர் தமது ஆத்மிகசக்தி, கல்விநலம் நிருவாகத் திறமை என்னும் இவற்றினாலே ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை நிலைபெறச் செய்தார்.

இராமாநுஜருக்குப் பின் எழுந்த சமய இலககியங்களிலெல்லாம் அப்பெரியாருடைய உள்ளக் கருத்துச் செறிந்திருக்கக் காணலாம். 'மத்வாசாரியர், வல்லபாசாரியர், ஸ்ரீசைதன்னியர், இராமாநந்தா, கபீர், நானக என்னும் பெரியார்களுடைய இயக்கஙகளும், பிரமசமாஜம் என்னும் நிலையமும் ஸ்ரீஇராமாநுஜருடைய ஈசுவர வாதநெறிக்குப் பெரிதும் கடமைப்பட்டனவென ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் கூறுகிறார். தெற்குக் கானராவில் உடுப்பிதாலூகாவிலே கள்ளியன்பூர் என்னுமிடமே ஸ்ரீமத்வாசாரியார் பிறந்த இடமென்பர். இவர் காலம் கி. பி. 1197 முதல்

1277 வரையும் ஆகும். இவர் ஆநந்ததீர்த்தர் எனவும் பெயர் பெறுவர். ப்ரும்மசூத்திரங்களுக்கு இவர் துவைத பாஷியம் எழுதினர். இவரது சிஷ்யராகிய நரஹரிதீர்த்தர் ஒரிஸ்ஸா மாகாணத்திலே உயர்ந்த பதவியில் இருந்தவர். ப்ரும்மசூத்திரத்திற்குச் சுருக்கமான உரையொன்றை எழுதிய தெலுங்குப்பிராமணராகிய நிம்பர்க்கர் ஸ்ரீராமாநுஜருடைய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவருடைய வேதாந்தம் அத்வைத துவைதங்கள் இரண்டினையும் தன்னுட்கொண்டதெனபர். இராமாநந்தர் பிரயாகையிலே பிராமணப்பெற்றோருக்கு மகனாக உதித்தார். இவர்காலம் கி. பி. 1300 முதல் 1411 வரையாகும். திராவிடநாட்டிலே உதித்த பகதிமார்க்கத்தினை, இராமாநந்தர் வடக்கே கொண்டுசென்றாரென்றும், கபீர்தாஸர் அதனை ஸப்த தீவுகளிலும் பரப்பினர் என்றும் கூறும் ஒரு நாட்டுப்பாடல் உளதென்பர். ஸ்ரீராமாநுஜரின் விசிஷ்டாத்வைத மதத்தினை உணர்ந்த போதகாசிரியராகிய இராகவாநந்தருக்குச் சீடராகிய இராமாநந்தர் விஷ்ணுபகதர்களையெல்லாம் சமபந்தியிலே உண்ணும்படி செய்ததனாலும், தேசபாஷையிலே மதப்பிரசாரம் செய்ததனாலும் சாதிததடைகளை முழுதும் நீக்கிவிட்டார். ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவராகிய திருமங்கைமன்னன் திருவாய் மலர்ந்த பெரிய திருமொழி முதற்பத்திலே,

'குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்'

என்றனர். இப்பாடலுக்கு உரைகண்ட பெரியார் 'குலந்தரும்' என்பதற்குப் பண்டைக்குலமொழிந்து தொண்டக்குலம் ஆதல் எனக் காட்டினராதலின், தொண்டர்கள், தங்களுக்குள்ளே குலநலம் ஆராயார்கள் என்பது பெறப்

பட்டது. இவ்வுண்மையினை, இராமாநந்தர் சாதனையிற் கொண்டுவந்தாராதலின் முஸ்லிம்கள், பெண்கள், தீண்டாதோர் என்று இத்தகையோர்கள் அவருடைய சீடர்களாகி மதபோதனை செய்யும் ஆசிரியர்களு மானார்கள். தெய்வம் ஒன்றே என்னும் உண்மையினையும் அத்தெய்வமே அனைவர்க்கும் பிறப்பிடம் எனனும் உண்மையினையும் இராமாநந்தர் உணர்ந்தார். ஆதலினாலே மனபதை அனைததினையும் ஒரு பெரிய குடும்பமாகக் கண்டார். அத்தகைய காட்சி சாதிமத பேதங்களை முழுதும் ஒழித்துவிட்டது. ஆண்டவனுடைய திருவடிகளிலே சரண்புகுந்த தொண்டர் தமது பழைய வாழ்ககையினை ஆண்டவனது திருமுன்னிலையிலே இழந்துவிட்டார்; ஆதலினாலே ஒரு புதிய வாழ்ககையினைத் தொடங்கப்பெறுநர் என இராமாநந்தர் கொண்டார. அவருடைய சீடர்களுள்ளே சககிலியராகிய இரவிதாசரும்,இஸ்லாமிய நெசவுகாரராகிய கபீர்தாஸரும் உழவராகிய தன்னரும், நாவிதராகிய சேனரும், பத்மாவதியென்னும் பெண்ணும் சிறப்பெய்தி யிருந்தனர்.

கபீர்தாஸா காலம் கி. பி. 1398-1518 வரை ஆகும். இவர் அதிசயிக்கத்தக்க விதமாக இராமாநந்தருககுச் சீடரானாரென அறிகின்றோம். நெசவுக்காரச் சாதியி லுதித்த ஏழை இஸ்லாமியச் சிறுவராகிய தம்மைப் பிராமண முனிவர் சீடராகக விரும்பாரென வெண்ணிய கபீர், இராமாநந்தர் வழககமாக ஸ்நானம் செய்யச் செல்லுகின்ற படித துறையிலே போய்ப் படுததிருந்தார். சூரியோதயத்திற்கு முன்னே படித்துறைககுச் சென்ற இராமாநந்தர் தமககுச் சீடராகும் பான்மையினராகிய கபீருடைய உடலிலே திருவடியை வைத்தார். இருளாக இருந்தமையினாலே என்ன நிகழ்ந்ததென அறியாது பரபரப்புற்றுத் தமது இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீராமனுடைய திருநாமத்தை இருமுறை உச்சரித்தார். தமது திருவடி தீண்டப்பெற்றோர் யாரெனபதை இராமாநந்தர் அறிந்துகொள்ளுவதற்கு முன்னமே கபீர், 'ராமா, ராமா' எனறு உச்சரித்துககொண்டு அவ்விடத்தை விட்டு ஓடி

விட்டார். இது நிகழ்ந்தபொழுது கபீருக்கு வயது பதின் மூன்று. படித்துறையை நீங்கிய கபீர் இராமாநந்தர் தம்மைச் சீடராக ஏற்றுககொண்டாரென்று ஊரெங்குஞ் சொல்லித் திரிந்தார். இராமாநந்தர் கபீரை அழைப்பித்து வினவுதலும், இராமாநந்தருடைய திருவடிகளின் பரிசமும், அவர் வாயினின்று பரிசுத்தம் பொருந்திய இராம நாமத்தினைப் பெற்றுககொண்டதும் தமக்குச் சிஷ்யத்து வத்தை அளித்தனவெனக் கபீர் விடை பகர்ந்தார். இதனைக் கேட்ட இராமாநந்தர் கபீரை இறுகத்தழுவி ஆசீர் வதித்தார். அதன்பின் கபீர் அப்பெரியாரின் போதனைகளை ஒழுங்காகக் கேட்டு வந்தார். ஆத்மஞானத்தை யடைந்த கபீர் நாடெங்கும் சென்று இஸ்லாமியமதத்திற்கும் இந்து மததிற்கும் இடையேயுள்ள சமரசத்தினைப் போதிப்பாராயி ஞர். அவருடைய பாடல்களும் உபதேசங்களும் ஆண்ட வன்பால் உள்ளபடி வேட்கையுடைய மககளுக்குப் பொதுச் சொத்து ஆயின. இந்துக்களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியருடைய தெய்வம் மககத்திலும் இருக்க, அனை வருககும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இத யத்திலுமிருக்கிறதெனக் கபீர் கூறிஞர். இந்த அற்புத வாசகம் கபீரதாஸருடைய போதனைகளின் மூலவாசகம் ஆயிற்று.

இராமாநந்தருடைய சக்கிலியசாதிச் சீடராகிய இரவி தாஸரானவர், கி. பி. 1575 முதல் 1624 வரையும் வாழ்ந்த யாக்கோபு பொஹெமே என்னும் மேஞட்டுச் சக்கிலிய ஞானவானை நிகர்த்தவர். அந்த ஜெர்மனிய ஞானவான உவில்லியம் பிளேக் என்னும் ஆங்கில ஞான வானுககு உண்மை வழியைக் காட்டியவர். மீராபாயென் னும் இராணி, இரவிதாஸருடைய சிஷ்யை என அறிகின் ரேம். இவ்வம்மையாரியற்றிய அழகிய தோத்திரப் பாடல்கள் இந்நாளிலும் வழங்குவன. தெய்விக அனபின் உருககத்தினை அறிந்தோா மாத்திரமே ஆண்டவனை அடை தற்குரியர் என்னும் உண்மையும், மன்பதைக்குத் தொண்டு செய்வதே சமய வாழ்க்கையின் உச்சநிலை யென்பதும்,

இரவிதாஸர் கைக்கொண்ட கொள்கைகளாம். கி. பி. 1544 முதல் 1608 வரையும் இராஜபுத்தான நாட்டிலே வாழ்ந்த தாதர் என்னும் பெரியார் கபீர் உணர்த்திய உண்மைகளைக் கைக்கொண்டு ஒழுகியவர். அவர் இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் தமது சீடராகக் கொண்டார். ஹிந்தி மொழியிலே இராமாயணத்தை எழுதிய ஆசிரியராகிய துளசிதாஸர் 16-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தார். இவர் இராமாநந்தருடைய ஆத்மிக வாழ்க்கையைப் பின்பற்றியவர். சத்தியமும் அன்பும் அறநெறியும் பிதுர்வாக்கிய பரிபாலனமும் நல்லொழுக்கமும் ஒருருவெடுத்தாலனைய சிறப்பு வாய்ந்த இராமசந்திரர் துளஸிதாஸருடைய கதாநாயகனும் இஷ்டதெய்வமுமாக அமைந்திருந்தார். அக்பர் சக்கரவர்த்தியினுடைய சமூகத்திலே துளசிதாஸர் சிறப்பு எய்தினார். ஞானக்கவிஞராகிய சூர்தாஸரும் இக்காலத்திலே வாழ்ந்தார. பக்திபரவசராக இவர எழுதிய பாடல்கள் ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டன. பிருந்தாவனத்திலே ஆடல் புரிந்த தெய்விக கோபாலனிடத்து வைத்த அன்பின்பெருக்கினை அடிப்படையாகக் கொண்டு வல்லபாசாரியார் ஒரு புதிய சம்பிரதாயத்தினை ஏற்படுத்தினார்; இவர் ஒரு தெலுங்கப் பிராமணர். இவர் பிறந்த ஆண்டு கி. பி. 1479 என்பர். கி. பி. 1485 முதல் 1533 வரையும் வாழ்ந்த சைதந்ய தேவர் வங்காள நாட்டின் சமய வாழ்க்கையிலே பெரிய மாறுதலை உண்டாக்கினார். இவர் கயாக்ஷேத்திரத்திலே ஈச்வரமுனி என்னும் வைஷ்ணவப் பெரியார்பாற் சென்று தீக்ஷைபெற்றுப் பக்திமார்க்கநெறி நின்றார். இவர் தென்னாட்டுக்கு யாத்திரை செய்து, ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்ய பரம்பரையினாகளோடு அளவளாவினார். ஆண்டவனுடைய திருநாமங்களை ஒன்றுகூடிப் பாடுகின்ற சங்கீர்த்தன முறையினை இப்பெரியார் வங்காள நாட்டிலே நிறுவினார். உயிருக்கு உறுதி பயக்கும் பக்தியாகிய தீர்த்தத்தினை ஆண்டவனை அவாவிநின்ற மக்கள் பலருக்கு இவா வழங்கினார். பிருந்தாவனத்துத் தெய்விகக் கோபாலனுடைய

பிரியையாகிய ஸ்ரீராதா பிராட்டியாரின் அவதாரமென ஸ்ரீசைதந்யதேவர் தம்மை மதித்திருந்தார்.

மத்தியகால இந்தியாவிலே மகாராஷ்டிரத்தினை அலங்கரித்த பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாற்றினை ஒரு சிறிது உணர்ந்துகொள்ளும் பொருட்டு இந்தியாவின் மேற்றிசையை நோக்குவோமாக: சந்நியாச ஆச்சிரமத்தை விட்டு இல்வாழ்க்கையினுட் புகுந்த விட்பலபண்டிதரின் புதல்வராகிய நிவிர்த்திநாதரானவர், ஹரிகினிநாதருடைய சீடராகப் பதின்மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியிலே வாழ்ந்தார். அங்ஙனமாதலின் அக்காலத்து மகாராஷ்டிர நாட்டின் ஆத்மிக வாழ்க்கை நாத சம்பிரதாயத்தோடு தொடர்புடையதெனக் காணுகின்றோம். நிவிர்த்திநாதர் தமது சகோதரராகிய ஞானதேவருக்குக் குருவானார். ஞானதேவர் மிக்க கீர்த்தி வாய்ந்த ஞான நூல் ஆசிரியராவார். துனனகாரர் வீட்டிலே பிறந்த நாமதேவர் என்னும் பெரியார் ஞானதேவரோடு ஒத்த காலத்தினர். மகாராஷ்டிர தேசத்துப் பெரியார்களுடைய பக்தியானது, பண்டரிபுர க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் விட்டலபாண்டுரங்கர் என்னும் திரு நாமத்தினையுடைய பகவான்பாற் சென்றது. பாரததேசத்தின் வைஷ்ணவசமயமானது பிராமணர் முதலிய உயர்குலத்தாரிடையும் செறிந்திருந்ததெனினும், அது தாழ்ந்த குலத்தாரிடையேதான மிகவும் பெருக்கமாகப் பரவியிருந்தது. நாமதேவர், துககாராமரைப்போல் ஞானக்கண்ணுடையோராய் உண்மைச் சமயவுணர்ச்சியுடையோராய் வாழ்ந்த நான்காம் குலத்தவரே எனினும் அந்நாட்டிலே அக்காலத்திலே ஞானாசிரியராக இவர் விளங்கினாரென்றும் அன்னார் ஸம்ஸ்கிருதம் கற்றுவல்ல பண்டிதரலலர் என்றும் அறிகின்றோம். இவ்விஷயத்தில் பாரதநாட்டு வைஷ்ணவ சமயம், இராமாநந்தருடைய சிஷ்யரின் சமயநெறிபோல்வது என ஸர். ஆர். ஜி. பண்டார்க்கர் கூறுகிறார். கி. பி. 1607 முதல் 1649 வரையும் வாழ்ந்த துக்காராமர் என்னும் ஞானக் கவிஞருடைய பாடல்கள்

இந்நாளிலும் வழக்கிலிருக்கின்றன. இப் பெரியார் பாரத மன்னனுகிய சிவாஜியின் காலத்தவர். தம்மிடததுச் சீடனுக வரவிரும்பிய சிவாஜியரசனை இராம தாஸரிடத்து அனுப்பியவர். இராமதாஸர் சிவாஜிக்குக் குருவாகிய காரணத்திஞலே அரசியல் விஷயத்திலும் தொடர்புடையவராக இருக்க நேர்ந்தது. ஆத்மிக சேவைக் கும் வாழ்க்கைநலத்திற்கும் தொண்டுபுரியும் மடாலயங்கள் பலவற்றை இராமதாஸர் நாட்டின் பலவிடங்களிலும் நிறு விஞர். அவருடைய இதயம் ஆண்டவன்பால் மாருது நிலைததிருந்தது. 'மரணத்துககு அஞ்சாத மாரதர்களை ஒன்றுகூட்டி மராட்டியருடைய தர்மத்தை வளர்ககவேண் டும்' என இராமதாஸர் தம்மிடம் வந்தோருக்கு உபதேசித் தார்.

சீககியருடைய சமயநூலாகிய, கிரந்தசாஹிப் கி. பி. 1604-ஆம் ஆண்டிலே முதன்முதலில், வகுக்கப்பட்ட தென்பர். மேலே நாம் குறித்த பெரியார்கள் சிலருடைய பாடல்களும் வாய்மொழிகளும், இந்நூலிலே காணப் படுகின்றன. சீக்கிய குருபீடத்தின் ஐந்தாங் குருவாகிய அருச்சுனதேவரால் இந்நூல் வகுககப்பட்டது. சீக்கிய மதஸதாபனஞ்செய்த முதற்குரவராகிய குரு நானக் லாகூாநகரத்திற்கு அணித்தாகிய தல்வந்தி என்னும் இடத்திலே 1469-ஆம் ஆண்டு அவதரித்தார். மேற் றிசைநோககி மககமாநகரம், பக்தாத் நகரம் வரையும் தெற்குநோக்கி இலங்கைத் தீவுவரையும் இவர் யாத்திரை செய்தார், இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரேதன்மையாக இவர்மீது அன்பு பாராட்டிஞாகள். இடைககால இந்தி யாவின் சமயவளர்ச்சி வரலாற்றிலே சீக்கியமதத்தின் பூர்வவரன்முறை ஒரு சிறந்த பாகமாகும். சீக்கிய குரவர் கள் ஞானவான்களாக இருந்ததோடு காரியநிருவாகத்தி லும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அவாகள் சாதித் தடைகளைத் தகாததெறிந்து தமது சீடரிடையே அநுஷ்டானத்திற சமததுவமுண்டாக்கி அதன் பொருட்டுப் பொதுவாகிய அட்டிற் சாலைகளை அமைத்தும், ஏழைகளை

யும் ஒடுக்கப்பட்டோரையும் பாதுகாத்தலாகிய சமூகத தொண்டினைச் செய்தும் வந்தாரகள். இவ்வளவோடமை யாது தங்களுடைய சீடாகளுககுப் படைக்கலப பயிற்சி யும் அளித்தார்கள். சீக்கியகுரவர்களுடைய வருகையினுலே நாட்டிலே ஒரு புத்துணர்ச்சி யேற்பட்டது. இடைககால இந்தியாவிலிருந்த பெரியோர்கள் இந்துமுஸ்லிம் ஒற்று மையை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார்கள். இத் தொடர்பிலே அகபர்சககரவர்த்தியின் குமாரராகப் பிறந்து பெரிய ஞானவானுகிய தாராஷுககோ என்னும் இளவரசர், இந்துமுஸ்லிம் சீடாகளையுடையவராயிருந்த பிராணநாதர், இந்துக்களாலும் முஸ்லிம்களாலும் உரிமை பாராட்டப் படு கிற நாகூாமீரான எனனும் பெரியோர்கள் ஆகியோர் முக்கியமாகக் குறிக்கப்படத்தக்கவர்கள். இவாகளெல்லாம் 18-ஆம் நூற்ருண்டின் முதற்பகுதியிலே வாழ்ந்தவர்கள்.

யாம் இங்குச் சுருக்கமாக ஆராய்ந்த இடைககால இந்திய சமயவளாச்சியானது சிறந்த ஆற்றல் வாய்ந்திருந் தது. தேசத்தின் சமூக வாழ்க்கையிலே ஒருவித இடையீடு மின்றிப் புதிய மதஙகளும் புதிய வகுப்பினராகிய மககளும் சேர்த்துக்கொள்ளப்பட்டனா. இந்துமதத்தின் தொன்று தொட்டுவந்த வருணங்களுக்குப புறம்பே உள்ளோரும் இந்து தருமததிற்கு உரியோராயினமையின அவ்வறநெறி யானது புதிய ஆற்றலைப் பெற்றது. பகதிப்பிரவாகமானது நாடெஙகும் பரவித் தனக்கென வாழுங் குணத்தினையகற் றிச் சமூக வாழ்க்கையிலே புதிய நம்பிக்கையும் சிரத்தையும் உண்டாகச் செய்து தேசீய உணர்ச்சிக்கு வலிமைதந்தது. இமயம்முதற் கன்னியாகுமரிவரையும் நாடெங்கும் மககளு டைய வாழ்ககையிலே ஒரு புதிய எழுச்சி காணப்பட்டது. வடபாலிலுள்ள ஆரிய நாகரிகம் தென்பாலிலுளள இந்திய நாகரிகத்தோடு ஒனறுகூடியமையினுலே பாரத நாகரிகம் தனிப்பெருந்தலைமை பெற்றுநின்றது. மகாராஷ்டிரமன்ன ருடைய வலிமையும் சீக்கியருடைய படைத்தொழில் அமைப்புகளும், இராமநுஜருடைய விசிஷ்டாதவைத போதனையினுலே தோன்றி நிலைபெற்றன. சங்கராசாரிய

ருடைய அத்வைதபோதனையினாலே ரஜபுத்திரருடைய வீரம் நிலைபேறெய்தியதும் இத்தொடர்பிலே அறிதற்பாலது. ஒவ்வொரு பெரிய இயககமும் சிறந்த பயனை அளித்தபின்னர் வலியிழந்து புதிய ஊற்றுக்களை நாடிநிற்றல் இயல்பு. அன்பு மார்ககமானது இடைவிடாது மனிதனுடைய சிறுமையினை எடுத்துக்காட்டுதலினாலே மனிதருடைய சிந்தையிலே சிரத்தை குன்றச் சமூக வாழ்க்கையிலும் வலிமை குறையும். மேனாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்த புதிய விஞ்ஞான சாஸ்திரமானது ஐரோப்பாவிலும அமெரிக்காவிலும, கிறிஸ்துமதத்தினைக் கலக்கியது. கிறிஸ்து சமயத்தைப போலவே வைஷ்ணவசமயமும் மதஸ்தாபகர்களாகிய பெரியோர்களை அவாவிநிற்கின்ற அன்பு நெறியாகும். விஞ்ஞானநூலின் தாக்கலைத தடுத்து நிற்கும்பொருட்டு இந்துசமயமானது அறிவுத்துறையைச் சிறப்புற வற்புறுத்துதல வேண்டும். எங்ஙனமாயினும் இடைக்கால இந்தியாவில வாழ்ந்த பெரியோா திரட்டிவைதத ஆத்மிகச்செல்வத்தினை இந்நாட்டினர் இழந்துவிடுதல் கூடாது. பழைமையும் புதுமையும் துவைதமும் அதவைதமும் பௌதிக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானககாட்சியும், மேற்றிசையறிவும் கீழ்ததிசைச்சமயமும் மனமொடுங்கிய தியானநிலையும் மன்பதைக்குத் தொண்டு புரிதலும், சமரசப்பட வேண்டிய காலம் இது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வருகையினாலே மேற்கூறிய சமரசநிலை கைகூடியிருக்கிறது. அவருடைய முதற்சீடராகிய சுவாமி விவேகாநந்தர், பிரசங்கங்களினாலும் நூல்களினாலும் தெளிவுறக் காட்டிய வழியினை இந்நாடு கடைப்பிடித்து ஒழுகுமாயின், தானும் விடுதலை பெற்றுப பிறநாட்டினருக்கும ஞான ஒளியைத் தரும்.

முற்றும்.

விபுலாநந்த செல்வம்

விபுலாநந்த இலக்கியத்தின் மூன்றாம் பகுதியாக வெளிவந்துள்ளது **விபுலாநந்த செல்வம்** ஆகும்.

இதனுள் பூஞ்சோலை காவலன், விஞ்ஞான தீபம், ஐயமும் அழகும், வண்ணமும் வடிவமும், நிலவும் பொழிலும், மலையும் கடலும், கவியும் சால்பும், நாடும் நகரமும், ஆங்கிலவாணி என்பன அடிகளாரின் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளன.

லமகள்
ரி மலர் 1983
Regd. No. M. 2748
Supplement to Kalaimagal Dated 1-11-83